# எமிலி ஜோலா

[இரண்டாம் பாகம்]

★

சி. பி. சிற்றரசு...

எம். சுப்ரமணியம்,
திராவிடர் கழகம்,
நெ. 59, ரெட்டித் தெரு,
நெல் ப்பம், தெ. ஆ. ஸ.

★

தமிழ் மன்றம்
தெப்பக்குளம் திருச்சிராப்பள்ளி

**மன்றம் வெளியீடு—14.**

*முதற் பதிப்பு: செப்டம்பர் 1952.*

விலை ரூ. 1—0—0.

*உரிமையுடையது.*

*சிட்டி பிரஸ், மதுரை ரோடு, திருச்சிராப்பள்ளி.*

# எமிலி ஜோலா

## (இரண்டாம் பாகம்)

---

### தீவில்

கடலின் மத்தியிலே கற்பாறை ஒன்றின்மேல் கந்தலாடையோடு, சாயும் தலைக்குத் தன்கைகளை முட்டுக்கொடுத்துக்கொண்டு கண்ணீர் சிந்திய வண்ணம் இருக்கின்றான் டிரைபஸ். கண்ணுக்கெட்டிய தூரம் கடல். அதன்மேல் ஆனந்தமாக ஆரோகணித்துச் செல்லும் அலைகள். அவன் கருத்திலும் சோக அலைகள். ஏன்? அவன் கண்களிலும் கண்ணீர் அலைகள். ஹோ வென்று காற்றின் ஓசை. ஒரு பெரு மூச்சு. "கொடுமை, அநியாயமான பழி, அவமானப் படுத்தப் பட்டேன்." அருமை மனைவி அலைகடலுக்கப்பால். இந்த அபாக்கியன் கடலின் நடுவே ஒரு பயங்கரமான தீவில். அன்று அயலாரோடு அஞ்சாது போரிட்ட அசகாயசூரன் இன்று அந்தகாரம் சூழ்ந்த ஓர் தீவில். துள்ளிய எதிரிகளை வேட்டையாடி நாட்டைக் காத்த வீரன் இன்று தன்னெதிரே துள்ளிக்கொண்டிருக்கும் மீன்களிடம் தன் சோகக் கதையைச் சொல்ல வாயெடுக்கின்றான். சொல்லுமா அவைகள் பதில்? மௌனம் சாதிக்கின்றன. "நான் குற்றவாளியா? நள்ளிரவே! நீயே கூறு." கண் மூடிக்கிடக்கின்றது அந்தக் கருப்பு நிறக் காலம். "நான் குற்றஞ் செய்தேனா? நட்சத்திரங்களே! நீங்களே கூறுங்கள்." உதிரும் நட்சத்திரங்கள் உண்மையைச் சொல்ல வாயெடுக்க வில்லை. கண்களைச் சிமிட்டி மறைகின்றன. இவனைப் பரிகாசம் செய்வதாக

எண்ணி வெட்கப்படுகின்றான். "காற்றே! நீயே கூறு. நான் கடமை தவறியவனா?" ஜோலாவின் முதல் எழுத்தான 'ஜோ' என்று சொல்லுவது போல அடிக்கிறது காற்றும். ஜோலா என்பவன் ஒருவன் இருக்கின்றான் நமக்காகப் போராட என்று டிரைபசுக்கு அங்கே எப்படித் தெரியமுடியும்? "கடலலைகளே! நீங்களே கழறுங்கள். நான் நாட்டைக் காட்டிக் கொடுத்தவனா?" ஒன்றும் தெரியாது என்று சொல்லுவதைப் போல ஒன்றையொன்று நெட்டித் தள்ளிக்கொண்டு ஓடிவிடுகின்றன அலைகளும். "வானகமே! நின்னையே வேண்டுகின்றேன். வையகமே! உன்னையே கெஞ்சுகின்றேன். நான் உண்மையான குற்றவாளியாக இருந்தால் என்னைக் கொன்றுவிடுங்கள். ஆனால் இதைப் போன்ற வஞ்சனை செய்யாதீர்கள், வதைக்கப்படுகின்றேன். ஊரார் பரிகசிக்க ஏன் நான் உயிர் வாழ வேண்டும்? யாருக்காக, எந்த சுகத்துக்காக, எத்தகைய பெருமைக்காக, இனி நான் உயிர் வாழ வேண்டும்? மானமழிக்கப்பட்டேன். சராசரி மனித எண்ணிக்கையிலிருந்தே இந்த மாகடலில் தள்ளப்பட்டு விட்டேன். நான் செய்த குற்றமென்ன? குற்றஞ் செய்யாத எனக்கா இக்கதி? என் பெருமைக்குரிய பிரெஞ்சு தாயகத்தின் உயிரையே என் உயிரென மதித்த எனக்கா இக்கதி?" ஏக்கமான பார்வை; சோர்வுற்ற நிலை. சுழலும் கண்கள். சுற்றும் தலை. தரணி புகழ் வாழ்ந்தவன் இன்று தகாத தீர்ப்பால் துரும்பென அலைமோதுகிறான். எதிரிகளின் பீரங்கிச் சத்தத்துக்கு அஞ்சாத காளை, தன்மேல் சுமத்தப்பட்ட அபாண்ட பழிக்குக் குலை நடுங்கி விட்டான். எந்த இடரையும் மதிக்காது எதிரிகளிடம் போரிட்ட வீரன் இன்று தன் இருதயம் இரண்டாயிரம் துண்டுகளாவதை எண்ணி எண்ணித் தேம்புகிறான். நீதியின் காலடியில்

தன் நெஞ்சத்தை வீழ்த்தினன். "நீதியே! என் உயிர் உனக்கே அடைக்கலம்." பதில் இல்லை. நீதி கிடைத்திருந்தால் அவன் ஏன் அந்த நீலக் கடலின் மத்தியிலே தள்ளப்படுகின்றான். "ஒரு குற்றமும் செய்யாத எனக்கா இத்தண்டனை? நீதிக்காகப் போராடுபவர்கள் இல்லையா? நேர்மையின் சின்னங்களுக்கு நாட்டிலே பஞ்சம் ஏற்பட்டுவிட்டதா? போர்க்களத்தில் என்னைக் கொன்றிருந்தால் பொங்கிப் பூரித்திருப்பேன். இந்தப் பொல்லாப்புக்கு இரையாயிருக்க மாட்டேன். பொறாமைக்காரர்களால் பழிசுமத்தப்பட்டு இந்தப் பூதத்தீவிலே நாளுக்கு நாள் செத்துக்கொண்டிருக்கின்றேன்... என் மங்காத வீரத்தின் ஆணையாகக் கேட்கின்றேன். என் மாசற்ற உள்ளத்தின் உறுதியின் பேரால் கேட்கின்றேன். மனித சமுதாயமே! நீயே மனம் விட்டுச் சொல்லு. களங்கமில்லாத என் சேவையில் ஓர் கருங்கோடு. பொய்யை மெய்யென்றுக்கும் வஞ்சகரை வீழ்த்த ஒரு வீரன் இதுவரை தோன்றவில்லையா? உண்மைக்காகப் பரிந்துபேசும் உத்தமர்களின் பூண்டே அழிந்துவிட்டதா? என்னைக் குற்றவாளியாக்கிய எத்தர்களை எதிர்க்கும் துணிவு கொண்ட தீரன் ஒருவன்கூட இல்லையா? எல்லோருமே அநீதிக்கு மண்டியிட்டுவிட்டனரா? ஒரு உயிர் இல்லையா, எனக்காகப் போரிட, உண்மையை உரைக்க, நீதியை நிலைநாட்ட?

இனவெறி என் தூய்மையை இருட்டடிப்புச் செய்துவிட்டதே. தீனர்களே! தியாகத்தின் சேய்களே! நீதியின் செல்வப் புதல்வர்களே! இந்த நிரபராதியைக் காப்பாற்ற உங்களில் ஒருவருக்குமே துணிவு பிறக்கவில்லையா? கருணையாளர்களே! இந்தக் கைதியின் கண்ணியத்திற்கு இடப்பட்டிருக்கும் விலங்கை உடைத்தெறிய மாட்டீர்களா?"

இப்படிக் கத்திக் கத்திப் பெருமூச்சு வாங்க முகத்தில் அறைந்து கொள்ளுகிருன். இரத்தம் வெளியே தெறித் தோடும் அளவுக்குச் சத்தம் போடுகிருன். வியர்வை அவனுடைய சட்டையைப் பஞ்சு பஞ்சாக்கும் அளவுக்கு பைத்தியம் பிடித்தவன்போல் அலறுகின்றுன். கிழிந்து நார் நாராகத் தொங்கும் சட்டை. உருமாறிப்போன உடல் பாவம்! இவன் ஒரு காலத்தில் இராணுவ உடை தரித்துப் பாரிஸ் பட்டணத்தில் கம்பீரமாகப் பவனி வந்தவன், இன்று ஆயுள் தண்டனை பெற்று அலைகட லின் மத்தியிலே உள்ள டெவில்ஸ் தீவில் திக்கற்று வாடுகின்றுன்.

"நான் செய்த குற்றம் என்ன?" இதே கேள்வி யைத்தான் அவன் தண்டிக்கப்பட்ட அன்று நீதி மன்றத் திலே கேட்டான். இன்றும் அந்த நாதியற்ற தீவிலே யும் கேட்ட வண்ணமிருக்கின்றுன். அக்கிரமக்காரர் களின் இலக்காகி வதைபடுகின்றுன் குற்றமற்றவன். கொடுமை செய்துவிட்டனர் குள்ளமதியினர் என்று ஞாலம் பதில் சொல்லும் என்று சில பல நேரங்களில் நினைக்கின்றுன். ஆனல் அது தீவில், பாரிஸ் நெடுந் தூரத்தில் இருக்கிறது. தீவிலே திக்கற்ற நிலையிலே தீயர்களின் சூழ்ச்சியினுல் தண்டனை பெற்ற டிரைபசுக் காக வாதாட யார் முன்வரப் போகிருர்கள்? இராணுவ ரகசியத்தை வெளியிட்டான் என்ற குற்றம் சாட்டப் பட்டு ஆயுள் தண்டனை தரப்பட்டு அந்தப் பயங்கரத் தீவில் தள்ளப்பட்டிருக்கிருன் டிரைபஸ். அவன் மேல் சுமத்தப்பட்டது அபாண்டமான பழி என்று நிரூபிக்க முடியவில்லை. சட்டத்தின் பற்களிலே வைத்து நசுக்கப் பட்டிருக்கிருன் டிரைபஸ். உண்மைக் குற்றவாளிகள் டிரைபஸைப் பலியிட்டுச் சட்டத்தைச் சரிப்படுத்தி விட்டுத் தங்களைக் காப்பாற்றிக்கொண்டனர். அவன்

திக்கற்றவன், தீவிலே வாடுகிருன். இந்தத் தீயர்கள் தேசத் தலைவர்களெனத் திகழ்கின்றனர்.

இந்த அநீதைக்காக வாதிட யாருமில்லை, மனைவி பாரிஸிலே அழுதுகொண்டிருக்கின்ருள். கணவன் கடலிலே கதறிக் கொண்டிருக்கிருன். அதிகார வர்க்கம் அசட்டுச் சிரிப்பு சிரித்துக்கொண்டிருக்கின்றது. நண்பர்கள் கூறினர். அவன் இராணுவத் தலைவனுக இருந்தபோது, அவனிடம் வேலைபார்த்த போர்வீரர்கள் எல்லாம் அவனுடைய தூய உள்ளத்துக்காகத் துக்கப்பட்டுக்கொண்டிருந்தனர். ஆனுல் அவன் பொருட்டு போரிட ஒரு மாவீரன் தோன்றவில்லை. அவனுக்காகப் போரிட வேண்டுமென்ருல் பலம் பொருந்திய பிரெஞ்சு சர்க்காருடன் போர் என்று பொருள். வஞ்சனையில் கைதேர்ந்தவர்களுடன், புன்னகைப் புலிகளுடன், நயவஞ்சக நரிகளுடன் போர் தொடுக்க வேண்டும்; இராணுவ வர்க்கத்தின் தலைவாசலிலேயே போர்முரசு கொட்ட வேண்டுமென்று பொருள்.

இணையில்லாத வீரம், ஏழைக்காக எதையும் சகித்துக் கொள்ளும் துணிவு, நீள்வையமே எதிர்த்தாலும் அஞ்சாமல் நீதிக்காகப் போராடும் பண்பு இவை வேண்டும். செல்வர்கள் தமது சிறு விரலையும் தூக்கமாட்டார்கள். அவர்களுக்கு இதுவா வேலை? மான்விழி, மதுரமொழி, மதுக்கோப்பை, ஆடும் பாதம், ஆனந்தக் கீதம் இவைகளை ரசித்து லயித்துப் போயிருக்கும் அந்தச் செருக்கர்களுக்கு இந்த டிரைபஸின் விஷயமாகப் போரிடுவதா வேலை?

மேலும் "சட்டப்படி தண்டிக்கப்பட்டிருக்கின்ருன். நீதிப்படி தண்டிக்கப்படவில்லை. நீதிப்படி தண்டிக்கப்பட்டிருந்தால் அதை நினைத்துப் பார்க்க வேண்டிய வேலை

யில்லை. சட்டப்படி, அதுவும் உயர்தர நீதிமன்றத்தாரால், அதிலும் இராணுவ உயர்தர நீதிமன்றத்தாரால் தண்டிக்கப்பட்டிருக்கின்ருன். தான் உண்மையான குற்றவாளி அல்ல என்பதற்குத் தக்க ஆதாரங்கள் காட்டாததால் தண்டிக்கப்பட்டிருக்கின்ருன். வழக்கறிஞர்கள் கேள்வி கேட்க, ஜுரர்கள் ஆழ்ந்து சிந்திக்க, நீதிபதி முடிவுக்குப்பின் தண்டிக்கப்பட்டிருக்கின்ருன். இந்த நிலையில் இவனுக்காக வாதாட யார் முன்வருவார்கள்? இவன் குற்றவாளி என்பதற்குப் போதிய ஆதாரங்களும், சாட்சியங்களும் இருந்ததால்தான் தண்டித்தார்கள்.'' இப்படிப் பேசுகின்றனர் மாளிகை மண்டுகள். அதுவும் இவன் அந்தஸ்து பொருந்திய இராணுவ அதிகாரியாய் வாழ்ந்ததால்தான் இதுவும் பேசப்பட்டது. ஒரு சாதாரண மனிதனுக இருந்திருந்தால் அதைப் பற்றிய பேச்சே எழுந்திருக்காது.

இவன் நன்ருகப் படித்தது குற்றம். நாகரிகமாக வாழ்ந்தது குற்றம். இராணுவத் தலைவனுக இருந்தது குற்றம். நாட்டைப் பலமுறைகளில் காப்பாற்றியது குற்றம். படைகளை நடத்தியது குற்றம். இவைகள் எல்லாவற்றையும்விடப் பெரிய குற்றம், இவன் யூதனுகப் பிறந்ததுதான். அது அன்றைய அரசியல் நிலையில் மன்னிக்க முடியாத ஒரு குற்றம்.

டிரைபஸ் செய்தவை இதைப்போன்ற குற்றங்கள் தாம். இதற்காகத் தண்டிக்கப்பட்டிருக்கின்ருன். இதை இறுமாப்பாளருக்கு இடித்துக் கூற ஒருவன்தான் முன் வந்தான். தன்தலை போகுமே என்று கருதாது துணிந்து முன்வந்தான். எதிர்ப்புச் சக்தியின் தன்மையையும், அளவையும் பொருட்படுத்தாது முன்வந்தான். நீதியை நிலைநாட்ட, கைவிடப்பட்டவனைக் காப்பாற்ற,

ஒரே ஒருவன்தான் முன் வரமுடியும். ஒப்பற்ற உள்ளப் பண்பு படைத்தோர் மந்தையாக இரார். ஒரே ஒருவன் தான். அவன்தான் ஏழைபங்காளன் எமிலி ஜோலா. பிரெஞ்சு நாடு மௌனம் சாதித்தபோது ஜோலா உண்மையை உரைத்தான், 'டிரைபஸ் குற்றமற்றவன்' என்று.

எமிலி ஜோலாவுக்குத் தவிர வேறு யாருக்கும் அந்த உறுதியான உள்ளம் இருக்கமுடியாது. அநீதி பெருநெருப்பெனக் கொழுந்துவிட்டெரியும்போது அதனை அணைக்கத்துணிவது அனைவருக்கும் சாத்திய மான காரியமல்ல. ஜோலாவால் முடியும்; ஜோலா அப்படிப்பட்ட ஆற்றல் படைத்தவன். வழக்காடினன் ஜோலா டிரைபசுக்காக வாழ்க்கை முழுதுமே வறியோருக்காகப் போராடிய வீரன். தனக்காகப் போராடும்படி டிரைபஸ் ஜோலாவைக் கேட்டுக்கொள்ளவில்லை. அவன் (டிரைபஸ்) அநீதிக்காரர்களால் அவதிக்குள்ளானன் என்று அறிந்தான். ஆவேசம் பெற்றான். ஆற்றல் முழுவதையும் செலவிட்டான். நீதி வெளிவந்தது.

## வேண்டுகோள்

## 29-11-1897-ல் பிகாரோ (Figaro) பத்திரிகையில் ஜோலா விடுத்த வேண்டுகோள்

எந்தச் செய்தியையும் ஆழ்ந்து சிந்திப்பதுதான் மனிதனுடைய கடமை. எதிலும் ஒரு அவசர முடிவுக்கு வரக்கூடாது. ஆத்திரத்தின் அடுத்த தம்பி அவசரம். இரண்டும் மூர்க்கத்தனமாக நம்மைத்தாக்க வரும் போது நிதானம் சற்று ஒதுங்கிவிடும். அவை இரண்டும் உடலிலேயே உடன் பிறந்து கொல்லும் வியாதி. ஆகவே எதையும் அலட்சியமாக விட்டுவிடக் கூடாது.

பெரும்பாலும் நியாயம் கிடைக்க வேண்டிய இடத்தில் அது கிடைக்காமல் போவதற்கே மேற்சொன்ன ஆத்திரமும் அவசரமுந்தான் முக்கியமான காரணங்கள்.

டிரைபஸ் குற்றமற்றவன். சூழ்ச்சிக்காரனல்ல. மரியாதைக்குரியவன். இராணுவத் தலைவன். உயர்ந்த அந்தஸ்தில் இருந்தவன். அவன் அநியாயமாகத் தண்டிக்கப்பட்டிருக்கிறன். இதை நிலைநாட்ட நமக்குப் பணமோ, ஆட்களோ, அதிகார உதவியோ, அரசியல் சட்டமோ தேவையில்லை. நியாய சிந்தை ஒன்றினலேயே நாம் இதை நிர்மாணித்து விடமுடியும். நீதி ஒன்றுதான் உயர்ந்தது. எல்லாவற்றிலும் சிலாக்கியமானது. அது ஒன்றுதான் நாட்டின் மதிப்பை உயர்த்த முடியும். அந்த நீதியைச் சரியாகப் பரிபாலிக்காத நாடு வெறுங்காடுதான். அந்தக் காட்டில் தலைவிரித்தாடும் அக்ரமங்களைச் சகித்துக்கொண்டு வாழும் மக்களைக் காட்டுமிராண்டிகள் என்று சொன்னலும் குற்றமாகாது. ஏனெனில் காட்டில் இயற்கையாகவே துர்க்குணம் படைத்திருக்கின்ற மிருகங்களோடு போராட, அவைகளோடு வாழ்ந்து தீரவேண்டிய மனிதர்களும் செயற்கையாகவே துர்க்குணமடைகிறர்கள். ஆனல் நாம் அப்படியில்லை. உடைகள் அழுக்காயிருந்தால்கூட அவற்றை உடுத்திக் கொள்ள நாம் மனம் ஒப்புவதில்லை.

மக்களுக்கு நீதியைப் போதிக்க வேண்டிய சாதனங்களில் மிகமுக்கியமானவை பெரும்பாலும் செய்தித்தாள்கள். அவை ஒருநாட்டின் இன்றியமையாத சக்தி. அவைகளால் எதையும் செய்ய முடியும். நல்லவனைத் துன்மார்க்கன்போல் காட்டவும், துன்மார்க்கனை நல்லவன்போல் காட்டவும் முடியும். அதேபோலத்தான் நன்மையையும் தீமையையும் மாற்றிமாற்றி

அவைகளால் வெளியிட்டுவிடமுடியும். அவைகள் தரும சிந்தையோடு நடு நிலமையிலிருந்து நீதிக்காகப் போராடும் வரையில்தான் நாட்டின் நடவடிக்கைகள் கண்ணாடியில் பார்ப்பதைப் போலத்தெரியும். அவைகள் கொஞ்சம் நிலைதடுமாறி விட்டால் வண்ணந் தீட்டிய கண்ணாடியில் முகம் பார்ப்பதற்கொப்பாக முடியும். ஆனால் சில செய்தித்தாள்கள் விற்பனையை அதிகரிக்கவும், சில போக்கிரிகளிடம் நன்கொடை வாங்கவும் பொய்ச்செய்திகளையே வெளியிடுவதுண்டு. அதே போலத்தான் இன்று நம்நாட்டிலே உள்ள பல செய்தித்தாள்கள் பொய்யைப் பெரிதாக்கி நாட்டின் மதிப்பையே தாழ்த்தி விட்டன.

டிரைபசின் எதிரிகள் பணத்தால் அடிமையாக்கப் பட்டிருக்கின்றார்கள். பேச வாயிருந்தும் பணமென்ற கடிவாளத்தால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றார்கள். நான் இங்கே குறிப்பிடுவது சாதாரண மக்களை மாத்திர மல்ல பெரிய பெரிய பேங்கர்கள் (Bankers) எல்லாம் இந்தச் சதி செய்து எஸ்டெரேஸியைத் (Esterhazy) தூக்கிவிட்டுப் பிரெஞ்சு நாட்டையே கொலை செய்கிறார்கள்.

அநேகமாகப் பணம் பத்து லட்சத்துக்குமேல் செலவிடப்பட்டுப் பிரெஞ்சு நாட்டு மக்கள் சேற்றிலே இழுக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டிருக்கின்றார்கள். ஒரு டிரைபசின் உயிரை வாங்கப் பத்து லட்சம் செலவு! ஏன் இவ்வளவு செய்தார்கள்? யூதர்களை ஒழிக்கவேண்டுமென்ற ஒரேநோக்கந்தான். இது எப்படி சாத்தியமாகும்? ஏன் அந்தக்கொடியவர்கள் அப்படி நினைக்க வேண்டுமென்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? யூத வகுப்பிலே பிறந்த இவ்வளவு பெரிய இராணுவத் தலை

வனை டிரைபஸையே இந்தப் பாடுபடுத்தியவர்கள் நம்மை என்ன செய்வார்களோ என்று பயந்து மற்ற யூதர்களெல்லாம் எங்கேயாவது வெளிநாடுகளுக்கு ஓடிவிடட்டும் என்பதுதான் அவர்களுடைய எண்ணம். ஆனால், அது தவறான கணக்கும் முட்டாள்தனமான கருத்துமாகும் என்பதை நீங்கள் தயவு செய்து கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் ஒரே ஒரு டிரைபஸை ஒழிப்பதன் மூலம் யூதஇனத்தையே தொலைத்துவிட முடியாது. டிரைபசுக்குக் கொஞ்சம் குறைவான உத்தியோகத்தில் 500 யூதர்கள் பட்டாளத்தில் இருக்கின்றார்கள். அவர்களுடைய அதிகப்படியான எண்ணிக்கையை நினைத்து இப்படி பயந்து எழுதுகிறேன் என்று யாரும் கருதக் கூடாது. நீதி டிரைபஸ் பக்கம் இருக்கிறது. அநீதி எஸ்டெரெஸி பக்கம் இருக்கிறது. ஆகவே டிரைபஸ் குற்றமற்றவன்'' என்று உங்களுக்குச் சொல்லுகின்றேன்.

## இயக்கம்

### யூத எதிர்ப்பு இயக்கம் (Anti-Semitism)

டிரைபஸ் அநியாயமான பழி சுமத்தப்பட்டுத் தண்டனை அடைந்ததற்குக் காரணம் அவன் ஒரு யூதனாகப் பிறந்ததுதான் என்ற உண்மையைப் பலவிடங்களிலே சுட்டிக் காட்டியிருக்கிறோம்.

இந்த யூத எதிர்ப்பு இயக்கம் எப்படி யாரால் தோற்றுவிக்கப்பட்டதென்பதை ஆராய்வோம்.

எப்படியோ உள்ளுக்குள்ளேயே புகைந்துகொண்டிருந்த யூத எதிர்ப்பு இயக்கம், 1872-ல் ஒரு அமைப்பு முறையான சங்கமாக மான்ஷியர்ட்டுமண்ட் என்பவன்

தலைமையில் நிர்மாணிக்கப்பட்டது. இந்த இயக்கத்தைப் பரப்புவதற்கு லா ப்ளாரா பரோல் (**La Plara Parole**) என்ற ஒரு பத்திரிகையை ஆரம்பித்தார்கள். இது ஒன்று தான் யூத எதிர்ப்பு உணர்ச்சியை நாடு முழுதிலும் கொண்டுபோய்விட்டு நல்லவர்கள் மனத்தை எல்லாம் கெடுத்துவிட்டது.

இந்தப் பத்திரிகையின் பொருமையில் பலர் சிக்கித் தம் சிந்தையைப் பறிகொடுத்ததற்குக் காரணம் என்னவென்றால், இதன் சதுரங்கத்தில் அகப்பட்ட விஷயங்கள் இரண்டு. ஒன்று:- இந்த இயக்கம் ஆரம்பிக்கும் போது பிரெஞ்சு இராணுவப் படையில் மிகப் பொறுப்பு வாய்ந்த இராணுவ அதிகாரிகள் 500 பேர்கள் யூதர்களாகவே இருந்தார்கள். இரண்டாவது பனமா கால்வாயை வெட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த பனமா கம்பெனியில் நடந்த மோசடி ஒன்று. அந்த மோசடிக்குக் காரணம் மூன்று பொறுப்பு வாய்ந்த உத்தியோகஸ்தர்களான யூதர்கள்தாம் என்று முடிவுகட்டப் பட்டிருந்தது. ஆக இந்த இரண்டு காரணங்களும் இந்த யூத எதிர்ப்பு இயக்கத்தை மின்னல்வேகத்தில் கொண்டுபோய் விட்டுவிட்டன.

அதுவும் டிரைபஸைக் கைதுசெய்யப்பட்டபோது இந்தப் போராட்டம் உச்சநிலையை அடைந்துவிட்டது. ஒரு பெரிய இராணுவத் தலைவனையும், 500 இராணுவ உயர்தர உத்தியோகஸ்தர்களையும் பகைத்துக் கொள்ளுமளவுக்கு விரோதம் வளர்ந்துவிட்ட காரணத்தால் விபரீதம் என்ன விளைந்து விடுமோ என்று நாடு மிக மிகப் பயந்துவிட்டது. பிரெஞ்சுநாடு மாத்திரமல்ல. அகில ஐரோப்பாவையுமே இந்த பயங்கரம் சூழ்ந்து கொண்டது. சாவா, வாழ்வா என்ற பெரும்போராட்

டத்திலே சகல நாடுகளும் திண்டாடின. இதன் காரண மாக ஒரு பயங்கரமான புரட்சியே வந்துவிடும்போல் இருந்தது. சமாதான விரும்பிகள், ஜனநாயகக் குடியரசின் முன்னேற்றத்தில் கவலைகொண்டவர்கள் குலை நடுங்கிவிட்டனர். வரட்டும் யூதர்களை ஒரு கைபார்த்து விடுவதென்று குறுகிய மனத்தினர் கும்மாளமடிக்கின்றனர். இந்த நிலைமையை இப்படியே வளரவிடுவது எரியும் தீயில் எண்ணெயை ஊற்றுவதாகும். ஆகவே ஏதாகிலும் செயதுதீர வேண்டுமென்ற முடிவில் 1892-ம் ஆண்டு, ஏப்ரல் மாதம், 25-ந் தேதி பிரெஞ்சு நாட்டின் பிரதிநிதிகள் சபை கூடி விவாதித்தது. விவாதத்தின் ஒரு தலைப்போக்கைப் பார்த்து உபசபாநாயகர் (Deputy Speaker) மனம் உடைந்துவிட்டார். (அவர் ஒரு யூதர்) ஒரு முடிவில்லாமலே சபை கலைக்கப்பட்டுவிட்டது.

இதைப் போன்ற கண் துடைப்பு வேலையைச் செய்து முடித்துவிட்டார்கள் என்று தெரிந்தவுடனே ஜோலாவுக்கு அடக்க முடியாத ஆத்திரம். நீதி மன்றத்தை மீண்டும் இந்த வழக்கில் பரிசீலனை செய்யும்படித் தூண்ட வேண்டும். இல்லையானால் கிளர்ச்சி செய்யவேண்டும் என்ற முடிவில் ஒரு விறுவிறுப்பான கட்டுரையைத் தீட்டினார்.

## எச்சரிக்கை

### 5—12—1897-ல் பிகாரோ (Figaro) பத்திரிகையில் வெளியாகி இராணுவ நீதி மன்றத்தாரை நடுங்கச்செய்த கட்டுரை

இந்த நீதி மன்றம் நீதியை வழங்கும் என்று எதிர் பார்க்கின்றேன். அது அப்படிச்செய்யத் தவறிவிட்டால் பிரஸ்தாப விஷயத்தில் நான் நேரடியாகக் கலந்து

கொள்ள வேண்டிவரும் என்பதை எச்சரிக்கை செய்கின்றேன்.

இந்தச் சாரமற்ற யூதஎதிர்ப்பு உணர்ச்சி நம்மை ஒரு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னுலே தள்ளிவிடுகிறது. நாகரிக நாடு விரும்பத்தகாத ஒன்று, செல்வர்கள் மாளிகையிலே சேகரிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. விளையாட்டாக ஆரம்பிக்கப்பட்ட இந்த வீண் வேலை வேதனையாக முடியும் என்பதை அறியாத மூடர்களுக்காக நாடு கண்ணீர் சிந்தவேண்டிய நிலை ஏற்படப் போகிறது. மீண்டும் ஓர் மதப்போர் நடைபெற வேண்டுமா? இது மிக மிக மோசமான எண்ணம். நாச வேலை. நல்லவர்கள் மனம் குழம்பும் நரக வேதனை. யாரோ ஒரு முட்டாளின் எண்ணத்தில்தான் இது உதித்திருக்க வேண்டும். சமத்துவமும், சகோதரத்துவமும், சுதந்திரமும் உள்ள இந்த நாட்டில் இத்தகு கேடான எண்ணம் வந்திருக்கக் கூடாது என்று நான் கண்டிக்கிறேன். சுதந்திரத் தந்தை ரூஸோவின் கல்லறை கவலைப்படுகிறது. எப்படியோ வரத்தகாத எண்ணம் வந்துவிட்டது. இதை மேலும் வளரவிடக் கூடாது. நாட்டின்பால் நல்லெண்ணம் கொண்ட நல்லோர்களே! இதற்கு ஆக்கம் அளிக்காதீர்கள். இந்தத் தொத்துநோயைக் கொல்லுங்கள். ஏனென்ருல் இது பல கொடுமைகளைச் செய்து மக்களை விஷக் கடலில் தள்ளியிருக்கிறது என்பதை நாம் மறுக்காமல் ஒப்புக்கொண்டே தீரவேண்டும்.

டிரைபஸைத் தண்டித்ததின் மூலம் நாடு மன்னிக்க முடியாத மகாக் கொடிய குற்றத்தைச் செய்திருக்கிறது என்பதை நினைவுபடுத்துகிறேன். இந்த உதாரணமே, இந்த யூத எதிர்ப்பு எண்ணமே, பிரெஞ்சு நாட்டைப்

படுகுழியில் தள்ளிவிட்டது என்பதற்குப் போதிய சான்ருகும்.

எவ்வளவு யோக்கியனுக இருந்தாலும், எப்பேர்ப் பட்ட திறமையுடையவனுக இருந்தாலும் எவ்வளவு படித்தவனுக இருந்தாலும், எத்தகைய மேதாவிலாசம் பொருந்தியவனுக இருந்தாலும், நாட்டுக்காகக் கேட்டபோது தன்உயிரைக் கொடுக்கத்தயாராகும் வீரனுயிருந்தாலும், எவ்வளவு ரணகளச் சூரனுக இருந் தாலும், எவ்வளவு சட்டநுணுக்கமறிந்தவனுயிருந் தாலும் ஏன் இவ்வளவு தூரம்? ஒரு குற்றமும் செய் யாதவனுகவே இருந்தபோதிலும் கண்டிப்பாகத் தண் டிக்கப்படுவான். யூதனுக இருந்தால் போதும். அவன் ஒரு யூதனுகப் பிறந்து விட்டால் போதும். தண்டனை தானுகவே கிடைத்துவிடும். ஏன்? எதற்காக? எந்த வகையில் அவன் குற்றவாளி? என்று கேட்டால், அவன் யூதன், அதனுல். என்று பதில் கிடைக்கும்.

நாட்டின் சீரழிவுக்கு இது ஒன்று போதாதா? அந்த வகையிலே குற்றஞ் செய்தவன் தான் டிரைபஸ். அது வும் அவனு செய்தான்? அவன் பிறந்ததற்கு அவ னேவா காரணம்? அவனுடைய தாய் தந்தையர்கள். அந்த வகையில் பார்த்தாலும் அவன் யூதனுகப் பிறந்த தற்கு அவன் குற்றவாளி யல்லவே. ஆனுல் டிரைபஸ் தண்டிக்கப் பட்டிருக்கின்ருன்.

நாம் நீதிக்காகப் போராடிக் கொண்டிருக்கின்ருேம். இதே நேரத்தில் யூத எதிர்ப்புச் சக்தி அநீதியை நிலை நாட்டப் பல அக்ரமமான தகவல்களைச் சேகரித்துக் கொண்டிருக்கின்றது. நாம் இதை எப்படியாகிலும் கஷ்டப்பட்டு நிரூபித்துவிட்டால் அவர்களுடைய எண் ணத்தையே ஒரு நொடியில் தகர்த்தெறிந்து விடலாம்.

நீதிக்காக நாம் ஆதாரம் சேர்த்தால் அதை வைத்துக் கொண்டே டிரைபஸின் விடுதலைக்காக மக்கள் சக்தி போராடும்.

## உண்மை குற்றவாளி

ஜோலா பிகாரோ பத்திரிகையில் எழுதிய இந்த இரண்டு கட்டுரைகள் நாட்டைத் திடுக்கிடச் செய்து விட்டன. இராணுவ நீதிமன்றத்தை உலுக்கியது. அதிகாரிகள் வெளியே செல்வதற்கு முடியாமல் அவமானப்பட்டனர். எவ்வளவு ஆதாரங்களைச் சேகரித்திருந்தால், இவ்வளவு பகிரங்கமான கட்டுரையைத் தீட்டியிருப்பான் ஜோலா. அதுவும் ஒரு இராணுவ நீதிமன்றம் அளித்த தீர்ப்பையே எதிர்த்துப் பேசுகின்றான். இதில் ஏதாவது உண்மையிருக்கத்தான் வேண்டும். இல்லையானால் ஒரு சாதாரண மனிதன் வலிமை மிக்க பிரெஞ்சு இராணுவத்தை எதிர்க்க முடியாதே. ஜோலாவுக்கென்ன பைத்தியமா, இந்தத் தீயில் குதித்து விளையாட? இருக்காது, இருக்காது. ஏதோ ஒரு உண்மை அவனிடம் சிக்கியிருக்க வேண்டும். இல்லையானால் இவ்வளவு தைரியமாக எழுதுவானா? இப்படிப் பேசினர் மக்கள். கையுமெய்யுமாகப் பிடிப்பட்ட திருடனைப் போல் திரு திருவென விழித்தனர் இராணுவ நீதிமன்றத்தார். எரிமலை வெடிக்க ஆரம்பித்துவிட்டது என்று திடுக்கிடுகின்றது சர்க்கார். உடனடியாகப் பரிகாரம் தேடவில்லையானால் நாட்டின் பரிபாலனத்தில் மக்களுக்கு நம்பிக்கை கெட்டுவிடும். விபரமறியாதவர்களுக்கு இந்த இரண்டு கட்டுரைகளும் விநோதமாகத் தென்படுகின்றன. நீதிமன்றத்தையே வம்புக்கிழுக்கின்றான் நிகரற்ற பேனா வீரன். என்ன செய்யப் போகின்றது சர்க்கார். என்று பலர் கூர்ந்து கவனித்துக்

கொண்டிருக்கின்றனர். அனைவருடைய கவனத்தையும் அநியாயத் தீர்ப்பளித்த இராணுவ நீதி மன்றத்தின் மேல் திருப்பிவிடப்பட்டிருக்கிறது. உண்மையான குற்றவாளி யார்? எஸ்டெரெஸியா, டிரைபஸா, இதைக் கண்டு பிடித்தாகவேண்டும். இந்தப் பொறுப்பு சர்க்காருக்கு வர வர நெருங்கிக் கொண்டிருக்கின்றது. நீர் பூத்த நெருப்புபோல் இருந்த இந்தச் செய்தி, சாம்பல் அகற்றப்பட்ட நெருப்பெனத் தெரிகிறது.

அவசர அவசரமாகக் கூடுகின்றனர். அதிகாரிகள் குசு குசுவென எதையோ பேசினர். ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர்கள்போல் இருந்த இடத்தைக் காலி செய்தனர். மேஜையின் மேலிருந்த பிராந்திப் புட்டிகள் காலியான பிறகு, ஜோலாவின் எழுத்துக்கள் கிளப்பி விட்டிருக்கும் சூருவளி உண்மையான குற்றவாளியான எஸ்டெரெஸியைக் கைது செய்து விசாரித்துத் தண்டிக்கும் வரை அடங்காது. அதற்காகவாவது எஸ்டெரெஸியைக் கைது செய்து விசாரிப்பதைப்போன்ற நாடகம் நடத்தித்தீர வேண்டும். அப்படிச் செய்யாதவரை எமிலி ஜோலாவின் ஆவேச மிக்க எழுத்தால் ஒன்று திரளும் மனிதசக்தியை அடக்கிவிட முடியாது. அந்த நிலையையுண்டாக்கியிருக்கிறது பிகாரோ பத்திரிகை. பத்திரிகையின் மேல் ஆத்திரம், ஆனல் சட்ட ரீதியாக ஒன்றும் செய்துவிட முடியாது. பத்திரிகைச் சுதந்திரம் அந்த அளவுக்கு மேலோங்கி இருந்தது. ஆகவே எஸ்டெரெஸியை விசாரணை மண்டபத்தில் நிறுத்துவது தவிர வேறு விழியில்லை. ஆகவே அவனைக் கைது செய்ய உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த உத்திரவின்படி எஸ்டரெஸியைக் கைது செய்துகொண்டு போகின்றனர். இதையறிந்த ஜோலா நிச்சயம் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையிலிருந்தான். ஆனல்:—

## இரகசியச் சுற்றறிக்கை

அன்புள்ள ஜுரர்களுக்கு,

எஸ்டரெஸி கைது செய்யப்பட்டிருக்கின்றான். நாளை உங்கள் முன்பாக விசாரணை நடைபெறும். அவனை எப்படியாகிலும் தப்பித்துவிட வேண்டியது நம் அனைவருடைய கடமை என்பதை நான் சொல்லவேண்டியதில்லை. நீங்கள் அவனை மடக்கிப் பல கேள்விகள் கேட்டால் உண்மையை உரைத்துத் தண்டனைக்குள்ளாகி விடுவான். ஆகவே அவன் விஷயத்தில் நீங்கள் அதிக வேகமாகச் செல்லாமல் சைகையாக இருந்துவிட வேண்டுமென்று உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தங்கள்,

| | |
|---|---|
| தலைமை நிலையம் பாரிஸ் | **மான்ஷியர் மெலின்,** பிரதம மந்திரி, பிரான்ஸ். |

இப்படி ஒரு பொறுப்பு வாய்ந்த பிரதம மந்திரியே ஒரு இரகசியச் சுற்றறிக்கையை விட்டு அவன் வழக்கில் அக்கரை செலுத்தாமல் அலட்சியமாக இருந்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கின்றார். நாட்டின் பிரதமர் அவர். அவர் வேண்டுகோளை நிராகரிக்கும் துணிவு வருமா ஜுரர்களுக்கு? ஆகவே எஸ்டரெஸியை விசாரிக்கும்போது அலட்சியமாக இருந்துவிட்டார்கள்.

## விசாரணை நாடகம்

எஸ்டரெஸி நீதி மன்றத்துக்குக் கொண்டு போகப் படுகின்றான். ஆம் இன்று எப்படியும் உண்மை வெளி வந்தே தீரும். இனி தப்புவதற்கு வழியில்லை. இனி யாரும் காப்பாற்ற முன் வரமாட்டார்கள். அப்படி யாராகிலும் துணிந்து முன்னுக்கு வந்தாலும் அவர்கள் தலையும் சேர்ந்து பலியாகும். அவ்வளவு சிக்கலான வழக்கு. நாம் யாரைக் காட்டிக் கொடுக்க முடியும்? அப்படியே காட்டிக்கொடுத்துவிடுவோமானல் யூத எதிர்ப்பு உணர்ச்சி பூண்டோடு அழிவது திண்ணம். ஆகவே அதைச் செய்யக்கூடாது. இப்படி எல்லாம் நினைத்துக் கொண்டு நீதிமன்றம் நோக்கி நடக்கின்றான். விசாரணை ஆரம்பிக்கப்படுகின்றது. ஜுூரர்களுக்கு அது வரை இருந்த சுரு சுருப்புக் காணப்படவில்லை. வழக் கறிஞர்கள் சரமாரியான கேள்விகளைக் கேட்கின்றனர். நீதிபதி அவர்களைத் தடுத்துச் சாமர்த்தியமாக நிறுத்திக் கொள்கின்றார். அவனுக்கு எதிராகச் சாட்சிகள் வரும் போது உண்மை வெளியாய்விடுமோ என்று கலங்கு கின்றான். ஆனல் தான் இராணுவத்தில் பெற்றிருக்கும் அனுபவத்தால் பல முறை சமாளித்துக் கொண்டு உறுதி யாக நிற்கிறான். வேர்த்து உடலெல்லாம் நீராகக் கொட்டுகிறது. "ஏதோ இவனுக்கு உடல் நிலை சரியில்லை போல் இருக்கிறது." என்று நீதிபதி மழுப்பிவிடுகிறார் ஆமாம் என்று தலையாட்டித் தப்பித்துக் கொண்டு தன் தப்பை இந்த தந்திரத்துக்குள்ளே மறைத்துவிடு கின்றான் இந்தச் சதிகாரன்.. ஜுூரர்களும் ஜாடையாக இருந்துவிடுகின்றனர். இந்த நாடகம் சில மணி நேரம் நடக்கின்றது. வெளியே இதன் முடிவை அறிய ஆயிரக் கணக்கான மக்கள் கூடியிருக்கின்றனர். ஜோலா

பெருமித நம்பிக்கையால் மனப் பூரிப்போடு வீட்டில் இருக்கின்றான். நீதி மன்றத்தின் நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டு வந்து தனக்குச் சொல்ல தன் நண்பன் செஸானேயை அனுப்பிவிட்டு அவன் வரவுக்காக ஆவலோடு தெருவுக்கும் வீட்டுக்கும் திரிந்து கொண்டிருக்கின்றான்.

கண்டிப்பாக எஸ்டரெஸிக்குத் தண்டனைக் கிடைத்துவிடும். இப்படி பேசுகின்றனர் மக்கள். காரசாரமான விவாதம் நடைபெறுகிறது. உண்மை வெளிவந்தே தீரும் எஸ்டரெஸி குற்றமற்றவன். அந்தப் பாபி ஜோலா டிரைபஸ் குடும்பத்தாரிடம் லஞ்சம் வாங்கிக் கொண்டு இப்படிக் கண்டபடி பத்திரிகையிலே எழுதி இவனைப் பங்கப்படுத்திவிட்டான். இப்படிப் பேசுகின்றனர், யூத எதிர்ப்பு இயக்கத்தார். ஜோலா வாங்கிய லஞ்சத்தில் பத்திரிகை ஆசிரியனுக்கும் பாதி பங்கிருக்கும் என்று பேசுகின்றனர் அந்தப் பொல்லாத இயக்கத்திலே இருந்த சில போக்கிரிகள்.

## சிரித்த முகம்

எஸ்டரெஸி சிரித்த முகத்தோடு நீதி மன்றத்திலிருந்து வெளியே வருகின்றான். விடுதலை "குற்றமற்றவன் என்று கோர்ட்டாரால் தீர்ப்புக் கிடைத்துவிட்டது. டிரைபஸ் ஒழிந்தவன் ஒழிந்தவன்தான். இது ஒன்றுதான் பெரிய கண் உறுத்தலாக இருந்தது ஜோலாவுக்கும் சில யூதப் பேய்களுக்கும் அதையும் நீதி தவறாமல் செய்து முடித்துவிட்டார்கள். "நீதி மன்றத்தாரால் மூக்கறுபட்டான் ஜோலா, மூலையிலே தள்ளப்படுவான் பிகாரோ பத்திரிகையின் ஆசிரியன்" இப்படி எக்காளமிடுகின்றனர் பிரெஞ்சு நாட்டுக்குப் புதை குழி வெட்டிக் கொண்டிருக்கும் வெட்டியான்கள்.

செஸானே ஓடுகின்ருன் தன் நண்பன் ஜோலாவின் வீட்டை நோக்கி. ஆவலோடு எதிர்ப்பார்க்கின்ருன் ஜோலா.

செஸானே : ஜோலா !

ஜோலா . செஸானே !

செஸானே : ஜோலா !

ஜோலா : செஸானே ஏன் நெஞ்சடைத்துவிட்டது. எதற்காக இப்படி ஓடி வருகின்ருய்? என்ன நடந்தது? முடிவென்ன?

செஸா : கைவிடப்பட்டான் டிரைபஸ். காகிதக் குப்பை போலாய்விட்டன நமது கட்டுரைகள்.

ஜோலா : எஸ்டரெஸி! .... ....

செஸா : விடுதலையடைந்து விட்டான்.

ஜோலா : குற்றமற்றவனென்ரு அல்லது மன்னித்தா?

செஸா : குற்றமில்லாதவனென்று,

ஜோலா : என்ன? எஸ்டரெஸி குற்றமற்றவனு? நிலாவை நீல வானம் மறைத்துவிட்டதா? நீதி செத்துவிட்டதா? தர்மசிந்தனையுடையவர்கள் ஒருவர்கூட இல்லையா அந்த நீதிக் குழுவில்? தீரவிசாரித்தனரா? திக்பிரமை கொண்டுவிட்டனரா? இராணுவத்தை எதிர்த்து ரண களத்தில் சாவானேன் என்று நடுங்கிவிட்டனரா? கோபுரம் போல் உயர்ந்திருக்கும் கொடுமையைக் கண்டுகொள்ள முடியாத குருடர்களாய் விட்டனரா? மறச் சிந்தையை மண்ணுக்கி விட்டனரா? அந்த கோர உருவம்

படைத்த எஸ்டெரெஸியைப் பார்த்துக் குலை நடுங்கி விட்டனரா? என் நாடு சாகத் துணிந்துவிட்டது. அதைக் காப்பாற்ற நான் சாவேன். ஆனால் என் நாட்டை நான் செத்த பிறகும் சாக விடமாட்டேன். பாபம்! சட்டம் பசி பொறுக்க முடியாத குழந்தையாய் விட்டது. அழைப்பவர்கள் கைகளி லெல்லாம் தாவுவதைப் போல் இந்தப் பாவிகளின் கைகளில் தாவிவிட்டது.

செஸா: எல்லாம் நாடகம்.

ஜோலா: ஆம் யூத எதிர்ப்பு நாடகம். முடிந்துவிட்ட தென்கிறாயா செஸானே?

செஸா: அப்படித்தான் நினைக்கின்றேன்.

ஜோலா: பைத்தியக்காரா! முடியவில்லை. இன்னும் ஜோலா முடியவில்லை. இப்போதுதான் நம்பிக்கை பிறந்திருக்கின்றது. இந்த உதவாக்கரை நீதி மன்றம் அளித்த தீர்ப்புதான் முடிவானதென எண்ணுகிறாயா? அது இதைவிட வேறு ஒரு நல்ல தீர்ப்பையளிக்க முடியாது ஏனெனில் அந்த (அ) நீதிக்குழு சர்வமும் யூத எதிர்ப்புமயம். அது கொடுத்த நீதியே உலகத்தின் கடைசீ முடிவல்ல. இனி கேட்க வேண்டியவர்களைக் கேட்போம் கவலைப் படாதே, டிரைபஸின் தூய உள்ளமே நமது போராட்டத்தின் வாளாக இருக்கட்டும். ஆனால், இந்தத் தகாத தீர்ப்பின்மூலம் நமக்குப் பலப் புதிய எதிரிகள் தோன்றுவார்கள்.

செஸா: இனி நம் கட்டுரைகள்.... .... ....?

ஜோலா : பத்திரிகையில் போடமாட்டார்கள் என்கிருய். அவ்வளவுதானே ?

செஸா : ஆமாம்.

ஜோலா : போகட்டும், கையில் காசிருந்தால் துண்டு அறிக்கைகள் வெளியிடுவோம். அதுவும் இல்லையாஞல் கூரைமேல் ஏறிக் கத்துவோம். போ, போ. போய் உன் வேலையைப் பார். இந்த ஜோலா இன்னும் இறந்துவிடவில்லை. இவன் பேஞவின்மை வற்றிவிடவில்லை. உணர்ச்சி குன்றிவிடவில்லை. இவன் உள்ளத்திலிருக்கும் உண்மை வெகுதூரம் ஓடிவிடவில்லை, (என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே கண்கள் சிவந்துவிட்டன.)

செஸானே போராட்டத் தீயில் தீவிரமாகக் குதித்து விட்டேன். என் பெருமை பொருந்திய பிரெஞ்சு நாட்டின் அழிவைத் தடுக்க நான் அழியப் போகின்றேன். என் உயிரிருக்கும்வரை நீதிக்காகப் போரிட்டே தீருவேன்.

## இளமைக்கு வேண்டுகோள்

14—12—1897. துண்டு அறிக்கை.

எழில் திகழும் இளமையே! வருங்கால ஆட்சி பீடமே ! ஏன் வாளாயிருக்கின்ருய் ? போ. விரைந்தோடு. கவலையற்று உறங்கிக் கிடக்கும் அனைவரையும் எழுப்பு. அலங்கோலமாக நடந்துகொண்டிருக்கும் ஆட்சி முறையைத் திருத்து. நீண்ட தூக்கத்திலாழ்ந்து கிடக்கும் உன் தாயகத்தின் கதவுகளைத் தட்டு. அதன் கௌரவத்தைத் திருடிக்கொண்டு ஓடும் திருடர்களைப் பிடி.

இளமையே! நமக்கென்ன என்று இருந்துவிடாதே. வருங்காலம் உன்னுடையது. வையகம் உன் பேராற்றலைக் கேட்கிறது. அதன் வழி முறைகளை நிர்ணயிக்க வேண்டியது நீ. பாசிபடிந்திருக்கும் பிரெஞ்சு நாடென்னும் தடாகத்தில் உன் உணர்ச்சி என்ற கல்லை வீசு. பாசி விலகும். மீண்டும் அது ஒன்று சேராமுன்னம் அதற்கடியில் இருப்பது பளிங்கு நீரா, பல நோய்களுக்குக் காரணமாகும் விஷக் கிருமிகள் நிறைந்த நீரா என்பதைத் தெரிந்துகொள்.

சுடர்விட்டெரிந்த உன், தாயகம் இன்று சோம்பிக் கிடப்பதை எண்ணி நீயும் சோம்பிக் கிடக்காதே. வருங்காலந்தான் நீ. நாட்டை வாழ வைக்க வேண்டியதும் நீதான். நிதானம் இழந்திருக்கும் நீசர்களின் வலையில் அகப்பட்டுத் திண்டாடும் நீதிக்கு வழிகாட்ட வேண்டியது நீ. துன்மார்க்கனுக்குச் சன்மானமும், சன்மார்க்கனுக்குத் துன்மார்க்கத்தனமான தூக்குத் தண்டனையும் அளிப்பது நாட்டுக்கு ஒரு பொழுதும் நன்மை பயக்காது. நாட்டிலுள்ள நல்லோர்கள் மனம் குளிர நீ உனது இளமையை ஈடாக்க வேண்டும். இளமை இன்பம் அனுபவிப்பதற்கு மட்டிலுந்தான் என்றிராதே. அது ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலுந்தான். அதுவும் உன் சுயநலம் என்றுதான் இவ்வையகம் பேசும். நாட்டின் துர்ப்பாக்கிய நலிவை நசுக்கத் தூக்கிலே மாண்ட தூய நெஞ்சினரை நினைத்து, அவர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்ற ஆவேசமாய் எழு.

நீ அதைச் செய்ய எண்ணினால் உனக்குச் சன்மானம் கிடைக்கும் என்றெண்ணாதே. பல பக்கங்களிலிருந்து கண்டனக்கணைகள் உன்னைச் சுற்றிலும் தாக்கும். செல்வர்களின் சீற்றம், பிரபுக்களின் பயங்கரம் உன்னைவிடாமல்

தொடரும். இதுதான் இதுவரை உன்போன்ற இளமைக்கு நாடு அளித்த பரிசு. சம்பிரதாயம், சட்டம் என்று எண்ணியதும் அதைத்தான். நான் இளைஞனாக இருந்தபோது எனக்குக் கிடைத்த வெகுமதி கண்டனமும், கேலியும் கிண்டலுந்தான். அதனுல் நான் கலங்கவில்லை. இந்தக் கொடுமைகளை மூர்க்கத்தனமாக எதிர்ப்பதின் மூலந்தான் ஒரு உண்மை பிறக்க முடியும்.

இதைப்போன்ற சோதனைக் காலங்களில் தான் அநீதி தலைதூக்கி ஆர்பாட்டம் செய்ய முன்னே ஓடி வரும், அதைத் தடுக்க வயோதிகர்கள் முன் வரமாட்டார்கள். உன்போன்ற இளமைதான் முன் வரவேண்டும் வயோதிகன் தேய்பிறை. இளமையே! நீ வளர்பிறை. வான்ம் உன் ஒளியை நாளுக்கு நாள் அதிகமாக எதிர்பார்க்கிறது. ஆகவே உன் அறிவாற்றலைப் பயன்படுத்தி ஆபத்தைக் களைந்தெறிய முன்னே வா. துடுக்கர்களின் துஷ்டத்தனத்தால் துடித்துக்கொண்டிருக்கும் உன் தாய்த்திரு நாட்டைக் காப்பாற்ற ஜெயபேரிகை கொட்டி சமர்க்களத்தில் குதி.

எதற்கும் அஞ்சாத இளமையே! இரும்புக் கோட்டையை, எஃகுக் குன்றத்தை, இடம்பர்களின் நெஞ்சத்தை உன்னுல்தான் பொடிப் பொடியாக்க முடியும். உன்னிடம் பலவற்றை எதிர்பார்த்து நிற்கிறது நாடு. அதில் ஒன்று, தலைசிறந்ததும் நீதியை நிலைநாட்ட வல்லதோர் சாதனை. அது உன்னிடம் நிச்சயம் இருக்கிறது. கொடுவாளின் பாரம் அதன் காம்புக்கல்ல. தூக்கும் கைகளுக்குத்தான். அதேபோல் உன் பேராற்றலை உன் உடல் அறியாது. இந்த நாடு அறியும். உன்னைப்போல், நானும் ஒரு காலத்தில் இருந்ததால் நானும் நன்ருக அறிவேன். ஆகவே அழைக்கின்றேன்.

குன்று இளமையே! கோபுரம்போல் உயர்ந்திருந்த உன் மணித்திரு நாட்டை மண்மேடாக்கச் சில மடையர்கள் தயாராய் விட்டார்கள். அதன் மரண நாடிகள் அசைவற்றுப் போகாமுன்னம் நீ உனது மரண மூச்சை அதற்குத் தானம் செய்ய வேண்டும். இன்றேல் அது அழிவது திண்ணம்.

வாழ்ந்து வாழ்ந்து சலித்துப் போன வயோதிகர்களை நம்பாதே. அவர்கள் செய்த குற்றத்தால் வந்தவினை தான் இது. எதற்கும் யோசிக்கும் நிதான சிந்தையுடையவர்கள். இதில் யோசிப்பதற்கொன்றுமில்லை. பூத, பௌதீக, விஞ்ஞான தர்க்கரீதியான விஷயங்களல்ல, சில விஷமிகளால் இடப்பட்ட வேதனை வேலியைத் தாண்டிச் செல்ல வேண்டும். காலம் கடத்துதல் சில வற்றில் அபாயமாக முடியும். காலம் கடவாததும் சிலவற்றில் அபாயமாக முடியக்கூடும். பிரஸ்தாப விஷயம் முந்தியதைச் சேர்ந்தது. ஆகவே யாருக்கும் அஞ்சாத இளமையே! எழு, எழு, பழிக்கஞ்சாது சில பாவிகள் செய்யும் பயங்கரச் செயல்களால் நாட்டின் தலைமேல் நாளுக்கு நாள் பாவத்தின் பாரம் அதிகமாய்க் கொண்டிருக்கின்றது. அதைக் கீழே இறக்கும் ஆற்றல், தைரியம், அக்கறை, ஆர்வம், கடமை எல்லாம் உனக்கே உண்டு.

இந்த நாடு அழிந்த பின் நீ எங்கே வாழத் திட்டமிட்டிருக்கின்றாய்? வேற்று நாட்டில் நீ அடிமை. இங்கே சுதந்திர மனிதன் சுதந்திரமாக இருக்க எண்ணமா? அடிமையாக இருக்க ஆசையா? எது உன் முடிவு? முன்னையதானால் முன்னுக்கு வா. எந்த லாபத்தையும் கருதாமல் முன்னே வா. நாடு வேறு, நீ வேறு என்ற வேறுபாடில்லாமல் வெளியே வா. இளமையே!

எதற்கும் அஞ்சாது வீறிட்டு வெளியே வா! சன்மார்க்கம் தழைக்க உன் சாவையாகிலும் காணிக்கையாகத் தா. செத்துக்கொண்டிருக்கும் உன் தாய்நாட்டிற்கு மரண மூச்சளிக்க ரத்ததானம் செய்ய மார்தட்டி முன்னே வா! என்று உன்னை என் மனமார அழைக்கின்றேன்.

மனிதாபிமானி,

ஜோலா.

## சந்திப்பு

ஜோலா தன் அறையில் உட்கார்ந்து ஆவேசமாக எழுதிக்கொண்டிருக்கின்றான். வேலைக்காரன் உள்ளே வந்து, வெளியே ஜோலாவின் பேட்டிக்காகக் காத்துக் கொண்டிருக்கும் டிரைபஸின் சகோதரன் மேத்யூ டிரைபஸ், டிரைபஸின் மனைவி ஆகிய இருவர்களின் பெயர் பொறித்த துண்டுச் சீட்டைக் கொண்டுவந்து கொடுக்கின்றான். உள்ளே அனுமதித்து, அவர்கள் வந்த செய்தியை வினவ, தன் சகோதரன் குற்றமற்றவன் என்று நிரூபிப்பதற்கான பல ஆதாரக் கடிதங்களை ஜோலாவிடம் ஒப்படைக்கின்றார்கள். பலநாள் சிந்தித்த விஞ்ஞானி ஒரு அதிசயப் பொருளைக் கண்டுபிடித்ததைப் போல முகமலர்ச்சி கொள்கின்றான். கிடைத்த ஆதாரங்களால் எப்படியும் டிரைபஸை விடுவிக்க முடியும் என்ற புது நம்பிக்கையைப் பெறுகின்றான். இருட்டில் கிணற்றில் விழப் போனவனுக்கு ஒரு மின்னல் வெளிச்சம் கிடைத்ததைப்போல தனக்குக் கிடைத்த ஒரு சில ஆதாரங்களைக் கொண்டே நாட்டையும், நீதியையும், டிரைபஸையும் காப்பாற்றிவிட முடியும் என்று திடமாக நம்பினான். அந்த ஒரு அசையாத நம்பிக்கையால் டிரைபஸின் மனைவிக்கு அளவற்ற ஆறுதல் கூறினான்.

அவர்கள் இவனை வழக்கறிஞரைப்போல் எண்ணினர். இவன் அவர்கள் பக்கம் வாதாட வலியவே முன்வந்தான். எந்தவிதமான கைம்மாறும் கருதாது முன் வந்தான்.

சரி, நீங்கள் போகலாம், என்று வந்தவர்களுக்கு விடைதந்தனுப்பிவிட்டு ஆவேசமாக எழுதுகின்றான். ஓர் இரவு, இரண்டு இரவுகள், மூன்று இரவுகள் முடிய வில்லை. அவன் சிந்தனையிலிருந்து டிரைபஸைக் காப்பாற்ற வேண்டியதற்கான உண்மைகள் மலையுச்சியிலிருந்து அடிவாரம் நோக்கி ஓடிவரும் நீர் அருவிகள் போல், ஓடிவந்து தாளில் கொட்டுகின்றன. உணவு உண்டோமா இல்லையா என்ற நினைவே இல்லாமல் எழுதுகின்றான். மேஜையின்மேல் குடிக்கத் தேநீர், குளிக்கவைத்த நீர், சாப்பாட்டு அறையில் பரிமாறப்பட்டிருக்கும் உணவு, அவ்வளவும் அப்படியே இருக்க எழுதிக்கொண்டிருக்கின்றான். உலக வரலாற்றிலேயே மிகக் கொடுமையாகத் தண்டிக்கப்பட்டவன் அவன் தான் என்று பிரெஞ்சு நாட்டுப் பேரிலக்கிய ஆசிரியர் அனதோல் பிரான்சு ஒருபக்கம் வருந்துகிறார்.

ஜோலா மீண்டும் எழுந்து இங்குமங்கும் திரிந்து கொண்டு தன் கைகளைப் பிசைந்துகொண்டு வெறித்த பார்வையுடன், அநீதிக்கு இடமளிக்க முடியாது என்று மீண்டும் மேஜையிலமர்ந்து பேனாவை எடுத்தான். பிரான்சு முழுதும் டிரைபஸை வெறுக்கிறது. ஆம். அவனுக்காகப் பரிந்து பேசுபவரையும் பகைக்கும். இலக்கிய மன்றம் இடித்துரைக்கும். ஆமாம். ஆனால், அநீதிக்குச் சக்தி அதிகம் இருக்கிறது என்பதற்காக அதன் போக்கில் விட்டுவிடுவதா? அதற்கு அடிபணிவதா? அதற்காக இந்த அறிவு, ஆற்றல், விளக்கத்தைத்

தூண்டினன்? குறிப்புத் தாள்களையும், ஆதாரக் கடிதங்களையும் ஒன்றுசேர்த்தான். களத்திலே புகும் வீரனைன் எழுதினன், எழுதினன், இரவு பகலாக எழுதினன் மேஜை எல்லாம் தாள்கள். ஆவேசம் கொண்டவன் போல் ஜோலா காணப்பட்டான். நீதி தயாராகிவிட்டது

'அரோரி' பத்திரிகைக் கூடத்துக்கு நண்பர்களை வரச்சொல்லிவிட்டு, ஜோலா கிளம்பினன் அவர்களைக் காண. பரட்டைத் தலையுடன், கசங்கிய உடையில் வேகமாகக் கடைவீதியில் ஜோலா சென்றபொழுது கோச்சு வண்டியில் இருந்த நீதிபதிக்கு ஜோலாவின் வேகம் கலக்கத்தை உண்டாக்கிவிட்டது. விலைகூறிக் கொண்டிருந்த கடைக்காரன் ஜோலாவையே பார்த் தான், சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்தவர்கள் ஜோலாவைக் கண்டதும் வாயற்படியில் வந்து நின்றனர். பத்திரிகைக் கூடத்தில் நுழையும்பொழுது அவனல் அழைக்கப்பட்ட அனைவரும் காத்திருந்தனர். எரிமலை வெடிக்கப்போகிறதா — டிரைபஸினுடைய மனைவியின் கண்கள் நம்பிக்கையால் ஒளிவிட்டன. வழக்கறிஞர் லபோரிக்கு ஒவ்வொரு விநாடியும் ஒரு யுகம்போல் தோன்றியது. அனதோல் பிரெஞ்சுக்கு உட்கார முடிய வில்லை. எல்லாருக்கும் வணக்கஞ் செலுத்திவிட்டு ஜோலா தன் கையெழுத்துப் பிரதியைப் புரட்டினன்.

## தலைவருக்கு

புகழ்பெற்ற பிரெஞ்சுத் தாயகத்தின் தனிப்பெருந் தலைவரே! டிரைபஸ் வழக்கு பிரெஞ்சு நீதியின்மீது அழி யாத களங்கத்தை யுண்டாக்கி இருக்கிறது. அதை நீங் கள் துடைத்துத் தீரவேண்டும். உங்கள் ஆட்சி மிக மேன்மையானது. இதுவரை இருந்த தலைவர்களுடைய

ஆட்சியைவிட உங்கள் ஆட்சி நீதியும், நேர்மையும் நிறைந்தது. ஆனால் ஒரே ஒரு மோசடி நடந்திருக்கிறது.

ஜோலா கண்ணாடியைக் கழற்றிக் கண்களைத் துடைத்துக்கொண்டு மேலும் படிக்கிறான். "அது ஒரு தனிப்பட்ட நபருக்கோ, மெச்சத்தகுந்த மேதைகளுக்கோ, தக்காருமிக்காருமில்லாத தலைவர்களுக்கோ ஏற்பட்டிருந்தால் துடைக்கலாம். அல்லது அத்தகையோரை அவ்வித அபவாதத்திலிருந்து எளிதில் காப்பாற்றி விடலாம். ஆனால் இன்று ஏற்பட்டிருக்கும் இந்த இழிவான களங்கம், பெருமை பொருந்திய பிரெஞ்சு பூமிக்கே ஏற்பட்டிருக்கிறது.

பிரான்சு அழகு நகர். பிற நாட்டார் தங்கிப் பூரிப்படைவதற்கேற்ற வளமிக்க பூங்கா. எல்லா வசதிகளும் நிறைந்திருக்கும் எழில்மிக்க நாடு. எனினும் இதில் ஒரு சமுதாயக் கொலை நடந்திருக்கிறது. அதுவும் உங்கள் காலத்தில். பொறாமைப்பட வேண்டியவர்களெல்லாங் கூட போற்றிப்புகழும் தன்மையிலிருந்த நாட்டைப் புதைக்க, அதன் புதல்வர்களே தங்கள் கருணைக் கைகளால் புதைகுழி வெட்டுகின்றார்கள். மன்னாதி மன்னர்களுக்கெல்லாம் மரணத் தீர்ப்பளித்த மண் இன்று சில மடையர்களின் மௌனத்திலே பலியாகும் நிலையிலே இருக்கிறது. இந்த நிலைக்குத் தங்கள் தலைமை இடந்தரக்கூடாது என்பது மாத்திரமல்ல என் எண்ணம். ஆள்வதற்கென்று யார் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நீதியின் நிகரற்ற வாள்முனையிலே ஆட்சி நடைபெற வேண்டும். நீதி தன் வாளையேந்தி அந்தக் கொடியவர்களைத் தேடித் தேடித் திரியக்கூடாது. அந்தக் கொடியவர்கள் தாமாகவே நியாயம் என்ற குருவளியால்

உந்தப்பட்டு நீதிவாளின் கூர்முனையிலே தங்களைப் பலியாக்கிக் கொள்ளவேண்டும்.

தங்களுக்கு மற்றொன்றை நினைவு படுத்துவது உண்மையான குடியரசு வாதியாகிய எனக்கு இந்த நாடு அளித்திருக்கும் சட்ட வரம்பை மீறிவிடாது என்று கருதுகின்றேன்.

தாங்கள் குடியரசுத் தலைவர் மாத்திரமல்ல, முதல் நீதிபதியும் தாங்கள்தான் என்பதை ஏற்கெனவே தாங்கள் அறிந்திருப்பதைக் கொஞ்சம் நினைவு படுத்துவதற்கு இந்த என் வேண்டுகோள் தூண்டுகோலாயிருக்குமென்று எண்ணுகின்றேன். ஆகையால்தான் நான் மாபெரிய பயங்கர நாசவேலைக்குச் சாவு மணி அடிக்க வேண்டுமென்று தங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். எந்த இடத்தில் நியாயம் கிடைக்குமோ, யார் உள்ளத்தில் நீதி குடி கொண்டிருக்கிறதோ அந்த உண்மையான தலைவரைப் பெற்றிருப்பதற்காகப் பெருமிதமும் பூரிப்பும் அடைகிறேன். அத்தகு தலைவரும், அந்தப் பரிபூரண நீதிக்கு உரைவிடமானவரும் தாங்கள் தான் என்பதில் எனக்குக் கிஞ்சித்தும் சந்தேகமில்லை. இவ்வளவு மாபாதகத்தை, பழிக்கஞ்சாத செயலை ஒரே ஒரு தனி மனிதன் துணிந்து செய்திருக்கின்றான். அவன் தான் **கர்னல் பட்டி** என்பவன். குற்றமில்லாத டிரைபஸ் தண்டிக்கப்படும்போது மேற்சொன்ன கர்னல் பட்டி என்பவன் ஒரு சாதாரண மனிதனாயிருந்தான். இன்று அவன் ஓர் கர்னல், அந்த உத்தியோகம் அவனுக்கு எப்படி வழங்கப்பட்டது என்பதைத் தாங்கள் விசாரிக்க வேண்டும். இவன் குற்றம் செய்தானா இல்லையா என்பதை இந்த வழக்கைத் தீர ஆராய்ச்சி செய்வதின் மூலந் தான் கண்டுபிடிக்க முடியும்.

வீரத் தலைவரே! வீடு பற்றி எரிந்துகொண்டிருக்கும் போது விருந்தினர்க்குப் பரிமாறிக்கொண்டிருப்பதைப் போல, நாடு அநியாயமாக நாசப் பாதையை நோக்கி வெகு வேகமாக நடந்து கொண்டிருக்கும்போது இந்த நயவஞ்சகர்கள் நல்லவர்கள்போல் திரிந்துகொண்டிருக் கின்றார்கள். டிரைபஸ் தலைவனாக இருந்தபோது பிரான் சின் இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இரகசியக் கடிதங்களைத் தாங்கள் தாராளமாகக் காணலாம். அவைகளை வெளியேற்றியவன் கர்னல் பட்டிதான் என் பதும், அந்தக் கையெழுத்து டிரைபஸ் என்பவனுடைய தல்ல என்பதையும் என்னால் நிரூபிக்க முடியும். டிரை பஸைச் சிறைச்சாலையில் எழுதும்படி சொல்லி, அவ னுடைய கையெழுத்தும், ரகசியக் கடிதங்களின் கையெழுத்தும் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருப்பதைப் பார்த்து, மற்ற இராணுவத் தலைவர்கள் இதைப் பார்த்து விட்டால் எங்கே டிரைபசுக்கு விடுதலை கிடைத்து விடுமோ என்று பயந்து, இவன் சொல்வதை டிரைபஸ் இரண்டு வரிகள் எழுதிக்கொண்டிருக்கும்போதே அவசர அவசரமாக டிரைபஸ் எழுதியதைக் கலைத்துவிட்டு, இரண்டு கையெழுத்துகளும் ஒன்றாயிருக்கின்றதென்று சூழ்ச்சி செய்தவனும், இந்தக் கர்னல் பட்டிதான் என் பதை என்னால் நிரூபிக்க முடியும்.

நிரபராதி டிரைபஸ் சிறைச்சாலையில் அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கும்போது, திடீரென விழித்து ஏதா வது உளறிக் கொட்டிவிடட்டும் என்று அவன் முகத் தில் பளிச் பளிச் என்று விளக்கை அடித்து அவனை விழிக்கச் செய்து, ஏதாவது சொல்லிவிடுகின்றானா, அதை ஆதாரமாக வைத்துக்கொண்டு டிரைபஸைப் பழிவாங்கி விடலாமா என்று எதிர்பார்த்து அந்தப் பெரிய முயற்சியி லும் ஏமாந்தவன் இதே கர்னல் பட்டிதான்.

பெருமைக்குரிய இராணுவத் தலைவன் டிரைபஸ், ஜெர்மன் பட்டாளங்களை முறியடித்துக்கொண்டு ரண களத்தில் தன் ரத்தத்தைச் சிந்திக்கொண்டிருந்தபோது திடீரென ஒருநாள் அந்த மாவீரன் டிரைபசின் வீட்டைச் சோதனையிட்டவனும் இந்தப் பட்டிதான் என்பதைத் தாங்கள் குறித்துக்கொள்ள வேண்டும்.

தன் சுயநலத்துக்காகவும், தான் சார்ந்திருக்கும் யூத எதிர்ப்பு இயக்கம் உன்னத நிலையை அடையவேண்டும் என்ற குறிக்கோளுக்காகவும் இவ்வளவு பழிகளையும் டிரைபசின் தலைமேல் சுமத்தி அவனைத் தீவுக்கு அனுப்பிவிட்டுத் தானும் தப்பித்துக்கொண்டான். இதை நினைக்கவே வெட்கப்படுகின்றேன். வேதனை என் உள்ளத்தை வேல்போல் குத்துகிறது. நாட்டுக்கு ஏற்பட்ட இந்தப் பெருங்கேட்டை நினைக்க நினைக்க நாணித் தலை குனிகிறேன்.

அடுத்தது அந்தக் கொலைகார எஸ்டரெஸி என்பவனைப்பற்றி ஆராய்வோம். டிரைபஸ் தந்தி கொடுத்ததாகத் தந்தி கொடுத்தவன் அவன்தான். வெட்கம் இல்லாமல் இவனும் ஒரு இராணுவ உயர்தர உத்தியோகஸ்தனாக இருக்கின்றானே என்பதற்காக வேதனைப் படுகின்றேன். இவன்தான் உண்மையான குற்றவாளி என்பதற்கான பல ஆதாரங்களோடு டிரைபஸின் சகோதரன் மேத்யூ டிரைபஸ் முன்வந்திருக்கின்றான். அவன் கொண்டுவந்திருக்கும் ரிக்கார்டுகளைப் பார்க்கும்போது உண்மையான குற்றவாளி எஸ்டரெஸி என்பவன்தான் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. ஆனால் பொய்யனுக்காக ஒரு போலி விசாரணை நடத்தி அந்தப் புரட்டனுக்குப் புனித முத்திரையிட்டு வெளியே அனுப்பிவிட்டார்கள் இராணுவ நீதி மன்றத்தார். ஆகவே மேத்யூ டிரை

பஸ் புணர் விசாரணையை விரும்புகின்றான். அதற்குத் தங்கள் அனுமதியை வேண்டுகின்றான். அண்ணனை மீண்டும் காணவேண்டுமென்ற அவாவால் இந்த மண்ணின் தலைவராகிய தங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகின்றான்.

நான் டிரைபஸின் உயிரைக் கேட்கவில்லை. யாருடைய அபிமானமும் எனக்குக் கிடைக்கவேண்டுமென்று விரும்பவில்லை. நீதி கிடைக்கவேண்டுமென்று என் உயிரின் ஆணையாகத் தங்களை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

குற்றவாளிக்குப் பதில் நிரபராதி தண்டிக்கப்படுவதை நான் ஒருநாளும் ஒப்புக்கொள்ள மாட்டேன். என் போன்றார் இதை அனுமதிக்கவுமாட்டார்கள். அதுவும் தாங்கள் தலைவராக இருக்கும் இந்தச் சமயத்தில் மாத்திரமல்ல, பூகோள அமைப்பில் பிரான்சு நாட்டின் எல்லைக் கோடுகள் இருக்கும் வரையிலுமாத்திரமல்ல, உலகம் உள்ளளவும் இந்த அநீதி நடைபெறக்கூடாது.

இதையெல்லாம் சிந்திக்காமல், தக்க ஆதாரங்களைத் தருவித்துப் பார்க்காமல், தங்களுக்கு இருக்கும் செல்வாக்கால் ஒரு நிரபராதியின்மேல் குற்றம் சுமத்தி, பிரான்சின் மேன்மைக்காகச் செந்நீர் சிந்தியவன் இன்று டெவில்ஸ் தீவிலே கண்ணீர் சிந்த, கைகொட்டிச் சிரித்துக்கொண்டிருக்கும் துரோகிகள்மேல் நான் குற்றஞ் சுமத்துகிறேன்.

## நான் குற்றஞ் சுமத்துகிறேன் (I accuse)

ஜெனரல் ஜோன்ஸ் என்பவன்மேல் குற்றஞ் சுமத்துகிறேன். உண்மை குற்றவாளியான எஸ்டரெஸியை

விசாரிப்பதைப்போல் பாசாங்கு விசாரணை நடத்தி அந்தத் துரோகியை விடுதலை செய்துவிட்ட இரண்டாவது இராணுவ நீதிமன்றத்தின்மீது குற்றம் சுமத்துகிறேன் நான் இந்தப் பிரெஞ்சு நாட்டின்மீது குற்றம் சுமத்துகிறேன்.

இவர்கள் யார் பேரிலும் எனக்குக் குரோதமோ, வஞ்சமோ இல்லை. ஆனால் அவர்கள், வளர்ந்துவரும் சமூகக் குழந்தையின் நெஞ்சை நெறித்துக் கொல்லத் துணியும் கொலைகாரர்கள். ஆகையாலேதான் சமூக வளர்ச்சிக்குண்டான உண்மையையும், நீதியையும், விசுவாசத்தையும் கண்டுபிடிக்க வேண்டுமென்று என் உள்ளம் தூண்டியதால் இதை உங்கள் கவனத்துக்கும் முடிவுக்கும் கொண்டுவந்திருக்கின்றேன்.

ஆகவே எண்ணரிய மக்களை நல்வழிப் படுத்த வகையில்லாது கொலை, கொள்ளை பழி தீர்க்கும் பழக்கம் ஆகிய பல அக்ரமங்களைச் செய்து செய்து பழகிவிட்ட இறந்த காலத்தின் மீது குற்றம் சாட்டுகிறேன்.

வறுமையால் வாடினாலும், பெருமை குன்றினாலும் வளம் வறண்டு போனாலும், நிலமை எப்படித் தலைகீழாக மாறினாலும், நீதியை மாத்திரம் மறக்காமல் இருக்க வேண்டும் என்ற உன்னதமான நோக்கத்தை உயிரோடு புதைத்துவிட்ட புல்லர்களைக் குற்றம் சுமத்துகிறேன்.

குற்றம் சாட்டப்பட்டுப் பூதத் தீவிலே (**Devils Island**) காவலில் வைக்கப்பட்டிருக்கும் இராணுவத் தலைவன் டிரைபஸ் சம்பந்தமாக ஏற்பட்ட இந்த வழக்கின் முடிவு அவனுடைய வாழ்நாளை மாத்திரம் குறி பார்த்திருக்கவில்லை. அல்லது அவனுடைய குடும்பத்

தின் நலிவை மாத்திரம் குறிக்கோளாகக் கொண்டிருக்க வில்லை. நமது நாடு வாழ்வதா, வீழ்வதா என்ற அபாயமான கேள்விக் குறியை எதிர்நோக்கி நின்றுகொண்டிருக்கின்றது. பல வெளிநாட்டு நீதிமான்கள் கேலி செய்யும் அளவுக்கு நிலை தவறி நடந்துகொண்ட நீதிமான்களை நல்வழிபடுத்தவும் இந்த வழக்கின் உண்மையைப் பகிரங்கமாக வெளியே கொண்டுவந்து நிறுத்தி எது சரி என்பதைக் கண்டுபிடிக்கும் மகத்தான தோர் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் பொதுமக்கள் எண்ணிக்கையிலே நானும் ஒருவன் என்ற உரிமையின் பேரால், இந்த நாட்டின் வீழ்ச்சியிலே சந்தோஷப்பட இஷ்டபடாத நான் என் தைரியத்தின் ஆணையாகச் சட்ட வரிகளின் மீது குற்றம் சாட்டுகிறேன்.

ராஜ விசுவாசப் பிரமாணம் செய்து பதவி ஏற்றுக் கொண்டு இதுவரை ஒரு குற்றமும் செய்தறியாத டிரைபஸ், தன் மேல் சுமத்தப்பட்ட குற்றங்களுக்குச் சரியான ஆதாரங்களைத் தயார் செய்வதற்கு நியாயமாக வழங்க வேண்டிய காலத்தையளிக்காமல் கண நேரத்தில் தகாத தீர்ப்பைச் சொல்லி, வஞ்சத்தை முடித்துவிட்டோம் என்று சொல்வதற்குப் பதில், நாகரிகத்தொனியில், 'கடமையை முடித்துவிட்டோம்' என்று உள்ளுக்குள்ளாகவே சிரித்துக் கொண்டிருக்கும் சீலமற்றவர்கள் மீது நான் குற்றம் சுமத்துகிறேன்.

தனிப் பெருந் தலைவரே! அநீதிக்கு நீண்ட நாட்கள் அரசோச்சும் வன்மையில்லை யென்பதும், நீதியை வெல்லும் ஆற்றல் அநீதிக்கு என்றுமே இருந்ததில்லை என்பதும். தெரிந்திருந்தும் தெரியாதவர்களைப் போல் பாசாங்கு செய்யும் பாவிகளனைவரையுமே நான் குற்றம் சுமத்துகிறேன்.

இப்படி நீதியும் அநீதியும் உராய்ந்து உராய்ந்து ஏற்படும் நெருப்பு ஜ்வாலையில் என் உடல் தகிக்கப்பட்டாலும், அதன் பிறகாவது என் சிதைவிலிருந்து நீதி வெளியாகட்டும் என்ற மரண முடிவிலேயே குற்றஞ் சாட்டுகிறேன்.

இந்த வழக்கில் இவ்வளவு பொறுப்பில்லாமல் நடந்து கொண்ட டார்ட் என்பவர் மீது நான் குற்றம் சுமத்துகிறேன். கிடைத்தஉண்மைக் குறிப்புகளை மறைத்ததற்காக யுத்த மந்திரியின் மீது நான் குற்றம் சுமத்துகிறேன். அதே பழித் தொழிலைச் செய்த இராணுவக் குழுவினரையும், உதவிப் படைத் தலைவரையும் நான் அஞ்சாமல் குற்றம் சாட்டுகிறேன். கைதியினிடத்தில் கொடுமை காட்டிய பாரீஸ் சிறைச்சாலை தலைவர் மீது நான் குற்றம்சாட்டுகிறேன். வழக்கில் பொய் சாட்சிகளையும், பொய்க் கையெழுத்துக்களையும் தயார் செய்தவர்கள் மீது நான் குற்றம் சாட்டுகிறேன். பொதுமக்கள் மனத்தை மாற்றும் வகையில் பொய்ப் பிரசாரம் செய்த யுத்த இலாகா முழுவதையுமே நான் குற்றம்சாட்டுகிறேன். வழக்குக்கு ஆதாரமான சாட்சியங்களைத் தண்டிக்கப்படுபவனுல் பரிசீலனையும் சமாதானமும் கூறமுடியாத வகையில் அவசரத்துடன் நீதி வழங்கிய முதல் இராணுவ மன்றத்தின்மீது நான் குற்றம்சாட்டுகிறேன். உண்மையான குற்றவாளியை, 'குற்றமற்றவனென' விடுதலையளித்துப் பெருந் தவறு செய்துவிட்ட இரண்டாவது இராணுவ விசாரணை மன்றத்தின் மீது நான் குற்றம்சாட்டுகிறேன். ஒரு அறுதையின் மீது இல்லாத பழிகளைச் சுமத்தி ஆயுட்காலத் தண்டனையளித்த அனைவர்மீதும் குற்றம் சுமத்துகிறேன்.

இத்தகைய குற்றச்சாட்டுகளைத் தெரிவிப்பதின் மூலம் நான் சட்டத்தை அவமதிப்பதாக எண்ணி

என்னை அவதிக் குள்ளாக்கலாம் என்பது எனக்குத் தெரியும். என்ருலும் கவலையில்லை. நான் நீதிவேண்டுகிறேன். குமுறிக்கொண்டிருந்த எரிமலை வெடித்துவிட்டது. விளக்கமான மறு விசாரணை நடப்பதாக.

## அச்சகத்தின் முன்ஞல்

அரோரி பத்திரிக்கை வெளியாகும் அச்சகத்தின் முன்ஞல் லட்சக்கணக்கான மக்கள். இந்த குற்றச் சாட்டை ஏந்தி வெளிவந்த பத்திரிக்கை இரண்டு மணி நேரத்தில் 3½ லட்சம் பிரதிகள் செலவாய் விட்டன. பிரான்சில் இந்தப் பத்திரிக்கையை ஏந்தாத கைகளே இல்லை. இதே செய்தி எங்கும் பொங்கி வழிந்தோடு கிறது. சர்க்கார் கண்களுக்குச் சிங்கமாகத் தோன்றிஞன் ஜோலா. இராணுவ முகாம் கண்களிலே கனல் பறக்கிறது. பாரீஸ், பிரான்சு, பார் முழுதையுமே இந்தச் செய்தி கவ்விவிட்டது. கைகளை முறித்துக் கொள் கின்றனர். எவ்வளவு ரகசியமாக வைக்கப்பட்டிருந்த செய்தியை இவ்வளவு பகிரங்கமாக்கி விட்டான்! எப்படி முடிந்தது இவஞல்? என்ன இருமாப்பு இந்த எழுத் தாளனுக்கு? எவ்வளவு வல்லமை இவன் பேஞவுக்கு? என்ன நெஞ்சழுத்தம் இந்த ஆசிரியனுக்கு? சும்மா விட்டுவிடக்கூடாது. இராணுவத்தைப் பார்த்துப் பலர் நடுங்க வேண்டியதற்குப் பதிலாக இனி ஏளனமாக சிரிக்க வைத்துவிட்டான். செல்வாக்குப்பெற்ற இராணு வத்தைச் சந்திக்கிழுத்துவிட்டுவிட்டான். கபடத் திரையைக் கிழித்து நம் முகத்தில் கரிபூசிவிட்டான். வரட்டும், வரட்டும் இந்த வழியாகத்தானே வருவான், என்று வஞ்சினம் கூறிக்கொண்டு நிற்கின்றனர், இராணு வத்தாரால் கூலிக்காக அமைக்கப்பட்டிருந்த காலிகள்.

அச்சகத்திலிருந்து திரும்புகிறான் ஜோலா. கற்கள் பறக்கின்றன. ஒரு பக்கம் கொடும்பாவி கட்டி இழுக்கின்றார்கள். மற்றொரு பக்கம் ஜோலா வீழ்க' எனக் கூவுகின்றனர். 'டிரைபஸ் ஒழிக' என்கின்றது மற்றோர் கூட்டம். அவனுடைய வண்டிக்குள் கற்கள் வீசப்பட்டன. செஸானே தடுக்கிறான். அவனும் படுகாயப் படுத்தப்பட்டான். இரத்தக் காயத்துடன் வீட்டிற்குள் நுழைந்தான் ஜோலா, நிச்சயம் நீதி கிடைத்தே வேண்டும் என்ற அசையாத நம்பிக்கையால்.

## ஜோலா கைது

வீட்டில் தயாராகக் காத்துக்கொண்டிருந்த போலீஸ், ஜோலாவைக் கைதியாக்கியது. சில நாட்கள் சிறைச்சாலையிலே வைக்கப்பட்டான். அந்த நேரத்தில் தான் நாட்டுக்கு ஒரு கடிதம் எழுதி அதை அரோரா பத்திரிகையில் வெளியிட்டான்.

## நாட்டுக்குக் கடிதம்.

*6—1—1898* (A Letter to France)

ஓ என் தாயகமே! பெருமை மிக்க பிரெஞ்சு நாடே! உனக்கு நான் விடுக்கும் இந்தப் பகிரங்கச் சவாலுக்கு நான் ஒருவனே பொறுப்பாளி, உன்னிடம் குற்றம் ஏற்படுகிறபோது அதை எடுத்துச் சொல்வதால் நீ வெட்கத்தால் தலைகுனியக்கூடாது. குற்றத்தைக் களைந்து குணத்தைக் காப்பாற்ற நீ தைரியமாக முன்வர வேண்டும். நீ அப்படிச் செய்யாமல், இதைப்பற்றி எடுத்துச் சொல்லும் என்னைக் கோபிப்பதினாலோ, அல்லது யாரோ ஒரு ஏழை சொல்லுகிறான் என்று அலட்சியமாக இருந்து விடுவதினாலோ நீ உன்

கடமையை சரிவர செய்துவிட்டாய் என்று என்னைப் பொறுத்தவரை ஏற்றுக்கொள்ளமாட்டேன். ஏன்? அறிஞர் உலகமும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளாது. நீ இந்த விஷயத்தில் பராமுகமாக இருந்து விட்டால் எல்லாப் பழியும் உன்மேல் விழுந்து விடும் என்பதை நீ தயவுசெய்து உணரவேண்டும். வெறியேறி அலையும் தாயின் மானத்தைக் காக்க விரைந்தோடும் தனயன் போல் உன்னால் எனக்கு எவ்வளவு அவமானம் நேர்ந்தாலும், நீ என்னை ஈன்றதாய் என்ற பரிபூரண அன்பால் வழியும் ஆனந்த கண்ணீரின் சாட்சியாகச் சொல்லுகின்றேன். அவர்கள் உன்னை அவமானப்படுத்துகிறார்கள். நீயும் பலர் வெளியிடும் பொய்ச் செய்திகளை நம்பும் பத்திரிகைகள் போல் நம்பி மோசம் போகிறாய். எப்படி இந்த வஞ்சகர்கள் உன் குழந்தைகளாகப் பிறந்தார்கள் என்று எனக்கே தெரியவில்லை. அன்னையே! உன் அருமை மைந்தர்கள், இந்த ஒரு சில வஞ்சகர்களாலும், பொறாமைக்காரர்களாலும், கொலைகாரர்களாலும் நடத்தப்படுவதை நீ உண்மையாகவே அனுமதிக்கிறாயா? பாவம், அந்தப் பாமர மக்கள் இந்த வஞ்சகர்களின் பின்னால் நின்று சவக்காடு நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலைமையை நீ இப்படியே நீடிக்க விடுவாயானால். டிரைபலை விடுவிக்க மற்றோர் பாஸ்டில் சிறையின் பயங்கரச் சம்பவம் நடந்தே தீரும்.

இந்தத் துர்பார்க்கிய நிலையைக் காண உன்னுடைய அன்பான குழந்தைகள் வெட்கப்படுகின்றார்கள். நான் எல்லாவற்றையும் தைரியமாகச் சொல்லுகிறேன். ஏனென்றால், நான் எல்லாரையும் விட உன்னை அதிகமாக நேசிக்கின்றேன். பாழ்பட இருந்த என் வாழ்வைப்

பண்படுத்தினாய். என் கருத்துக்களுக்கு உன் இலக்கிய மன்றத்தில் இடமளித்தாய். தாயே! நான் ரொட்டித் துண்டுகளுக்காக தெருத்தெருவாகத் திரிந்தபோது இந்த அருமையான பேனாவை என் கையில் கொடுத்தாய். வழுக்கி விழுந்த மங்கை நானாவுக்காக நான் இட்ட கருத்துக்களை அகில உலக இலக்கிய அரியாசனத்தில் அமர்த்தி விட்டாய். இதைவிட ஒரு தாயகம் வேறு என்ன செய்துவிட முடியும்? இனியும் நான் உன்னிடம் எதையும் எதிர்பார்த்து உன்னைத் தொல்லை கொடுக்க மாட்டேன். அவ்வளவு பேராசைக்காரனல்ல நான். ஆனால் இறுதியாக ஒன்றே ஒன்றை எதிர்பார்க்கின்றேன். அதுவும் என் பொருட்டல்ல, உன் பொருட்டு அதுதான் நீதி.

உன்னைத்தட்டி எழுப்புவதால் ஒரு பெரிய ஆபத்து என் பின்னால் இருக்கின்றதென்று எனக்கு நன்றாகத் தெரியும். என்றாலும் நான் தைரியத்தைக் கைவிட்டு கோழையைப் போல் உன்னைக் கைவிட மாட்டேன். ஒவ்வொரு உதயத்திலும் என்னைத் தாக்குவதற்கென்றே நூறு பத்திரிக்கைகள் எழுத்திட்டிகளை ஏந்தி வெளியே வருகின்றன. உன்மேல் நான் கொண்டிருக்கும் பாசத்தால் அவைகளைத் துச்சமென மதிக்கின்றேன்.

அந்த நூறு பத்திரிக்கைகளும், அதைப் படித்துப் பார்க்கும் பாமர மக்களும் டிரைபசின் மரணத்துக்காக அன்றாடம் ஜெபம் செய்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் எண்ணமும் முடிந்து டிரைபசும் மாண்டுவிட்டால், அதுவே அவர்கள் உனக்குச் செய்யும் உதவியும், நன்றி கலந்த வணக்கமும் என்று கருதுகிறார்கள். தர்க்க வாதிகளும் இதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

அருமைத் திருநாடே! இந்தக் கொடுமையை அனுமதித்தால் நீ குற்றவாளி அல்ல என்று உன்னைச் சொல்ல முடியுமா? அல்லது இதில் உனக்குப் பொருப்பில்லை, என்றாவது சொல்லி நீ தப்பித்துக் கொள்ள முடியுமா? நான் இதை உன் மணி வயிற்றில் பிறந்த எல்லோருக்குமே தெரிவிக்கின்றேன். வயோதிகர் முதல் வாலிபர் வரை, சிறையில் வதியும் குற்றவாளிகள் முதல் சிதையில் வேகப்போகும் நிரபராதிகள் வரை. செல்வத்தில் புரளும் சீமான்கள் முதல் சாக்கடையில் புரளும் ஏழைகள் வரை, படித்தவர் முதல் படிக்காதவர் வரை எல்லார்க்கும் சொல்லுகின்றேன். கொடிய எஸ்டரேஸியை விசாரணை மண்டபத்துக்கழைத்து வேடிக்கை நடத்தி வெளியே அனுப்பி விட்டார்கள். உன்னிடமாவது நீதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றேன். நீதி மிக வலிமை வாய்ந்தது. ஆனால் அது ஒடுக்கப்பட்டிருக்கிறது. தடைப்படுத்தப் பட்டிருக்கிறது. அந்த நீதியை துண்டு துண்டாக வெட்டி மண்ணுக்கடியில் பலவிடங்களில் பல துண்டுகளாகப் புதைத்து விட்டாலும் என்றாவது ஓர் நாள் அந்தத் துண்டுகளெல்லாம் பூமிக்கடியிலேயே ஒன்றாகச் சேர்ந்து பூமி வெடித்து வெளிக்கிளம்புகிறபோது, அதனால் ஏற்படுகிற அதிர்ச்சியால் இந்த அயோக்கியர்கள் அனைவரும் மாண்டுவிடுவார்கள். அந்த அதிர்ச்சி, உண்மை விரும்பிகளின் இதயக்கதவுகளைக் கண்டிப்பாகத் திறந்து விட்டு விடும். உன்னையும் எழுப்பி விட்டுவிடும்.

தனிப்பெருந் தாயகமே! நீ இதில் முட்டாளாகக் கூடாது. விழித்தெழு. இனி நீ நின்று கொண்டே தூங்கும் பழக்கத்தைத் தயவு செய்து விட்டுவிடு.

உன் மகன்,

**ஜோலா.**

## நீதிமன்றம்

குற்றக்கூண்டில் ஜோலா நிறுத்தப்பட்டிருக்கின்றுன். டிரைபசுக்காக வாதாடிய ஜோலா இன்று கூண்டில். ஜோலாவுக்காக வாதாட இன்று லபோரி நீதிமன்றத்தில் நிற்கிருர். லபோரி பிரபல வழக்கறிஞர். அவர் ஒருவர் தான் முன்வந்தார் ஜோலாவுக்காக வாதாட.

அரோரி பத்திரிகையிலும், பிகாரோ பத்திரிகையிலும், துண்டுத் தாள்கள் மூலமும் வெளிவந்த கட்டுரைகள் உன்னுடையவைதாஞ என்று வக்கீல் கேட்கின்றுர். 'ஆம்' என்று ஜோலா ஒப்புக்கொண்டு, அதற்காக இராணுவத்தினரால் ஏவப்பட்ட சில காலிகளால் கல்லடிபட்டவனும் நான்தான் என்று முடித்தார்.

பிறகு லபோரி தன் வாதத்தைத் தொடங்கிஞர்.

"கனம் பொருந்திய நீதிபதி அவர்களே! பிரெஞ்சுக் குடியரசின் தலைவர் அவர்களே! ஜூரர்களே! இந்த வழக்கில் ஜோலா குற்றவாளி அல்ல என்பது என் வாதம். ஏனெனில் இவர் தவிர நம் நாடு முழுதுமே டிரைபஸ் குற்றமுள்ளவன் என்கிறது. ஜோலா ஒருவர்தான். "டிரைபஸ் குற்றமற்றவன்" என்கிருர். என்? சில உண்மைகள் அவருக்கு ஆதாரபூர்வமாகத் தெரிந்திருப்பதால். நீதிமன்றத்தில் ஒருவருக்கு அளிக்கப்பட்ட தீர்ப்பின் பேரில் சட்டத்தைக் குற்றம் சொல்ல யாருக்கும் உரிமை இல்லை என்று தெரிந்தும் சொன்னது ஜோலாவின் குற்றம் என்பதுதான் அவர்மேல் சுமத்தப்பட்டிருக்கும் குற்றம்! ஆனுல், "நாட்டின் நடப்பிலே நன்மை தீமைகளைச் சீர்தூக்கிப்பார்த்து எது சரி, எது தவறு என்று சொல்லலாம்," என்று குடியரசு சொல்வதை நீங்கள் மறுத்துவிட முடியாது. பேச, எழுத, அனைவர்க்குமே

சுதந்திரம் உண்டு என்பதை ஒரு இராணுவ மன்றம் அழித்துவிட முடியாது.

லக்ஷோப லட்சம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கூடிய சபையாரால் முடிவு செய்யப்பட்டு எல்லாருக்கும் சமமாகப் பங்கிடப்பட்டிருக்கும் உரிமையை, நாட்டின் பாதுகாப்புக்காக, அதுவும் இராணுவ நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காகவே அமைக்கப்பட்டிருக்கும் இராணுவ நீதிமன்றம் அந்த உரிமையைப் பறித்திருக்கிறது. மேலும் ஜோலா சட்டஞானம் பெருதவரல்ல. சட்டஞானத்தோடு நீதி மன்றத்தில் வழக்காட சன்னதும் பெற்றிருக்கின்றார். பலமுறை நீதிமன்றத்தில் ஜுரியாகவும் இருந்திருக்கின்றார். அவர் எழுத்துக்கள் மிக வல்லமை வாய்ந்தவை என்பதை எஸ்டரெஸியின் விசாரணையே காட்டுகிறது. ஆகவே, ஜோலா தன் கருத்துக்களை வெளியிட்டது எவ்வகையிலும் குற்றமாகாதெனத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

## நீதிமன்றத்தில் ஜோலா

நீதியின் பாதுகாப்பாளரே! குடியரசின் தலைவரே கண்ணியமிக்க ஜுரர்களே!

டிரைபஸ் குற்றமற்றவன் என்பது என் சுயநலத்துக்காகவோ, நீதியறிந்தவர்களின் சுயநலத்துக்காகவோ, அல்லது நீதி ஒன்றிருக்கின்றது. ஆகையால் அதைக் காப்பாற்றக் கடமைப்பட்டவன் நான்தான் என்ற கௌரவத்தாலோ, அல்லது அதை எடுத்துச் சொல்வதின் மூலம் ஏதாவது ஒரு அரசியல் வேட்டை கிடைக்கும் என்ற பேராசையாலோ அல்ல.

மாண்பு மிக்க தலைவரே! நீதி ஒருவனுடைய நிழலில் மறைந்துவிடக் கூடாது. அப்படி அஞ்சி ஓடுகிற

மனப்பான்மை நீதிக்கு இருக்குமானல், அதை நம்பி வாழ்கிற நாடு சிதைந்து சின்னபின்னப்பட்டு சீரழிந்து விடும் என்று நினைத்து நான் மிக மிக அஞ்சியதால் அந்த அறிக்கைகளை வெளியிட்டேன்.

நீதி தவறி நடந்த கிரேக்கத்திலும், அநீதியை அரியாசனமேற்றிய ரோமிலும், வாய்ப் பதட்டமான அலாஸ்காவிலும் தற்பெருமை கொண்டாடிய பிரிட்டனிலும், தருக்கர் உலாவிய அமெரிக்காவிலும் செருக்குடன் நடந்த சீனத்திலும் என்ன நடந்தது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஏன்? நமது நாட்டிலேயே இந்த நூற்றுண்டில் என்ன நடந்தது என்பதை நாம் மறந்துவிடமாட்டோம்.

நீதி எக்காரணத்தாலோ ஒரு சில சுயநலமிகளிடம் அவர்களுடைய அக்ரம ஆர்ப்பாட்டங்களுக்குப் பயந்து ஒரு தூய்மையின் சின்னத்தைச் சரியாக அடையாளந் தெரிந்துகொள்ள முடியாமல் திணறுகிறது. ஆகவே நீதியைத் தலைகுனிய வைத்திருக்கும் அநீதிக்குப் பயந்து அதன் இஷ்டம் போல் வழிவிட்டு நம் போன்ற நீதித் தாகம் கொண்டவர்கள் பேசாமல் இருந்துவிட்டால் அந்த அக்ரமத்துக்கு நமது தாயகம் இரையாய் அகில உலக நீதிச் சிங்காதனத்தின் நிழலிலேகூட நிற்க அருகதையற்றதாகிவிடும்.

ஆகவே நீதியைத் தயவு செய்து வெளியே வரும்படி என் நேசக் கரங்கொண்டு அழைக்கிறேன். அது ஒருவனுடைய தவருன பாதைக்கு நிச்சயமாக இடங் கொடுக்காதென்று உறுதியாக நம்புகிறேன். ஆகவே நியாய சிந்தை ஒன்றினல்தான் பாரபட்சமற்ற விசாரணை ஒன்றினல்தான் இந்த நெருக்கடியைச் சமாளிக்க முடியும்.

நியாயத்தின் சேய்களே! நேர்மையின் பிரதிநிதி களே! தாய் நாட்டைக் காப்பாற்றத் தயை தாட்சண் ணியமில்லாமல் துலாக் கோலைக் கையிலேந்தி நிற்கும் தூய எண்ணத்தின் தூதுவர்களே! டிரைபஸ் குற்றமுடை யவனு என்பதை நீங்களேசொல்லுங்கள். பைத்தியக் காரப் பத்திரிகைகளின் பொய்ச் செய்திகளைப் படித்துச் சொல்லாதீர்கள். உங்கள் பகுத்தறிவைக் கேட்டுச் சொல்லுங்கள். நெருக்கடியான நேரத்தில் நிதானத்தை இழந்துவிடாதீர்கள்.

என்னுடைய நாற்பதாண்டு உழைப்பு, இதுவரை அநீதியைத் தீண்டாத பேனு, என்னுடைய உண்மை யான கருத்துக்களுக்கு அஞ்சாத மகுடமிட்டு வெளி வந்த அரோரி, பிகாரோ பத்திரிகைகள், அந்த வெளி யீட்டுக்காக வெளியே காத்துக்கொண்டிருந்த ஆயிரக் கணக்கான மக்கள் அனைவருடைய ஆணையாகச் சொல் லுகிறேன். டிரைபஸ் குற்றமற்றவன்.

நீதிமான்களே! இறந்த கால நிகழ்ச்சிகளை எண் ணிப் பூரிப்படையாமல், நிகழ்கால என் பிறப்பிடத்தின் தவருன போக்கை நினைத்து நெஞ்சுருகி நீர் மல்கி எதிர் காலத்தின் அபாயத்தைத் தடுக்க நீங்கள் அனைவரும் முன் வந்தால் நான் மிக மிக நன்றியுள்ளவனு யிருப்பேன்.

அல்லது நீங்கள் ஏதாவதொரு சுட்டிக் காட்ட முடியாத காரணத்தால் பயந்துவிடுவீர்களானுல், நாட் டின் பரிபாலனத்தை உயிர்கொடுத்தாயினும் காப்பாற்ற வேண்டும் என்று எண்ணுவதுதான் ஒரு உண்மையான குடியரசுவாதியின் கடமை என்று எண்ணுத பங்காளி கள் என்று முடிவுகட்டி அதற்காகப் பரிதாபப்படுவேன்.

அருமை ஜூரர்களே! உங்கள் காருண்ணிய உள்ளத்தை நான் லஞ்சமாகக் கேட்கவில்லை. கடமையைக் கைவிடாதீர்கள் என்று எச்சரிக்கை செய்கின்றேன். முன்பு எஸ்டரெஸியை விசாரிக்கும் போது நீங்கள் கடமையை மறந்துவிட்டீர்கள் என்பதை இந்தப் பகிரங்க நீதிமன்றத்தில் சொல்லவேண்டி வந்ததற்காக நான் உண்மையாகவே வருந்துகிறேன். ஒரு காலத்தில் ஜூரியாக இருந்த நான், இன்று ஜூரர்களாக வீற்றிருக்கும் உங்கள் மேல் குற்றம் சுமத்த முன்வந்திருக்கின்றேனே என்பதற்காக வெட்கப்படாதீர்கள். காலம் கடந்துவிடவில்லை. இன்னமும் நீதியை நிலைநாட்டி நமது பொன்னாட்டின் பெருமையை நிலைநாட்ட நேரமிருக்கிறது.

உண்மையான குற்றவாளி எஸ்டரெஸியை நீங்கள் விசாரித்ததற்குச் சற்று முன்பு, யுத்த மந்திரி மாண்ஷேர் மெலின் அவர்களிடமிருந்து உங்களுக்கு ஒரு தாக்கீது வந்ததையும், அதில் நீங்களனைவரும் கொடியவன் எஸ்டரெஸியை விடுவிக்கும் விஷயத்தில் அதிகமாக அக்கறை செலுத்த வேண்டுமென்றும், ஆகவே அவன் விஷயமாக ஆழ்ந்து சிந்திக்காமல் சாதாரணமாக இருந்துவிட வேண்டுமென்றும் மேற்சொன்ன யுத்த மந்திரி மெலின் அவர்கள் அனுப்பிய தாக்கீதைப் பார்த்துப் பயந்து சும்மா இருந்துவிட்டீர்கள். எஸ்டரெஸி தான் உண்மையான குற்றவாளி என்பதற்கான பல ஆதாரங்கள் இருந்தும், நீங்களனைவரும் ஒரு யுத்த மந்திரிக்குப் பயந்து, அநியாயத்தின் பலிபீடத்தில் இறந்துவிட்ட சவம்போல் இருந்துவிட்டீர்கள், என்ற இந்த ரகசியத்தைப் பகிரங்க நீதிமன்றத்தில் தைரியமாக வெட்டவெளிச்சமாக்குகின்றேனே என்

பதற்காக வருந்தாதீர்கள். வேதனையால் வெட்கப்படா தீர்கள். நடந்தது நடந்துவிட்டது. இனியாகிலும் நியாயத்தின் பக்கம் உங்கள் காதுகளைத் திருப்புங்கள். யாருக்கும் அஞ்சாமல் வீற்றிருக்க வேண்டிய நீங்கள் சாதாரண கற்சிலைபோல் காட்சியளித்தீர்கள். அதற் காகக் கவலைப்படாதீர்கள். இனியாகிலும் உங்கள் கீர்த்தி, வரலாற்றின் வஞ்சனைவரிகளில் மறைக்கப்படா திருக்குமாக.

அருமை நண்பர்களே! பல நாட்களுக்கு முன்பு பட்டாளத் தலைவர்களின் வன்மையால் புதைக்கப்பட்ட உண்மை எப்படி எனக்குத் தெரிந்துவிட்டது என்ப தையே ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டு ஆற்ற முடியாத கோபத்தால் வீற்றிருக்கின்றீர்கள். ஆறுதல் கொள்ளுங் கள். மனித வர்க்கம் குற்றமுடையதுதான். அதற்காக நான் வருந்தவில்லை. ஆனால் அந்தக் குற்றங்களைத் திருத்தும் பெருமைக்குரிய பீடத்தில் கம்பீரமாக வீற் றிருக்கும் நீங்கள் ஒரு இராணுவ மந்திரியால் சாதாரண மக்களாக்கப்பட்டு விட்டீர்களே என்பதை எண்ணிச் சஞ்சலப்படுகின்றேன். இதோ என்னைப் பாருங்கள். என் கலங்கமற்ற முகத்தைப் பாருங்கள். நீதியின் வெளிச்சத்தில் உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடித்து உங்கள் முன்நிறுத்தி, கண்ணீரும் கம்பலையுமாகக் கட லின் நடுவே கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு கண்ணிய புருஷனை விடுவித்து நாட்டின் கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற நோக்கத்தால் நிற்கும் இந்த ஏழையைப் பாருங்கள்.

உங்களைத் தொல்லை தருவதற்காக என்னைப் பெரி தும் மன்னிக்கவேண்டும். சாட்சிகள் எவ்வளவு பயந்து போனாலும், ஒரு சிறிய சாட்சியத்தைக்கூட விட்டு

விடாமல் சேகரித்திருக்கின்றேன். இதில் நீங்கள் பாரபட்சம் காட்டினுல் நீதி நிச்சயம் வீழ்ந்துவிடும், என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. நான் டிரைபஸை மாத்திரம் காப்பாற்ற முன் வரவில்லை. உங்கள் நற்பெயருக்கு கெடுதல் வரக்கூடாதே என்ற கவலையாலும் முன்வந்திருக்கின்றேன்.

நான் கொடுக்கும் இந்த ஆதாரங்கள் உண்மையைக் கண்டு பிடிக்க உங்களுக்குப் பேராதரவாக இருக்கும். எஸ்டரெஸியைக் காப்பாற்றக் கனத்த குரலோடு முன் வந்த இராணுவ அமைச்சர் மெலின் அவர்கள் நான் இராணுவத்தையே குறைகூறுகிறேன் என்று தவருக நினைத்துக் கொள்ள கூடாது.

பல கொள்கைகள், பல கட்சிகள் அடங்கிய அனைவரையும் தன்னகத்தே கொண்டிருக்கும் தாயகத்தை காப்பாற்ற ரத்தம் சிந்தும் போர் வீரர்கள் அனைவருக்குமே நான் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றேன். ஆனுல், அதே நேரத்தில் அநியாயங்கள் அவர்கள் வைத்திருக்கும் பீரங்கியின் வயிற்றிலேயிருந்தாலும் வெளியே கொண்டுவர தயங்க மாட்டேன் என்பதை இராணுவ அமைச்சர் தோழர் மெலின் அவர்களுக்கு எச்சரிக்கை செய்கின்றேன். இப்படி நான் செய்வதின் மூலம் என்னை நான் காப்பாற்றிக் கொள்கிறேன், என் தாய்நாட்டைக் காப்பாற்றும் பெருமைக்குரிய புதல்வனுகிறேன் என்ற நற்பெயருக்காக அல்ல. தாயகத்தின் தவறைத்திருத்தித் தரணிக்கு அதன் நற்பெயரை காட்ட வேண்டும் என்ற கடமையினுல்தான்.

சரித்திரம் என்ருவது ஓர் நாள் நான் நேர்மையுடையவனு அல்லவா என்பதை நிர்மாணித்தே தீரும். ஆனுல்

குடியரசைக் காப்பாற்ற முதல் பொறுப்பேற்றுக்கொண்டி ருக்கும் பலம் பொருந்திய இராணுவம், குற்றமுள்ள எஸ்டரெஸியைக் காப்பாற்ற முனைந்து, தன் கடமையை அறவே மறந்து, 'எஸ்டரெஸி வாழ்க' 'யூதர்கள் ஒழிக' என்ற எக்காளமிட்டுக் கொண்டிருக்கின்றது. இது நமது நாட்டின் சமாதானத்துக்கு ஒரு நல்ல அறிகுறியா என் பதை எண்ணிப்பாருங்கள்.

எஸ்டரெஸி பின்பற்றுகிற யூத எதிர்ப்பு இயக்கம் வாழவும், டிரைபஸ் பிறந்த இனமான யூத இனம் ஒழிய வும் ஒரு நாட்டின் இராணுவமே சூழ்ச்சி செய்யுமானல் நாடு யாரிடம் பாதுகாப்பைத் தேடுவது. இந்த களங் கத்தை யாரால் எந்த காலத்தில் மாற்றமுடியும். ஆகவே நீதி ஒன்றினுல்தான் இந்த களங்கத்தை மாற்ற முடியும் என்பதை நீங்கள் திடமாக நம்ப வேண்டும்.

டிரைபஸின் சோகம் நிறைந்த வரலாற்றை நீங்கள் அனைவரும் உணர்ந்தவர்களே. நீங்களனைவரும் நீதி யின் இதயங்கள். நீங்கள் இப்போது என்ன சிந்தித்துக் கொண்டிருக்கின்றீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஏனெனில் நானும் ஒரு காலத்தில் ஜுரியாக இருந்த அனுபவத்தால். ஒவ்வொரு மனிதனையும் காப்பாற்ற வேண்டியது உங்களுடைய நீங்காத கடமை. நீங்கள் உங்கள் சொந்த துன்பத்தை எண்ணுவதின் மூலந்தான் பிறருடைய துன்பத்தை அறிய முடியும். ஏனெனில் நீங்களும் மனிதர்கள். ஆகவே இந்த வழக்கை எந்த நுணுக்கமான ஆராய்ச்சியின் மூலம் முடிக்கலாம் என்ற முடிவிலே உட்காருங்கள்.

யாரோ ஒரு அடையாளந் தெரியாத அப்பாவி யூதத்தீவிலே இருக்கின்ருன் என்று அலட்சியமாக

இருந்துவிடாதீர்கள். அவனுக்கு இழைத்திருக்கும் அநீதியை எண்ணி நாடு வேறு பக்கம் திரும்பி கண்ணீர் வடிக்கிறது. உங்கள் இருதயத் தூய்மையாக இந்த வழக்கை ஆராய்ச்சி செய்து பாருங்கள், நாட்டின் உயிரையே அந்த உத்தமனிடத்தில் ஒப்படைத்திருந் தோம். அந்த நம்பிக்கைக்குரியவனைத்தான் இன்று நாயினுங்கேடாய் நடத்திக்கொண்டிருக்கிறோம். காலம் தன் பயங்கரக்கைகளை நீட்டிக்கொண்டிருக்கின்றது. கொடியவர்களை அது கொல்லப்போவது உறுதி. அந்தப் பட்டியலில் நீதிமான்களாகிய நீங்கள் தயவுசெய்து சேராதீர்கள்.

ஆகவே இந்தக் கறைபடிந்த வழக்கில் நல்லதை யும் நேர்மையையும் செய்ய நினையுங்கள். இவ்வளவும் சொன்னதற்காக நீங்கள் என்னைத் தண்டிப்பீர்களாயின் நான் இன்னும் நல்லவனாய்விடுவேன். நான் உங்கள் பார்வைக்குக் கொடியவனாகத் தெரிகின்றேனா? இல்லை. நான் எந்த அரசியல் லாப வேட்டைக்கும் அடிகோலுப வனல்ல. நான் ஒரு சுதந்திர எழுத்தாளன். உண்மை விரும்பி. நாட்டின் நேசன். நல்லவர்க்கு நண்பன். நீதியின் தூதுவன். நேர்மையின் பாதுகாவலன். பொல் லாங்குக்குப் பகைவன். எந்தச் சமூக வாழ்வுக்காக வாழ்வை எவன் ஒப்படைக்கிறானோ, அவன்தான் நான். நான் ஓர் ஏழை. நான் ஓர் இதாலியனல்ல. சில ரிக் கார்டுகளைப் பார்ப்பதற்காக என்னுடைய 52-வது வய தில் இதாலிக்குச் சென்றிருக்கின்றேன். நான் என்னு டைய பாதுகாப்புக்காக உயிர்வாழவில்லை. உங்களை இந்த சிக்கலான மனப் போராட்டத்திலிருந்து விடு விக்க முயற்சி எடுத்துக்கொண்டேன். ஒரு குற்றம் மற்றோர் குற்றத்துக்கு உயிரளித்து ஊக்கிவிட்டுவிடும்.

ஆகவே முதல் குற்றத்தையே தலையிலடித்துவிடவேண்டும். என்னைத் தண்டிக்கலாம். ஆனால் நீதியைத் தேடுங்கள். அது ஒன்றே வரலாற்றில் உயர்வடையும் தன்மையுடையது. அந்த ஒரு பேருதவிக்காக என் உயிரை வேண்டுமானாலும், மங்காத கீர்த்திபெற்ற என் தாயகமாம் பிரெஞ்சு பூமிக்கே காணிக்கையாகத் தயங்காமல் தருகின்றேன். எப்படியும் நீதி வெளிச்சத்திற்கு வர வேண்டும். இருள் போன்ற இருதயம் கொண்டவனர்கள் ஒழிய வேண்டும். அறத்தாலான மாசற்ற கரங்களால் நாட்டின் களங்கம் துடைக்கப்பட வேண்டும்.

தூய எண்ணத்தின் தூதுவர்களே! துணிந்து முன் வாருங்கள். நீதி நிரந்தரமான இடம் பெறாத நிழல் அல்ல. நிச்சயம் அது கிடைத்தேதீருமென்று சொல்லிக்கொண்டு என் விண்ணப்பத்தை இதோடு முடிக்கின்றேன்.

## தீர்ப்பு

ஜூரர்கள் அனைவரும் உள்ளே சென்றார்கள், ஏதோ கலந்து பேசுகின்றவர்கள்போல. நீதிபதியும் உள்ளே சென்றார். சிறிது நேரத்துக்குப் பின்பு அனைவரும் வெளியே வந்து அவரவர்கள் இடங்களில் அமர்ந்தார்கள் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர்கள்போல. ஏற்கனவே முடிவுக்கு வந்த விஷயத்துக்கு ஒரு புது மெருகைக் கொடுத்துவிட்டு கனைத்துக்கொண்டே தீர்ப்பைப் படிக்கின்றார் நீதிபதி.

" இதுவரை ஜோலா சொல்லியவற்றிற்கும், அவருக்காக வாதாடிய வழக்கறிஞர் லபோரி சொல்லியவற்றிற்கும் பிரஸ்தாப வழக்குக்கும் எவ்விதத் தொடர்புமில்லை.

ஜோலாவைக் கைது செய்யும்படி சர்க்கார் உத்திர விட்டது, டிரைபஸ் சம்மந்தமாக அரோரிப் பத்திரிக்கையிலும், பிகாரோ பத்திரிக்கையிலும் கட்டுரைகள் எழுதினார் என்பதற்காகவுமல்ல. அவரால் வெளியிடப்பட்ட கட்டுரைகளின் மூலம் அவர் குற்றவாளி அல்ல என்பதை, குடியரசு சட்டப்படி அவருக்களித்திருக்கும் எழுத்துச் சுதந்திரம் ஊர்ஜிதப்படுத்துகிறது.

ஆனால் ஒரு பலம் பொருந்திய இராணுவ நீதிமன்றம் தீர ஆலோசித்துக் கொடுத்த தீர்ப்பை எதிர்த்து எழுதுவதென்பது யாருக்கும் அளிக்கப்படாத உரிமை.

மேலும் ஜோலா தன் வழக்கைப்பற்றிக் குறிப்பிடும் போது டிரைபஸ் விஷயமாகச் சில ரிக்கார்டுகள் இருப்பதாகச் சொன்னார். மேற்படி ஆதாரங்களுக்கும், ஜோலா கைது செய்யப்பட்டு இன்று விசாரிக்கப்படும் இந்த வழக்குக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. ஒரு தீர்ப்பைத் தகாதென நிரூபிக்க முன் வந்த ஜோலா நியாயமானப் பாதையைவிட்டு விலகி மக்கள் மனதை மாற்றிப் பெருங் கிளர்ச்சிக்கு இடமளித்துவிட்டார் என்பதுதான் இந்த வழக்கின் தலைப்பு. இதனால் நாட்டில் ஏற்பட்ட அமைதி பங்கத்திற்கு ஜோலா தான் நேரடியான பொறுப்பாளி என்று சர்க்கார் அவர்மேல் வழக்குத்தொடுத்தது. மேலும் இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்துப் பேசுவதென்பது வெறும் சாதாரணமான உள்நாட்டு விஷயம் மாத்திரமல்ல என்பதையும் ஜோலா உணர வேண்டும். இராணுவ நீதிமன்றத்தார் தவறு இழைத்து விட்டதாக கருதி அந்தத் தவறு வெளிநாடுகளுக்குத் தெரிந்தால் புகழ்பெற்ற பிரெஞ்சு நாட்டின் கௌரவம் கெட்டுவிடும் என்று நினைக்க எப்படி ஜோலாவுக்கு உரி

மையிருக்கிறதோ, அதேபோல் ஒரு நீதிமன்றத்தின் தீர்ப்பை ஒரு தனி மனிதன் எதிர்த்தான் என்பதை வெளி யுலகம் தெரிந்துகொண்டால் அப்போது பிரெஞ்சு நாட்டின் மேன்மை குன்றிவிடும் என்று நினைக்க இராணுவ நீதிமன்றத்துக்கு உரிமையுண்டு என்பதை ஜோலா மறுப்பதற்கில்லை. ஆகவே ஜோலா வழக்கில் டிரைபஸ் தண்டனையைச் சம்மந்தப்படுத்திப் பேசுவதை இனி நான் அனுமதிக்க முடியாது என்று தீர்ப்பளித்து ஜோலாவுக்கு ஒரு ஆண்டு கடுங்காவல் தண்டனையும், 3000 பிராங்குகள் அபராதமும் விதிக்கின்றேன்.''

தீர்ப்பு வெளியானதுதான் தாமதம், முன்னேற்பாட்டின்படி ஜோலா கையில் விலங்கிடப்பட்டான். கடுங்காவல் தண்டனை அடையச் சிறையிலே தள்ளப்பட்டான். ஒரு மெச்சத்தகுந்த இராணுவத்தலைவன் டெவில்ஸ் தீவில். அவனுக்காக எவ்விதக் கைம்மாறும் கருதாமல் வாதாட முன்வந்த ஒரு பரோபகாரி பாரிஸ் சிறைச்சாலையில். ஆதாரங்கள் கிடைக்காததால் வாதாட முடியாதவன் தீவில். போதிய ஆதாரங்களோடு நீதிமன்றத்தின்மேல் போர் தொடுத்த நிகரற்றப் போர் வீரன் சிறைச்சாலையில். வாள் வீரன் தீவில். பேனா வீரன் கம்பிக்குள்.

சட்டம் ஒரு வெள்ளை நூல். தூய்மையானதுதான் அது. நீதிமன்றம் என்ற சாயப்பட்டறையில் யூத எதிர்ப்பு என்ற சாயம் தோய்க்கப்பட்டிருக்கிறது. சட்டம் அந்த நீதிமான்களை பேசவைக்க முடியாமல் வலி குன்றிவிட்டது. நீதிமான்கள், அவர்கள் நாவசைந்த பக்கமெல்லாம் சட்டத்தைச் சதிராடச் சொன்னார்கள். இருதயம் இருக்கவேண்டிய இடத்தில் இரும்பு இருக்

கிறது. காருண்ணியம் இருக்கவேண்டிய இடத்தில் கற்பாறை இருக்கிறது.

ஆயிரம் பிராங்குகளை லஞ்சமாக வாங்கிக்கொண்டுத் தன் மதிப்புக்குரிய தலைவன் டிரைபஸை குற்றவாளி என்று கூசாமல் கூறிவிட்டான் எஸ்டரெஸி. டிரை பஸின் முகத்தையே கூட பார்க்காமல், அவனுடைய வாரிசுகளிடம் ஒரு காசும் வாங்காமல் அவன் குற்ற மற்றவன் என்று பயப்படாமல் சொன்னான் ஜோலா.

எஸ்டரெஸி இருட்டில் சொன்னான். கயவாளிகள் கூட்டத்தில் கள்ளர்கள் மத்தியிலே சொன்னான். யார் பார்த்துவிடுவார்களோ என்று பயந்து பயந்து சொன் னான். ஜோலா வெளிச்சத்தில் சொன்னான். வரி வரி யாகக் கனல் பறக்கச் சொன்னான். பாரிஸ் அறிய, பிரான்சு நாடு அறிய, பார்முழுதும் அறிய, கோட்டைச் சுவர்மேல் ஏறிக் கோஷமிட்டுச் சொன்னான். குள்ளமதி யினர் உள்ளம் நடுங்கச் சொன்னான். யாருக்கும் அஞ் சாது, எவர் தயவையும் நாடாது சொன்னான். வீணர்கள் வெட்கித் தலைகுனிய வேங்கைபோல் பாய்ந்தான்.

அத்தகு மேதை, எழுத்தின் தந்தை, கருத்தின் எரிமலை இன்று பாரிஸ் நகர இருளடர்ந்த சிறைச்சாலை யிலே. சூழ்ச்சியே உருவெடுத்த எஸ்டரெஸி இராணுவ உடையிலே இன்னும் உயிரோடு நாட்டிலே நடமாடிக் கொண்டிருக்கின்றான். காலத்துக்கு வாயிருந்தால் கசடர் களுக்கு நற்புத்தி புகட்டியிருக்கும். நீதிக்குக் கண்கள் இருந்தால் அந்த நீசர்களுக்கு நேர் வழியைக் காட்டி யிருக்கும். நேர்மைக்கு அறிவிருந்தால் டிரைபஸின் உரிமையை நிலைநாட்டியிருக்கும். இவ்வளவும் யூத எதிர்ப்பு இயக்கத்தின் காலடியில் சரணடைந்துவிட்

டது. காலமே நீ வாழி வாழி என்கின்றனர் கசடர்கள். காலமே! நீ ஒழிக ஒழிக என்கின்றனர் கருணைவான்கள்.

தண்ணீருக்குள் ஊதப்பட்ட காற்று கண்டிப்பாக நீர்க்குமிழியாக நீர் மட்டத்தில் வந்தேதீரும். எப்படியும் நீதியின் சாயலை நாட்டின் பக்கம் திருப்பிவிட்டிருக்கிறோம். கண்டிப்பாக உண்மை வெளிவந்தே தீரும், என்ற முடிவோடு கையில் விலங்கிடப்பட்ட கருணைக் கடல் ஜோலா காராக்கிரகத்தில் நுழைந்துவிட்டான்.

இராணுவ முகாமிலே வெற்றிக் கொண்டாட்டம். எதிரியின் ஈட்டிமுனைக்குக்கூட பலமுறைத் தப்பியிருக்கின்றோம். எனினும் ஜோலாவின் எழுத்து ஈட்டியிலிருந்து தப்பவே முடியவில்லை. அப்பா! ஒழிந்தான் ஜோலா. இனி யாரும் நமக்குப் பகைவர்களாகத்தோன்ற முடியாது என்று எக்காளமிடுகின்றனர் எஸ்டரெஸியும் அவனுடைய நண்பர்களும். யூத எதிர்ப்பு இயக்கச் சங்கக்கட்டிடத்திலே புதுக்கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருக்கின்றது. தோழர்களுக்கெல்லாம் தேநீர் விருந்தளிக்கப்படுகின்றது. இந்தக் கொண்டாட்டம் யூத ஒழிப்புக்காக மட்டிலுமல்ல, ஜோலா சிறை சென்றதற்கும் சேர்த்து.

அந்த மாவீரன் வெளியே இருந்தபோது ஊமைகளைப் போல் மௌனம் சாதித்தவர்கள் இன்று நரிகள் போல் ஊளையிடுகின்றனர். விருந்துண்ட போதையில் வெறியர்கள் வெளியே கிளம்பிவிட்டார்கள். போக்கிரிகள் கூட்டம் ஒன்று அரோரி பத்திரிகை கூடத்தை நோக்கி ஓடுகிறது. அதன் மேல் கற்கள் வீசப்படுகின்றன. கதவுகள் உடைபடுகின்றன. அதன் ஆசிரியன் பைரன் கைது செய்யப்படுகிறான். ஜோலாவை அனுப்பிய

இடத்துக்கு இவனையும் அனுப்பிவிட்டார்கள். எழுத்தாளனும், ஆசிரியனும் சிறையிலே. எத்தர்கள் வெளியிலே. ஒழிந்தது பிரெஞ்சு நாட்டில் இதுவரை நடந்துகொண்டிருந்த அமளி என கைஉதறிக்கொண்டு செல்கின்றனர் சட்ட நிபுணர்கள்.

## சிறையில் செஸானே

சிங்கத்தைக் கூண்டில் அடைத்துவிட்டார்கள். தனது வன்மை மிக்க எழுத்தால் ஜெகத்தை நடுங்க வைத்த வீரவேங்கையை இரும்பு வேலிக்குள் தள்ளிவிட்டார்கள். இடி, மின்னல், மழை எல்லாம் ஒழிந்தது. பாரிஸ் பட்டணத்தில் அமைதி நிலவிவிட்டது என்று இராணுவத்தார் நினைக்கின்றனர். கட்டுரை மூலம் வம்புக்கிழுத்த வம்பன் ஜோலாவை வதைக்கத் திட்டமிட்டுவிட்டோம். இனி பயமில்லை மனமே என வம்பர்கள் மனம் பூரிக்கின்றனர்.

"நம்முடைய பெயரைக் கெடுக்க நமனாய் வந்த ஜோலாவின் பேனாவைச் சுண்டவைத்துவிட்டோம். இனி தகராறுகளே இல்லை. டிரைபஸ் குற்றவாளியோ அல்லது யாரோ? ஒருவாறு முடிந்தது வழக்கு" என்று அமைதிகொள்கிறார் பிரெஞ்சு தாயகத்தின் பெருமை பொருந்திய குடியரசுத் தலைவர்.

இனி மேற்கொண்டு என்ன செய்வது என்பதைப் பற்றி பின் கைகள் கட்டிக்கொண்டு சிறையறையில் இப்படி அப்படியும் திரிந்துகொண்டிருக்கின்றான் ஜோலா. ஒரு மனிதன் இனி என்னதான் செய்ய முடியும்? அறிவாற்றல் அவ்வளவையும் செலவிட்டுப் பார்த்துவிட்டான். அதற்காக இவனுக்குகிடைத்த வெகுமதி இந்தக்

கடுங்காவல். இப்படி மனத்துக்குள் சொல்லிக்கொண்டே திரும்பும்போது எதிரில் செஸானே நிற்கிறன்.

செஸானே: ஜோலா எல்லா ஏற்பாடுகளும் செய்து விட்டேன்.

ஜோலா: ஏன்? என்னைச் சுடுகாட்டுக்குக் கொண்டு செல்லவா?

செஸானே: சே, சே. நீ வெளியேற.

ஜோலா: நானு?

செஸானே: பிறகு நானு?

ஜோலா: கோழைத்தனம்.

செஸானே: எது கோழைத்தனம்? உன் கேள்விகளுக்கெல்லாம் தக்க விடையளிக்க முடியாமல் பயந்து உன்னைச் சிறையிலே தள்ளிவிட்டார்களே அது கோழைத்தனமா? அல்லது கொடுத்த தண்டனையை வீரத்தோடு ஏற்றுச் சிறைக்குள் நுழைந்து விட்டாயே அது கோழைத்தனமா? எது கோழைத் தனம்?

ஜோலா: சரி, வீரத்தோடு உள்ளே வந்த நான் வெளியேற வேண்டுமென்கிறாயே அதை எந்த அகராதியிலே சேர்ப்பது?

செஸானே; உன்னைமாத்திரம் காப்பாற்றிக் கொள்ள நான் உன்னை வெளியேறும்படி சொல்லவில்லையே. நீ எடுத்த காரியத்தை அரைகுறையாக விட்டுவிட்டு இங்கு வந்துவிட்டாயே அதற்காக........

ஜோலா: நான் விட்டு வந்த வேலையை நாடு பார்த்துக் கொள்ளாதா?

செஸானே: நாடுதான் நின்றபடியே தூங்கிக்கொண் டிருக்கின்றதென்று முன்பு பிகாரோவில் எழுதி யிருந்தாயே: அதை இதற்குள் மறந்து விட்டாயா?

ஜோலா: அதற்காக நான் என்ன செய்ய வேண்டும்?

செஸா: நீ வெளியே வர வேண்டும். உன்னை நம்பி இருக்கிற மேத்யூ டிரைபஸ், மேடம் டிரைபஸ் ஆகி யோருக்கு ஆறுதலைத் தந்து, டிரைபசுக்கு நிரந்தர மான விடுதலையைத் தேடித்தர வேண்டும்.

ஜோலா: அந்த நாடகத்தைத்தான் முடித்துவிட்டார் களே.

செஸா: அவர்கள் நாடகத்தைப் பாதியிலே முடித்து விட்டால் நாம் கொட்டகையை விட்டு வெளியே வந்து விடுவதா?

ஜோலா: கொட்டகையிலிருந்து எல்லோரும் எழுந்து போகும்போது.

செஸா: நாமும் எழுந்து சென்றுவிடுவதா? அப்படி எழுந்துச் செல்பவர்கள் எல்லாம் நாடகம் இவ் வளவுதான் என்று எண்ணுபவர்கள். நாடகம் இன்னும் முடியவில்லை என்று நமக்கு நன்ருகத் தெரியுமே. அப்படியிருக்க நாம் ஏன் எழுந்து செல்லவேண்டும்.

ஜோலா: நமக்காகவா நாடகத்தை நடத்துவார்கள்?

செஸா: ஆம். நமக்காகத்தான் இவ்வளவு நேரமாகி லும் நாடகத்தை நடத்தினார்கள். எஸ்டரெஸியை விசாரித்தது, உன்னை விசாரித்தது எல்லாம் உன் பொருட்டு நடத்தப்பட்ட நாடகந்தான். இனி யும் ஏதாவது நாடகத்தில் விடப்பட்ட பகுதி நடை பெற வேண்டுமென்றால் அதுவும் உன் எழுத்துக் களுக்காகத்தான்.

ஜோலா: அந்த மிகுதியான நாடகக் கட்டத்திலும் உண்மை வெளியாகாவிட்டால்?

செஸா: நீ உண்மைக்காகப் போராடுகிறேன் என்று சொல்கிறாயல்லவா?

ஜோலா: ஆமாம்.

செஸா: அப்படியானால், நிச்சயம் உண்மை வெளி வந்தே தீரும். இந்த நாடகத்துக்கு எவ்வளவு பலமான ஒத்திகைகள் நடந்திருந்தாலும் எந்த நடிகனாவது உண்மையை மேடையில் சொல்லிவிடப் போகின்றான். இந்த நாடகத்தைக் கற்பிதம் செய்த எஸ்டரெஸி என்ற போலி நாட்காசிரியன் திரு திரு வென விழிக்கப் போகின்றான். ஆனால் அவ்வளவும் செய்து வைக்க நீ வெளியே இருக்க வேண்டும்.

ஜோலா: இப்போதே, சட்டத்தை மீறினேன் என்று குற்றஞ் சாட்டியிருக்கின்றார்கள். மறுபடியும் சிறையி லிருந்து தப்பிவிட்டேன் என்ற இரண்டாவது குற்ற மும் சேரவேண்டுமா?

செஸா: உடல் ஒருதரம் நனையும்வரைதான் குளிர். பிறகு எத்தனை முழுக்குகள் போட்டாலும் குளிர் தெரியாதே. அதேபோல் ஒரு குற்றத்தைத் தாங்கு

வதுதான் கொஞ்சம் கடினம். அதைத் தாங்கிப் பழகிவிட்டால் பிறகு எத்தனை குற்றங்கள் சுமத்தினால்தான் நமக்கென்ன கவலை? அப்படியே நீ எவ்வளவு குற்றங்கள் செய்தாலும் அவை உன் சுய நலத்துக்காக செய்யப்படுபவையல்லவே. விஷம் மனிதனைக் கொல்லும் என்கிறாய். உண்மைதான். ஒப்புக்கொள்கின்றேன். ஆனால் அதே விஷ மருந்துகள் எவ்வளவோ வியாதிகளையும் குணப்படுத்தியிருக்கின்ற தென்பதையும் நீ மறந்துவிடாதே.

ஜோலா: இல்லை. ஆனால்.............

செஸா: நீட்டாதே ஜோலா, எப்போதும் இந்த **ஆனல்** என்ற வார்த்தையை மாத்திரம் அருகில் சேர்க்காதே. 'சாப்பிடாமல் இருந்துவிடுவேன். **ஆனல்** பசி எடுக்குமே, அவனைக் கொன்று விடுவேன் **ஆனல்** பாபமாயிற்றே, கஷ்டப்பட்டு உழைப்பேன் **ஆனல்** கைகால்கள் நோகுமே, தாராளமாக தருமம் செய்வேன் **ஆனல்** கையில் காசில்லையே, சண்டமாருதமாகப் பேசுவேன் **ஆனல்** சங்கதிகள் கவனம் வரவில்லையே என்று இப்படி இந்த **ஆனல்** என்ற வார்த்தை எதையும் முடிவாகச் சொல்லாமல் இரண்டாங்கெட்டதாக்கி விடும். நம் பகைவனைவிட மிக மோசமான சொல் இந்த் ஆனல்.

ஜோலா: வெளியேறி மாத்திரம் என்ன செய்யப் போகின்றோம். இதுவரை எழுதிய கட்டுரைகளை விட, காட்டிய ஆதாரங்களைவிட, செய்த கிளர்ச்சியைவிட வேறு என்ன செய்துவிட முடியும்?

செஸா: ஜோலா நாம் இதற்குள் சலித்துவிடக் கூடாது. நீ உள்ளே வந்தவுடன் வெளியே நடந்த

கொண்டாட்டங்கள் உனக்குத் தெரியாது. நான் வேண்டுமானுல் குனிகிறேன். நீ என் முதுகின் மேல் ஏறிச் சாளரத்தின் வழியாகக் கிழக்கே பார். இரா ணுவ முகாமில் பறக்கும் புதுக்கொடியை. நேற்று மாலை யூத எதிர்ப்பு சங்கத்தில் அனைவருக்கும் போதை விருந்து. அந்த போதையால் அரோரி பத்திரிகைக் கூடம் நாசமாக்கப்பட்டது. ஆசிரியன் பைரன் தண்டிக்கப்பட்டு அவனுக்கும் கடுங்காவல் தண்டனை. இந்தச் சிறைச்சாலைக்குத்தான் கொண்டு வரப்பட்டிருக்கின்றுன். நீ ஒரு பெரிய சட்டஞானியென உன்னை நம்பி, எதிர்நோக்கி யிருந்த அபாயங்களையெல்லாம் எண்ணிப் பார்க்கா மல் வெளியிட்டானே அவனுக்கு நீ உதவி செய்ய வேண்டாமா? நீ ஒருவன்தான் உண்மையான நீதி மானுக இருக்கின்றுய் என்று திடமாக நம்பி உன் னிடம் சகல ஆதாரங்களையும் தந்து உன் உதவிக் காகக் கையேந்தி நிற்கும் டிரைபஸ் குடும்பத்தாரை நீ காப்பாற்ற வேண்டாமா – எங்கேயோ ஒரு தீவில், யாரோ ஒருவன் இருக்கின்றுன், நமக்கென்ன அத ஞல் என்று அலட்சியமாக இராமல் நாட்டின் நலிவைப் போக்கி அந்த நிரபராதியை விடுவிக்க வேண்டுமென்றும், அல்லும் பகலும் வியர்வை சொட்டச் சொட்ட எழுதி எழுதிக் குவித்தாயே, அதை நாட்டார் மதிக்க நீதித்தாகம் கொண்டு நாடெல்லாம் சுற்றித் திரிந்தாயே, அந்த நீதி நிலை பெறவேண்டாமா?

"உண்மையாகவே டிரைபஸ் குற்றமற்றவனுயின் ஜோலாவின் எழுத்துக்கள் சாகா வரம் பெறுக" என்று வாழ்த்திய நல்லோர்கள் நாட்டில் நட

மாட வேண்டாமா? ஜோலா! என் அருமை நண்பனே! ஈடிணையற்ற எழுத்தாளனே! செஸானே உன்னிலும் அறிவுடையவனல்ல. எனினும் உன் நிழல் பட்டவன் என்பதையும், உன் வாழ்விலும் தாழ்விலும் உன் நிழல்போல் தொடர்ந்தவன் என் பதையும் மறந்துவிடாதே. வா, வெளியே. மீண்டும் விட்ட இடத்திலிருந்து தொடங்குவோம் போராட்டத்தை. நாட்டின் எல்லைக்கப்பாலிருந்து தொடங்குவோம்.

நம்முடைய நிழல் தண்ணீரில் படுவதால் உடல் நனைந்துவிடுவதில்லை. அதேபோல், பிறர் நம்மைக் கேலி செய்வார்களாயின் அவமானம் நமக்கல்ல. அறியாமையால் செய்துவிட்ட அடாத செயலுக்காக அவமானப்பட வேண்டியவர்கள் அவர்கள், நாமல்ல. நாம் சிறையில் வாடுவதால் டிரைபசுக்கு விடுதலைக் கிடைத்து விடுமாயின் நமது உயிரை இதோ, இந்தத் தாண்ட முடியாத சுவர்களுக்குப் பலியாக்குவோம். அந்த அறிகுறியும் காணேமே. ஆகவே நீதியை நிலைநாட்ட வெளியே வா. வீரர்களை எதிர்த்த பேனா வீரனே வா, வெளியே.''

## ஜோலாவைக் காணோம்

மாலை உணவைக் கொண்டுவந்து பார்க்கிறான் சிறைக் காவலன். ஜோலாவைக் காணோம். மேலதிகாரியிடம் தெரிவித்தான். பிரான்சு முழுவதும் தேடுகின்றார்கள். இராணுவ முகாமுக்குக் கலக்கத்தையும் சர்க்காருக்குத் திகிலையும் உண்டாக்கிவிட்டது. டிரைபஸ் சம்மந்தமாக ஏற்பட்ட அதிர்ச்சியைவிட இந்த சம்பவம் பெரிய பூகம்பத்தையுண்டாக்கிவிட்டது. எஸ்டரெஸி பற்களை

நற நற வெனக் கடிக்கின்றான். சிறையதிகாரிகளை பயமுறுத்துகிறான். குடியரசுத்தலைவரின் கண்கள் கோபத்தால் சிவந்துவிட்டன. இன்னும் என்னென்ன விபரீதங்கள் விளையுமோ என்று கைகளை முறித்துக்கொள் கின்றனர் நீதி மன்றத்தார்.

ஒரு சமயம் டிரைபஸை டெவில்ஸ் தீவில் இருந்து அப்புறப்படுத்துவதற்காக இப்படித் தப்பியோடி இருக் கின்றானோ என்று பயப்படுகின்றனர் அதிகாரிகள். அங்கே யும் ஓடிப்பார்க்கின்றனர். தன்னை விடுவிக்கத்தான் வரு கின்றார்களா என்று எழுந்து நடமாடுகின்றான் டிரைபஸ். டிரைபஸ் தவிர, ஒரு காவலன் தவிர வேறு யாரும் அங்கில்லை. பாரீசில் அவனுக்காக யாரோ வாதாடு கின்றார்கள் என்ற செய்தியே அவனுக்குத் தெரியாது. அப்படியிருந்தும் அவனுக்கு ஏதோ சிறிய நம்பிக்கைப் பிறந்தது. சென்றவர்கள் உடனே திரும்பிவிட்டார்கள். ஜோலா என்றொருவன் இங்கே வந்தானோ என்று கூடக் கேட்கவில்லை. ஜாடையாகப் பார்த்துக்கொண்டு திரும்பி விட்டார்கள். ஜோலா எங்கும் தேடியும் காணப்பட வில்லை. நாட்டின் துரதிருஷ்டம்தான். வெளியுலகி லிருந்து வெடிகுண்டு வெடிக்கப்போகின்றது. இன்னும் இரண்டோர் நாளில் தெரியும்.

எங்கு பார்த்தாலும் இதே பேச்சாக இருக்கிறது. யூத எதிர்ப்பு இயக்கத்தாரிடம் அவன் கிடைத்திருந்தால் துண்டுதுண்டாக வெட்டிப் புதைத்திருப்பார்கள். அவ் வளவு ஆத்திரம் கடல்போல் பொங்கி வழிகிறது.

## மீண்டுமோர் எச்சரிக்கை

பழி தீர்த்துவிட்டீர்கள். பாவச் சுமையைத் தலை மேல் ஏற்றிக்கொண்டீர்கள். இன்னமும் சொல்லு

கிறேன். "டிரைபஸ் குற்றமற்றவன்;" அழுத்தமாகச் சொல்லுகிறேன் டிரைபஸ் குற்றமற்றவன். எங்கோ இருந்து யாரோ சொல்கிறான் என்றெண்ணுகிறீர்கள். ஜோலா சொல்கிறான், குழிதோண்டிப் புதைக்க இருந்த நீதியைக் காப்பாற்றஇருந்த இந்த நாட்டின் விசுவாச மாக்க ஏழை ஜோலா சொல்கிறான், டிரைபஸ் குற்றமற்ற வன். எஸ்டரேஸி:- நயவஞ்சகா! நல்லவன்போல் நடித்து சட்டத்தைச் சரிப்படுத்திவிட்டு நீதியை உன் காலடியில் போட்டு மிதித்த துன்மார்க்கனே! நீதான் குற்றவாளி.

உன்னை நான் குற்றவாளி என்று சொன்னதற்கு ஆதாரக் கடிதங்களைக் காட்ட நான் தயாராயிருந்தும் அவைகளை வாங்கிப் படிக்கத் தைரியமில்லாமல், என் வழக்குக்கும் டிரைபஸ் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று மறுப்பிவிட்டார்கள். நான் அவைகளை எழுத நேர்ந்ததற்குக் காரணம் டிரைபஸின் பரிதாபத்துக்குரிய நிலைதான்.

டிரைபஸ் வழக்கிற்கும், என் வழக்கிற்கும் ஒரு தொடர்புமில்லையென்றால் நான் ஒன்று கேட்க விரும்பு கிறேன். எங்கேயோ ஜெர்மன் இராணுவ முகாமில் டிரைபஸ் எழுதியதாக யாரோ எழுதிய போர்ஜரிக் கடித மான போர்டோ என்ற கடிதத்துக்கும் டிரைபஸுக்கும் அல்லது இந்த நாட்டுக்கும் என்ன சம்மந்தம்? எப்படி போர்டோ என்ற கடிதத்துக்கும் பிரெஞ்சு இராணுவத் தலைவனுக்கும் சம்மந்தமுண்டு என்று இராணுவ நீதி மன்றத்தார் தீர்மானித்தார்களோ, அதேபோல் என் வழக்குக்கும் டிரைபஸ் வழக்குக்கும் தொடர்பு உண்டு என்று வாதாடினேன். வெறும் வாதம் மட்டிலுமல்ல, தக்க ஆதாரங்களோடு வாதாடினேன். பயந்துவிட்டார்

கள். ஏன் பயப்படவேண்டும். நியாயத்தைத் தேட வேண்டுமென்ற கவலை அவர்களுக்கு இருந்திருந்தால் அறவழி நின்று என் வேண்டுகோளைப் பரிசோதித்திருப்பார்கள். அதுவல்லவே அவர்கள் நோக்கம். எப்படியும் டிரைபஸைப் பழிதீர்ப்பதின்மூலம் யூதவகுப்பை ஒழித்துக் கட்டவேண்டுமென்ற ஒரே நோக்கத்தால் இருப்பவர்களுக்கு எப்படி இவைகளைப் பரிசீலிக்க மனம் வரும்.

பிரான்சு நாட்டு மக்கள் இதைக் கேட்க மறுத்தால் வெளிநாடுகள் கண்டிப்பாகக் கேட்டேதீரும். இவைகள் எல்லாம் எனக்கு எப்படித் தெரியும் என்று இன்னமும் யோசித்துக் கொண்டிருக்கின்றதுசர்க்கார். அதையும் கடைசியாகச் சொல்லி விடுகின்றேன். வஞ்சகன் எஸ்டரெஸியால் ஜெர்மன் இராணுவ முகாமுக்கு டிரைபஸ் போட்டதாகப் பொய்க்கையெழுத்திட்டு அனுப்பப்பட்டக் கடிதத்தைத் திரும்பிப் பெறலாம் என வாய்திறந்துகொண்டிருந்தான். ஆனால் அந்தத் திமிர் பிடித்த ஜெர்மன் இராணுவத் தலைவர்கள் அவைகளைக் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டுவிட்டார்கள். அதை (C.I.D.) சி.ஐ.டி. இலாகா செக்ஷன் **D. Statistics**-ல் வேலைபார்த்து வந்த மேடம் பாஸ்டியன் என்பவள் அந்தக் கடிதங்களைக் கண்டுபிடித்தாள். இந்தக் கடிதங்களையும், கடிதங்களின் உண்மையையும் என்னிடம்கூற வேண்டுமென்று கர்னல் பிக்காட் என்பவன் வந்தபோது என்னிடந்தான் அவன் வருகின்றான் என்று சந்தேகப் பட்ட எதிரிகள் அவனை வழிமறித்து மீண்டும் பட்டாளத்துக்கழைத்துக்கொண்டு போய், அவன் இங்கிருந்தால் ஆபத்தென்று கருதி, அவனைச் சில பட்டாளங்களோடு ஒரு அபாயமானப் போர்முனைக்கு அனுப்பி விட்டார்கள். ஆனால் அவன் வெகு சாமர்த்தியமாக

அந்தக் கடிதங்களை என்னிடமும், மேத்யூ டிரைபஸிட மும் தந்து நடந்த எல்லாவித ரகசியச்சதிகளையும் சொல்லிவிட்டுப் போயிருக்கின்றான். இவ்வளவும் நான் பகிரங்கமாக ஒளிமறைவில்லாமல் சொல்கின்றேன். இன்னமும் தாமதமேன்?

டிரைபஸின் சகோதரன் மேத்யூ டிரைபஸ் மறு விசாரணை வேண்டியபொழுது நீதி மன்றம் மறு விசா ரணைக்கு உத்திரவளிக்க மறுத்து அவன் விண்ணப்பத்தை நிராகரித்ததேன்? அதில் இருந்து ஒரு பெரிய உண்மை புலப்படும். அது ஒரு பெரிய அவமானமாகத் தெரியும் என்ற காரணத்தாலா? வேறு எதனால் என்பதை அவர் கள் சிந்திக்காவிட்டாலும்! பிரெஞ்சுத் தாயகத்தின் குடிகளாகிய நீங்கள் தீர யோசிக்கவேண்டும். இன்று டிரைபஸுக்கு நேர்ந்த கதி அல்லது எனக்கு நேர்ந்திருக் கிற கதி வேறு யாருக்குமே எப்போதுமே நேராது என் பதற்கு என்ன அத்தாட்சி?

இயேசு மகானை ஒரு யூதன் கொன்றான் என்றதற் காக யூத இனத்தையே நாம் கொன்று விடுவோமானால் நாம் உண்மையான கிருஸ்தவர்களா என்பதையும் சிலுவையில் மாண்ட கர்த்தனின் விசுவாசமுள்ளவர் களா என்பதையும் நாம் யோசிக்கவேண்டாமா? அன் பின் வழி நடந்து அறத்தை நிலைநாட்ட மரத்தில் மாண்ட இயேசுபிரானின் கொள்கைகளை நாம் கடைப் பிடிப்பது உண்மையானால் அன்பைத் தேடுங்கள். அறத்தை நிலைநாட்டுங்கள். பழி தீர்க்கும் பாவ உணர்ச் சியைக் கைவிடுங்கள்,

குற்றமற்றவன் தண்டிக்கப்படும் பொழுது நீதிமான் கள் வாளாயிருப்பது நாட்டுக்கே பெருங்கேடு. தீமைத்

தீபோல் பரவிவரும்போது தடுக்காமல் இருப்பது தகாத செயல். இந்த நிலையை இப்படியே வளரவிட்டால் நமது ஜென்ம பூமி கொடை சாய்ந்து குப்புற வீழ்வது திண்ணம் என்று உங்களுக்கு எச்சரிக்கை செய்கிறேன். மீண்டுமோர் புணர் விசாரணை வேண்டும். இப்படிக் கேட்பது ஒவ்வொரு உண்மையான குடியரசு வாதியின் கடமை என்று சுட்டிக் காட்டுகின்றேன். அவமதித்தால் அவலநிலை. மதித்தால் நாட்டுக்கு மகோன்னத நிலை என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இதைப் போன்ற பல அறிக்கைகள் பாரிஸ் 'நகரில் பறந்த வண்ணம் உள்ளன. ஓய்ந்தபாடில்லை. இயந்திர சக்கரம் மணலில் அகப்பட்டுக்கொண்டு கொஞ்சநேரம் கரகரவெனச் சுற்றுவதும், மறுபடியும் சமமான தரை கிடைக்கும்போது வேகமாய் ஓடுவதும் போல இந்தச் செய்தி சிறிது நாட்கள் சமமான நிலையடைவதும், சில நாட்கள் சிக்கலான மணலில் அகப்பட்டுக் கொண்டு கரகரவென சுற்றி அதன் பற்சக்கரங்கள் தேய்வதுமான நிலையையுண்டாக்கிக்கொண்டிருக்கின்றது.

## பொது மக்களின் கிளர்ச்சி

பொது மக்களுடைய எண்ணமே ஒரு அலாதியானது. எதிலும் விரைவில் ஒட்டிக்கொள்வதுமல்ல. எப்போதும் ஒட்டிக்கொள்ளாமலே ஒதுங்கிநிற்பதுமல்ல. பொதுமக்களை ஏதாவதொரு நல்வழிக்குத் திருப்ப வேண்டுமென்றால் இரண்டு வழிகளைப் பின்பற்றவேண்டியிருக்கிறது. ஒன்று :— அவர்கள் கொண்டிருக்கும் எண்ணத்துக்குச் சாதகமானவைகளையேச் சொல்லி, அவர்களை முழுதும் நம்பவைத்து, அந்த நம்பிக்கையின் பேரால் ஏற்படுகிற அஸ்திவாரத்தை வைத்துக்கொண்டு அதன்

மேல் நமக்கிஷ்டமான கட்டடத்தை எழுப்பிவிடுவது. மற்ெறான்று :— அவர்கள் எண்ணத்துக்கெதிராகவிடா மல் போராடி, அதனால் வரும் சகல விதமான துன்பங் களை ஏற்றுக்கொண்டு, அதனால் அவர்களுக்குப் பிறக்கும் அனுதாபத்தைச் சாதகமாகக் கொண்டு அவர்களை நம் முடைய வழிக்குத் திருப்பிவிடுவது. ஆக இந்த இரண்டு வழிகளில் ஜோலா பின்பற்றியது இரண்டாவது முறையைச் சேர்ந்தது. தொடக்க முதற்கொண்டு, நஞ்சாக்கப்பட்டிருந்த மக்கள் எண்ணத்திற்கெதிராகப் போராடி இறுதியில் தம் வழித்திருப்பினார். மக்கள் கூட்டம் கடல்போல் பொங்கி எழுந்தபோதும், இரா ணுவம் சீறியபோதும், நீதிமன்றம் கோபச்சிரிப்புச் சிரித்தபோதும், ஜூரர்கள் வஞ்சித்தபோதும், எதிரிகள் தன்னை இழிவாக நடத்துவதற்காகக் கூலிகளையும், காலிகளையும் ஏவியபோதும் சலிக்காது போராடியவன் ஜோலா. மேடு பள்ளங்களில் சென்றுகொண்டிருக்கின்ற வண்டி சரிவில் கட கடவென்று ஓடி, மறுபடியும் ஏற் றத்தில் போகிறபோது பின்னாலிருந்து தள்ளவேண்டிய நிலைக்கு வருவதைப்போல் டிரைபஸ் சம்மந்தமாக ஏற் பட்ட கிளர்ச்சி நாட்டில் சில நாட்கள் விறுவிறுப்பைத் தருவதும், மறுபடியும் நிதானமான நிலையடைவதுமான நிலை இருந்துகொண்டிருக்கிறது. அத்தகு நிலைக்குக் காரணம் பொதுமக்கள் இந்த வழக்கில் கவனம் செலுத் திய அளவு நேரடியாகக் கலந்துகொள்ளவில்லை. ஏனெ னில் இது அவ்வளவு சிக்கலாக இருந்தது. டிரைபஸ் செய்தது குற்றந்தான் என்று சட்ட ரீதியாக நீதிமன்றம் ஒரு பக்கம் தீர்ப்பளிக்கிறது. அரோரி, பிகாரோ பத்திரி கையில் கட்டுரை மூலம், டிரைபஸ் குற்றமற்றவன் என்று ஜோலா வாதாடுகிறான். எது உண்மை, எது பொய் என்றே பொதுமக்களால் விரைவில் புரிந்துகொள்ள

முடியவில்லை. பிரஸ்தாப வழக்கு நேரடியாக அந்தந்த நபர்களை மாத்திரம் சார்ந்ததா, அல்லது இந்த விஷயத்துக்குப் பின்னணியாக ஏதாவதொரு பயங்கர இயக்கம் உருவாய்க் கொண்டிருக்கின்றதா என்ற உண்மையைத் தெரிந்துகொள்ள முடியாமல் மக்கள் நெடுநாட்கள் திண்டாடினார்கள். ஆனால் இதுவரை எவ்வளவோ வழக்குகள் மின்னல் வேகத்தில் முடிக்கப்பட்டு, மூடப்பட்ட சவம்போல் போயிருக்கின்றது அப்படியிருக்க இந்த வழக்குமாத்திரம் இவ்வளவு பரபரப்பைஉண்டாக்குவானேன். இதுவும் புரியவில்லை மக்களுக்கு.

ஆனால் இதில் ஏதோ ஒரு முக்கியத்துவம் அடங்கி இருக்கின்றதென்பது மாத்திரம் உண்மை, என்ற முடிவுக்கு மக்கள் வர இவ்வளவு நாட்களாயிற்று.

டிரைபஸ் யார்? ஜோலா யார்? இந்தக் கேள்வி மக்கள் மனதைத் தூண்டியது. டிரைபஸ் ஒரு யூதன், ஜோலா யூதனல்ல. ஏன் அவனுக்காக இவன் முன்வந்தான்? இந்த நினைவு அடுத்தபடியாகவந்தது. டிரைபஸ் தண்டனை அடைந்த பிறகு அவனுக்காக வாதாட முன் வந்தானே, எதற்காக? சொந்த லாபமா? சுயநலமா பொதுநலமா என்றெல்லாம் சிந்திக்கத் தொடங்கினார்கள். ஜோலா ஒரு வழக்கறிஞன். ஆகையால் முன்னே வந்தானா. அப்படியும் இல்லை. ஜோலா வழக்கறிஞன் தான், சந்தேகமில்லை. அதற்காக ஜெயிக்க முடியாத வழக்கில் தலையிடுவானேன்? அதற்காகச் சில கட்டுரைகள் எழுதுவானேன்? சிறையிடுவானேன்? டிரைபஸ் குற்றமற்றவன் என்று வாதாடுவதற்குப் பதில், குற்ற முடையவன்தான் என்று சொல்லும் அந்தக் குறைமதியினருடன் சேர்ந்து கொண்டிருந்தால் கொள்ளை கொள்ளையாக பிராங்குகள் கிடைத்திருக்குமே. இது

ஒரு பக்கம் இருக்கட்டும், ஆசிரியன் பைரன் ஏன் இதில் அகப்பட்டுக்கொள்ளுகின்றான்: 'உன் கட்டுரைகளை வெளியிட முடியாது' என்று ஒரு வார்த்தை சொல்லி யிருந்தால், அவன் தலைபோய்விட்டிருக்குமா என்ன? "உங்களை எல்லாம் தாக்கிக் கட்டுரை கொண்டு வந் தான் ஜோலா. நான் போட மறுத்துவிட்டேன். இதோ பாருங்கள் அவன் எழுதியனுப்பிய கட்டுரைகளை", என்று இராணுவ நீதிமன்றத்தாருக்கும், குடியரசுத் தலை வருக்கும் ஜூரர்களுக்கும், இளைஞருக்கும் காட்டியிருந் தால் ஆசிரியர் பைரனுக்கும் கொள்ளை கொள்ளையாகப் பரிசுகள் கிடைத்திருக்குமே, ஏன் இது அவனுக்குத் தெரிந்திருந்தும் செய்யவில்லை. இவர்கள் சொல்வதில் ஏதோ ஒரு உண்மையிருக்கத்தான் வேண்டும். இல்லை யானால் இவ்வளவு விடாப்பிடியாக ஒரு நாட்டின் சட்ட வல்லமையை எதிர்த்துப் போராடுவார்களா?

போகட்டும் இதுவரை ஜோலா சுமத்திய குற்றச் சாட்டுகளுக்கு நியாயமான பதில்கொடுத்தா சர்க்கார்? இல்லை. சவால்விட்டான். ஏற்றுக்கொள்ளப் பயந்து அவனை வாயடைத்து சிறைச்சாலையிலே தள்ளிற்று. இது அடி முட்டாள்தனம். ஆதாரங்களைக் காட்டினான் ஜோலா. அந்தகாரம் ஆழ்ந்த அறையிலே தள்ளிற்று ஆணவ மிக்க சர்க்கார், அருவருக்கத் தக்க விஷயம். கொடுமை இழைத்துவிட்டது. கோவெனக் கதறுகிறான் டிரைபஸ் என்று கோபுரத்தின் உச்சியிலிருந்து உரைத் தான் ஜோலா. கருணைகாட்டவில்லை சர்க்கார். களங் கம் நிறைந்துவிட்டது நாட்டில். நாம் கண்மூடிக் கொண்டிருப்பதில் பயனில்லை. இப்படிப் பேசிற்று மக்கள் மன்றம்.

டிரைபஸ் டெவில்ஸ் தீவில் இருந்து கொண்டே பல மண்டலங்களின் மக்கள் அனுதாபத்தை உருவாக்கு கின்றான். ஜோலா சிறைச்சாலையிலிருந்து தப்பி வேறோர் இடத்தில் இருந்துகொண்டே நீதியை உருவாக்குகின்றான். பிரபல வழக்கறிஞர் லபோரி மேஜையிலமர்ந்து கொண்டு வாதத்தை உருவாக்குகின்றார். பெருமைக் குரிய இலக்கியாசிரியர் அனதோல் பிரான்சு நல்லதோர் மார்க்கத்தை உருவாக்கிக்கொண்டிருக்கின்றார், மக்கள் மன்றம் கிளர்ச்சியை உருவாக்கிக்கொண்டிருக்கின்றது. இவ்வளவு சக்திகளும் இரண்டோர் நாளில் ஒன்றாய்க் கூடிப் பிரெஞ்சு நாட்டின் வஞ்சனைக் கிடங்குக்குத் தீ வைக்கப்போகின்றன. அதற்கான சாயல் பல விடங்களில் தென்படுகின்றது. ஒற்றர்கள் மூலம் இதை அறிந்த எஸ்டரெஸி குலைநடுங்கிக்கொண்டிருக்கின்றான்.

## வாழ்க !

எந்த மக்கள் அன்று ' 'ஜோலா ஒழிக!' என்றார்களோ, அதே மக்கள் இன்று 'ஜோலா வாழ்க!' என்கின்றனர். எந்த சமூகம் அன்று 'டிரைபஸ் ஒழிக!' என்று கூச்சலிட்டதோ அதே சமூகம் இன்று, டிரைபஸ் வாழ்க!' என்றது. இந்த வாசகங்கள் பொருந்திய அட்டைகளை எடுத்துக்கொண்டு ஊர்வலம் ஒன்று கிளம்பிற்று. டிரைபஸை விடுதலை செய், ஜோலாவை நாட்டிற்குக் கொண்டுவா, வழக்கைத் தீர விசாரி, நீதிமன்றமே! நீதியை வழங்கு, மந்திரிசபையை மாற்று, இராணுவ நீதிமன்றத்தைக் ' 'கலைத்துவிடு ' எஸ்டரெஸியை வேலையிலிருந்து நீக்கு, ஆசிரியன் பைரனை, விடுதலை செய் என்ற கோஷங்கள் வான்முட்டப் புறப்பட்டுவிட்டது. மக்கள் கூட்டம் பாரிஸ் நகர முழுதும் சுற்றிற்று. குடியரசுத் தலைவரின் மாளிகை முன்பாக ஆர்ப்பாட்டம், ஜூரர்கள்

கள்? இல்லை. இல்லை. அவர்களை அப்படி வெறுக்க வைத்துவிட்டன ஜோலாவின் எழுத்துக்கள். அரசாங் கத்தையே மாற்றியமைத்துவிட்டன.

கிளிமான் ஸோ என்ற நிபுணரும் சிறந்த அரசியல் ஞானியுமான மேற்படியார்தான் பிரெஞ்சு தாயகத்தின் தனிப்பெரும் குடியரசுத் தலைவராகப் பதவி ஏற்கிறார், முதல் உலகப் பெரும் போரில் வர்சேல்ஸ் ஒப்பந்தத்தை எழுதிச் சண்டையிலீடுபட்ட நாடுகளைச் சமாதானப் படுத்தி, ரத்தஞ் சிந்தா உணர்ச்சியைத் தூண்டி வெற்றி கண்ட விவேகி கிளிமான் ஸோ என்பவர்தான் குடியரசுத் தலைவராகின்றார்.

இதற்குள் டிரைபஸுடைய டெவில்ஸ் தீவின் இருண்ட வாழ்க்கைச் சகடம் பதினேரு சுற்றுகள் சுற்றி வந்துவிட்டன. பதினேரு ஆண்டுகள் டெவில்ஸ் தீவில் வாடினன்.

மீண்டும் அவனுக்கு இராணுவத் தலைமைப் பதவி கூடத் தேவையில்லை. 'குற்றமற்றவன்' என்று சட்ட ரீதியாகச் சொல்லி, அடுத்த நாளே அவன் மடிந்து விடுவதானுலும் அதற்காக அவன் கவலைப்படவில்லை. எப்படியும் தன்மேல் ஏற்றப்பட்டிருக்கும் பெரும்பழி இறக்கப்படவேண்டும், துரோகிகளால் சுமத்தப்பட்ட துரோகச் செயல் விளக்கப்படவேண்டும், தன் தூய் மையை உலகறியவேண்டும், நீதி வெட்ட வெளியில் நடமாடவேண்டும், தான் பாரீஸ் நகரத்தின் அழகான தெருக்களில் அலைய நேர்ந்தாலும், அல்லது அந்த மாகடலின் சுருமீன்களுக்கு இரையாவதானுலும், துரோகி என்ற கெட்ட பெயரோடு சாகக்கூடாது, தூய்மையானவன் என்ற நற்பெயரோடு இறக்கவேண்டும்.

தனது தூய்மையான சேவையில் டிரைபஸ் தளராத நம்பிக்கைகொண்டான். என்றாவது ஒரு நாள் உண்மை நிச்சயமாக வெளிவந்தே தீரும், என்ற நம்பிக்கைக் கொண்டிருந்தான். எனினும் அந்த நம்பிக்கை தேய் பிறை போல் தேய்ந்துகொண்டே வந்துவிட்டது. ஏனெனில் பதினொரு ஆண்டுகள் கடந்துவிட்டன. இனி ஏது முடிவு? முடிவு தீவில் மடிவதுதான். இனிமேல் யார் இதற்காகப் போராட முன் வரப்போகின்றார்கள்? ஒரு வேளை மனைவியும் சகோதரனும் முன்வரலாம்.

பொய்யையே மெய்யாக்கிக் காட்டிய இந்தப் பொல்லாதவர்களுக்காகத் தன் குடும்பத்தாரின் முயற்சியையா மறைக்க முடியாது. இனி யாரும் தனக்காக வாதாட முடியாது. வழக்கறிஞர்கள் முன் வரமாட்டார்கள். இந்தப் பயங்கரமான கடலால் சூழப்பட்ட டெவில்ஸ் தீவு தவிர வேறு யாரும் துணையில்லை. தனது மரணக் குழிதான் பிறந்த தாயகத்திடம் இல்லை. இந்தத் தீவில்தான் யார் என்னைப்பற்றி எப்படிப் பேசினாலும் என்ன எழுதினாலும் நான் சாகும்போதும் 'குற்றமற்றவன்' என்று சொல்லிக்கொண்டுதான் சாவேன். இப்படி ஒவ்வொரு நாளும் பேசிக்கொண்டிருக்கின்றான் டிரைபஸ் அந்தப் படுபாதகத் தீவில்.

பாரிசில் குடியரசுத் தலைவராக கிளிமான் ஸோ தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார். அவர் பதவி ஏற்ற உடனே அதுவரை நாட்டை அலக்கழித்துக் கொண்டிருந்த, டிரைபஸ் வழக்கு, ஜோலாவின் கட்டுரைகள், மக்கள் கிளர்ச்சி ஆகியவைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய கட்டாயம் குடியரசுத் தலைவருக்கு வந்துவிட்டது. மேலும் டிரைபஸ் வழக்கில் உண்மை

பான தகவல்கள் கிடைக்க வேண்டுமென்றால் மந்திரி சபையை மாற்றியமைத்தாலன்றி முடியாது என்று தெரிந்துகொண்ட காரணத்தால், உடனே மந்திரி சபையை மாற்றியமைத்துவிட்டார். அடுத்து, அதே இராணுவ நீதிமன்றத்தை வைத்துக்கொண்டிருப்போமாயின், அவர்களுக்கிருக்கும் செல்வாக்கால், பிரஸ்தாப வழக்குக்குச் சம்மந்தப்பட்ட உண்மைகள் வெளி வராமலும் போகக்கூடுமென்று கருதி, அந்த முதல் இராணுவ நீதிமன்றத்தையும், இரண்டாவது இராணுவ நீதிமன்றத்தையும் மாற்றியமைத்துவிட்டார்.

## டிரைபஸ் வழக்குப் புனர்விசாரணை

இவருக்கு முன்பிருந்த குடியரசுத் தலைவரால் நிராகரிக்கப்பட்ட மேத்யூ டிரைபஸ் புனர் விசாரணை மனுவை மறுபடியும் அங்கீகரித்து, புதிய ஜுரர்களைத் தேர்ந்தெடுத்து வழக்கை மீண்டும் விசாரணை நடத்த ஏற்பாடு செய்தார்.

போதிய காலங் கொடுத்து பிரஸ்தாப வழக்கு சம்மந்தமாகக் கிடைத்த ரகசியத் தகவல்கள், கடிதங்கள் ஒற்றர்கள் சேகரித்து வைத்திருந்த உண்மைகள், ஜோலா வெளியிட்ட கருத்துக்களை ஏந்திவந்த அரோரி, பிகாரோ பத்திரிகை சேகரிப்புகள், இரகசிய ஒற்றர் இலாகாவில் வேலைபார்த்துவந்த பாஸ்டின் என்ற பெண்மணி கண்டுபிடித்த டிரைப்ஸ் போட்டதாகப் போர்ஜரி கையெழுத்திடப்பட்ட பொய்க் கடிதங்கள், எஸ்டரேசியின் வழக்கு விசாரணை ரிகார்டுகள், ஜோலா தண்டிக்கப்பட்டதற்குண்டான உண்மையும் நியாயமும் நிறைந்த காரணங்கள், டிரைபஸிடம் அனுதாபம் காட்டிய

யான தகவல்கள் கிடைக்க வேண்டுமென்ருல் மந்திரி சபையை மாற்றியமைத்தாலன்றி முடியாது என்று தெரிந்துகொண்ட காரணத்தால், உடனே மந்திரி சபையை மாற்றியமைத்துவிட்டார். அடுத்து, அதே இராணுவ நீதிமன்றத்தை வைத்துக்கொண்டிருப்போமாயின், அவர்களுக்கிருக்கும் செல்வாக்கால், பிரஸ்தாப வழக்குக்குச் சம்மந்தப்பட்ட உண்மைகள் வெளி வராமலும் போகக்கூடுமென்று கருதி, அந்த முதல் இராணுவ நீதிமன்றத்தையும், இரண்டாவது இராணுவ நீதிமன்றத்தையும் மாற்றியமைத்துவிட்டார்.

## டிரைபஸ் வழக்குப் புனர்விசாரணை

இவருக்கு முன்பிருந்த குடியரசுத் தலைவரால் நிராகரிக்கப்பட்ட மேத்யூ டிரைபஸ் புனர் விசாரணை மனுவை மறுபடியும் அங்கீகரித்து, புதிய ஜுரர்களைத் தேர்ந்தெடுத்து வழக்கை மீண்டும் விசாரணை நடத்த ஏற்பாடு செய்தார்.

போதிய காலங் கொடுத்து பிரஸ்தாப வழக்கு சம்மந்தமாகக் கிடைத்த ரகசியத் தகவல்கள், கடிதங்கள் ஒற்றர்கள் சேகரித்து வைத்திருந்த உண்மைகள், ஜோலா வெளியிட்ட கருத்துக்களை ஏந்திவந்த அரோரி, பிகாரோ பத்திரிகை சேகரிப்புகள், இரகசிய ஒற்றர் இலாகாவில் வேலைபார்த்துவந்த பாஸ்டின் என்ற பெண் மணி கண்டுபிடித்த டிரைபஸ் போட்டதாகப் போர்ஜரி கையெழுத்திடப்பட்ட பொய்க் கடிதங்கள், எஸ்டரேசியின் வழக்கு விசாரணை ரிகார்டுகள், ஜோலா தண்டிக்கப்பட்டதற்குண்டான உண்மையும் நியாயமும் நிறைந்த காரணங்கள், டிரைபஸிடம் அனுதாபம் காட்டிய

உயர்தர இராணுவத் தலைவன் திடீரென எங்கேயோ மாற்றப்பட்டதன் காரணங்கள், அவ்வளவும் பரிசீலிக் கப்பட்டன.

உண்மையான குற்றவாளி எஸ்டெரெஸி மறுபடியும் கூண்டில் நிறுத்தப்பட்டான். அவன் செய்யும் அக்ரமங் கள் எல்லாவற்றிலும் துணை நின்ற ஹென்றி தற்கொலை செய்து கொண்டான். விசாரணைகிடையிலேயே எஸ்டரெஸி நாட்டைவிட்டு ஓடிவிட்டான். பொய் வழக்கை ஜோடித்து நிரபராதி டிரைபஸ், தண்டனையடை வதற்குக் காரணமாயிருந்த இராணுவ வழக்கறிஞன் டார்ட் வேலையிலிருந்து நீக்கப்பட்டான். டிரைப்ஸ் குற்றமற்றவன் என்ற தீர்ப்பு 1906-ல் கிடைக்கிறது. நீதி வெளிவந்துவிட்டது. நெடுமூச்சு விடுகின்றனர் மக்கள்.

## இடையில்

எளியோர் வாழ்க்கையை எழுத்து மூலம் நாட்டுக்கு இடித்துக் கூறவேண்டுமென்று நினைத்த ஜோலா சுமார் 30 ஆண்டுகளில் இருபது நூல்களை வெளியிட்டார். வாழ்க்கைப் பகுதிகளைத் தனித் தனிக் கூறுக்கி ஒவ் வொரு பகுதிக்கும் தனித் தனி நூல் எழுதியிருக்கின்றார். பணத்துக்காகச் செய்யப்படும் மோசடிகளைப்பற்றி எழுதி யிருக்கின்றார். குடியைப்பற்றி எழுதியிருக்கின்றார். அது 1877-ல் வெளிவந்தது. 1830-ல் வாழ்க்கையில் வழுக்கி விழுந்த மங்கை, 'நானு' வைப்பற்றி எழுதியநூல் வெளி வந்தது. புகை வண்டிகளைப்பற்றி எழுதப்பட்ட நூல், "லாபெட்டே ஹுமன்னே" சுரங்கங்களின் இருண்ட வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டப்படுவதும், தொழிலாளிகள் துயரங்கள், அவர்களுடைய சிதைந்த

வாழ்வைச் சித்தரிப்பதுமான உண்மைகளை ஏந்தி வெளி வந்த நூல்; 'ஜெர்மினல்' முதலாளிகளின் மூர்க்கத் தனமான சுரண்டல் போக்கை வெட்டவெளிச்சமாக்கும் நூல் 'வார் ஜெந்த' உலக வரலாற்றில் எழுந்த முதல் தொழிலாளர் அரசாங்கம், உள்நாட்டு முதலாளிகளா லும், பிரஷியப் பிரபுக்களாலும் நெரிக்கப்பட்டுத், தொழிலாளரின் ரத்தமும் ஏழையின் கண்ணீரும் சிந்தப் பட்ட 1870-ம் ஆண்டைப்பற்றிய, 'வீழ்ச்சி', மனத்தின் மூடநம்பிக்கைகளைத் தயைத்தாட்சண்ணியமில்லாமல் கண்டித்து வெளிவந்த 'சாவார்ட்ஸ்' போன்ற பல நூல் களை வெளியிட்டார். கடைசியில் நீதி என்ற நூலை எழு திக்கொண்டிருக்கும்போது கணப்புக்காகப் போடப்பட் டிருந்த புகையால் இருமிக்கொண்டிருந்தார். நீதியை இன்னும் எழுதிமுடிக்கவில்லை. ஒருவனுக்கு நீதி தேடித் தந்த பேனு, உலகுக்கு நீதியைத் தேடித்தர பரப்பரப் பாக போய்க்கொண்டிருக்கின்றது. புகை கப்பிக்கொண் டது. இருமல்-தாள முடியவில்லை. இருதயம் பலருக் காக, ஒரு பராரிக்காக. பாரிஸ் நகருக்காக பிரெஞ்சு மண்ணுக்காக பரோபகார சிந்தைக்காக விடாமல் போராடிய இருதயம் ஓய்வெடுக்கப்போகிறது என்று யாருமே சந்தேகப்படவில்லை. மேஜையிலமர்ந்து எழு திக்கொண்டே இருந்தார். இருமினர், இருதயமும், யாருக்கும் அஞ்சாத பேனுவும், ஒன்ருக நின்றுவிட்டது. நாற்காலியில் இருந்தபடியே தலையைச் சாய்த்துவிட் டார். சாய இருந்த நாட்டைத் தன் தலை பலத்தால் காப்பாற்றிய தலைவன்.

செஸானே ஏதோ பேசுவதற்காக உள்ளே வந்த வன் தோழனின் மரணகோலத்தைக் கண்டான், மரம் போல் சாய்ந்தான். விழுந்த சத்தம் கேட்டு வேலைச்

காரி ஓடிவந்தாள். ஜோலா மாண்டுவிட்டார். செஸானே மாண்டவர்போலானார். சமாளித்து எழுந்து, இது எப்படி நடந்தது என்று வேலைக்காரியைச் செஸானே கேட்கின்றார். கணப்புப் போடும்படி சொன்னார். அதன்படி செய்தேன். அவ்வளவுதான். முடிந்தது ஜோலாவின் சகாப்தம் என்று சிலர் சொல்கின்றனர். இன்னும் முடியவில்லை என்கின்றன உலக நிகழ்ச்சிகள்.

## டிரைபஸ் விடுதலை

எங்கேயோ தூரத்தில் ஒரு கப்பல் தெரிகிறது. ஏதோ வியாபாரக் கப்பல் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றான். வரவரத் தான் இருக்கும் தீவுநோக்கி வருகிறது. பயப்படுகிறான் படைத் தலைவன் டிரைபஸ். இன்னும் என்ன தீங்குகளைச் செய்யவருகின்றார்களோ என்று அச்சத்தால் நிற்கிறான். ஒரு வேளை மரண தண்டனையளிக்க வருகின்றார்களோ, அப்படியானால் நான் விடுதலையடைந்தேன். இனி யாருக்காகச் சிந்தித்து என்ன பயன்? முடியட்டும் துக்கம் இன்றோடு தீர்ந்தது என்று தைரியம்கொள்கின்றான்.

கப்பலும் சமீபத்து வந்துவிட்டது. சிலர் இறங்கினார்கள். டிரைபஸ் எதிரில் நின்று வணக்கஞ் செய்தார்கள். தன்னைக் கேலி செய்கின்றார்கள் என்று முதலில் நினைத்தான். ஆனால் அதற்கான அறிகுறிகள் ஒன்றுமே அவர்கள் முகத்தில் காணப்படவில்லை. என்ன? என்று தலையால் கேட்டான்? 'விடுதலை' என்றனர், இவ்வுலகத்திலிருந்தா? என்றான், இல்லை இந்தப் பயங்கரத் தீவிலிருந்து, என்றனர். இதைவிட வேறோர் தீவைக் கண்டுபிடித்தாய்விட்டதா? என்றான் டிரைபஸ். இல்லை, தாயகம் திரும்பவேண்டும் என்றனர் வந்தவர்கள்.

'கொலைக்களத்துக்கா ?' என்றான். 'இல்லை, இராணுவ உடைதரிக்க' என்றனர், "உண்மையாகவா? அன்பர்களே! வெந்த என் உள்ளத்தை வேலால் குத்தாதீர்கள். நொந்துபோயிருக்கின்றேன். என் சிந்தையைக் கலக்காதீர்கள். இங்கேயேக் கிடந்துச்சாகிறேன். என்னை அழைக்காதீர்கள்", என்றழுதான். பாரீசில் என்ன நடந்தது என்பதை அறிய முடியாத பரிதாப பிம்பம். 'விடுதலை' என்றனர் வந்தவர்கள். 'எனக்கா விடுதலை' கரந்தபால் காம்புக்குள் புகுமா—விழுந்த கனி கிளையில் ஒட்டாதே. உதிர்ந்த மலர் செடியில் சேராதே. கடைந்த வெண்ணை மோரில் கலவாதே. அதேபோல் டிரைபசுக்கு விடுதலையிருக்காதே' 'இல்லை, நிச்சயமாக இதோ குடியரசு முத்திரையிட்ட ஆணை'

"எனக்கும் விடுதலையா? இந்த ஏழைக்கா? இந்த துர்ப்பாக்கியனுக்கா விடுதலை? பதினொரு ஆண்டுகள் இந்தப் பயங்கரத் தீவில்வாடியதால் வயோதிகத் தோற்றத்தை அடைந்திருக்கும் இந்த ஏழைக்கா விடுதலை? யாரப்பா எனக்காகப் போரிட்டவர்கள்? என்னை ஈன்ற என் தூயத்தாயகமே கேட்டதா? பெருமை பொருந்திய குடியரசுத் தலைவர் என்பால் கருணை காட்டினரா? சட்டங்கள் என்னைச் சரியாக அடையாளம் தெரிந்துகொண்டனவா? நீதிக்கு நான் நெருங்கிய நண்பனாய்விட்டேனா? யாரப்பா எனக்காகப் போராடியவர்கள்? என் மனைவியா? உடன் பிறந்தவனா? உற்ற நண்பர்களா? இராணுவ நீதிமன்றமா? யார் எனக்காக போரிட்டது? என்பால் இரக்கம் கொண்டவர்கள் இன்னும் உயிரோடு இருக்கின்றார்களா? நீதி நிலைபெற்றிருக்கும் வரை அவர்களும் சாகாவரம் பெற்றிருக்கின்றார்களா? யாரது, எனக்காகத் தன் உள்ளத்தைத் திறந்து அந்த பளிங்கு உள்ளத்தில் என் தூய்மையைக் காட்டிய அதிமேதை.

அப்படி ஒரு புண்ணியவான் இருக்கின்றன் என்ருல் எனது தாய் நாட்டின் அதிர்ஷ்டந்தான். ஒருவனுவது உத்தமன் இருக்கமாட்டானு என்று நான் பல முறை நினைத்ததுண்டு. அந்த உத்தமன் தான் எனக்காகப் போராட முன்வந்தான்போலிருக்கிறது.

'ஜோலா' என்றனர் வந்தவர்கள். "ஜோலா-உண்மைதான். ஜோலா என்ருல் உலகத்தின் ஆடை என்றல்லவா பொருள். முத்தை எடுக்கக் கடலில் குதிப்பதைப்போல், பொன்னை எடுக்க நிலத்தைத் தோண்டுவதைப் போல எனக்காக 'நீதியைத் தேட நெருப்பில் குதித்திருக்கின்ருன். என்னை இன்னுனென அறியாமலே எனக்காகப் போராட முன்வந்தான் என்ருல், எவ்வளவு தியாக சிந்தையப்பா அவனுக்கு? என்ன நெஞ்சுறுதி அந்த நீதிமானுக்கு?

ஜோலா ஒருவன் என் பொருட்டு வாதாட முன் வந்தான் என்ருல், அழுதுகொண்டே அம்புலிவேண்டுமென்று கேட்ட குழந்தைக்கு அந்த அம்புலியே கிடைத்துவிட்ட மாதிரிதான். அழுவது ஒன்று மறியாத குழந்தையாயிருந்தாலும் அம்புலி கிடைக்காதபொருள். ஆனுல் என் வகையில் ஒரு ஜோலா தோன்றினுன் என்ருல், அவன் எனக்காகவே இந்தப் பிரெஞ்சு நாட்டில் தோன்றியிருக்க வேண்டும். அப்பெருந்தகை வேறு நாட்டில் பிறந்திருந்தால் இந்தப் பேதைக்கு உய்வே இல்லாமல்போய்விட்டிருக்கும். எனக்கு வாழ்வளிக்க, என் மாசில்லாத குணத்தை வெளிப்படுத்த, கயவர்களின் குற்றத்தைக் களைந்தெறிய ஒரு ஜோலா தோன்றியிருக்கின்ருன். ஒருவித கைமாறும் கருதாமல் தான் முன்வந்திருக்கக் கூடும். ஏனெனில் ஒவ்வொரு நாளும் செத்துக்கொண்டே இருக்கும் எனக்காகப் பதினேரு

ஆண்டுகள் விடாமல் போரிட்டு இப்பேதைக்கு உயி ரளிக்க முன்வந்தான் என்றால் அவ்வுத்தமன்தான் என் வழிகாட்டி. அவனைக் காண நான் எவ்வளவு பாக்கியம் செய்திருக்க வேண்டும்? வருங் காலத்தில் ஜோலா யார் என்று யாராவது வெளிநாட்டார் கேட்டால், அவன் என் தாயகத்தான், எனது மண்ணின் செல்வன், என் உடன் பிறந்தான் என்று சொல்ல வாய்ப்புத் தேடித் தந்து, இடிந்துவிட்ட எனக்கு மீண்டும் நல்லதோர் வாழ் வையும் தேடித் தந்த ஜோலா.

எனக்காகப் போரா்டினான். போராடினான் என்றால் உலகத்தையே எதிர்த்துப் போராடினான் என்றல்லவா பொருள். பலம் பொருந்திய இராணுவத் தலைவனாகிய என்னாலேயே முடியவில்லையே? எப்படி ஒரு சாதாரண ஜோலா போராடினான்? கேட்கக் கேட்க ஆச்சரியமா கத்தான் இருக்கிறது. உம். ஏன் இவ்வளவு அவசரம்? எப்படியும் அந்த ஏந்தலைப் பார்க்கத்தான் போகிறோம்''. என்று இப்படி எல்லாம் சொல்லிச் சொல்லிக் குதூ கலிக்கின்றான். உடனிருந்தவர்கள் உண்மையைச் சொல்லவில்லை. ஒரு சமயம் ஜோலாவின் முடிவைப் பற்றிச் சொன்னால் இந்த நேரத்தில் இவனுக்குப் பைத் தியம் பிடித்தாலும் பிடித்துவிடும் என்று வாளாவிருந்து விட்டனர்.

கப்பல் கரை சேர்வதற்கு முன்பே கடற்கரையில் லட்சக்கணக்கான மக்கள் மலர் மாலைகளோடு காத்துக் கிடக்கின்றனர். கப்பலும் கரை சேர்ந்தது. நீண்ட தாடி வளர்ந்து, கோடுகள் விழுந்த நெற்றி, சுருங்கிய கன்னங்கள், கருகருத்த முகம், தள்ளாடிய நடை யோடு கீழே இறங்கினான் டிரைபஸ். இவனா அந்தக் கம்பீர நடை நடந்த டிரைபஸ், கடல் காற்று இவனைக்

கருவாடாக்கிவிட்டது. ரத்தம் சுண்டிவிட்டது. எப்படியோ உயிரை மட்டிலும் தாங்கி மேதை ஜோலாவின் உதவியால் விடுதலைபெற்றுவிட்டான். பாவம்! ஒருவித குற்றமும் செய்யாதவனை வீணுக வாட்டி வதைத்துவிட்டனர். எனினும் உயிரோடு காண்கிறோம். மனைவி சேர்த்து அணைத்துக் கொண்டாள். உடன் பிறந்தானும் அதையே செய்தான். சுற்றத்தார், உறவினர் கண்களில் புதிய ஒளி தோன்றிற்று. உலகத்தையே கலக்கக் காரணமான டிரைபஸ் விடுதலை பெற்றுவிட்டான் என்று ஊரெல்லாம் பேசினுர்கள்.

## அடுத்த நாள்

மீண்டும் அதே இராணுவத் தலைமைப்பதவியை அளிக்கவேண்டுமென்று குடியரசுத்தலைவரை முதல் நீதிபதியாகப் பெற்ற பாரிஸ் உயர்நீதிமன்றம் அளித்திருக்கும் தீர்ப்பின்படி, எந்த மைதானத்தில் பதிஞேரு ஆண்டுகளுக்கு முன்பு தன் இராணுவ உடையைக் கழற்றிக் கைதியின் உடுப்புகளை மாட்டினுர்களோ அதே மைதானத்தில் மீண்டும் இராணுவ உடைகளைத் தரிக்கின்றுன். அன்று அவன் வாளை இரண்டு துண்டுகளாக உடைத்தார்கள். இன்று அதைவிடச்சிறந்த உடைவாளைப் பெறுகின்றுன்.

டிரைபஸ் விடுதலை பெற்றதை அறிய இராணுவ வீரர்கள் பாரீஸ்நகர முழுவதிலும் பவனி வருகின்றுர்கள். தலைவன் டிரைபஸ் நன்றுக அலங்கரிக்கப்பட்ட குதிரை மேல் ஏறிப் படைகள் புடைசூழப் பல பிரபல தெருக்களின் வழியாகப் பவனிவருகின்றுன். நம்பமுடியாத அதிசயம் ஒன்று நாட்டில் நடப்பதை எண்ணி நாட்டிலுள்ளோர் நகைமுகம் கொண்டார்கள். டிரைபஸ்

டெவில்ஸ் தீவுக்கு அன்று கொண்டுபோகப்படும்போது கண்ட எல்லோருமே-இன்று ஒருசிலர் தவிர மற்றவர்கள் அனைவருமே டிரைபஸைக் கண்டார்கள். அன்று இவனைக் கைதிக் கோலத்தில் பார்க்காத ஒருவன் இன்றும் காணவில்லை. அன்று இவனைப் பார்க்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. இன்று இவனைப் பார்க்க முடியவில்லை. அவன்தான் ஜோலா — உண்மையின் தந்தை—பொதுவாக இவனை அவன் கண்டதேயில்லை. விடுதலை பெற்றுவிட்டான். உண்மைதான் எனினும் துர்பாக்கியந்தான் இவன். ஏனெனில், "ஜோலாவைக் கண்ணால் காணக்கொடுத்துவைக்காதவன்" என்கின்றனர் மக்கள். வாத்திய கோஷங்களுக்கிடையே இந்த முழக்கம் வான் பறவையின் முழக்கமாயிற்று. இந்த இடி முழக்கத்தைக் கேட்ட நாகம்போல் நடுங்கிவிட்டது எதிர்ப்புச் சக்திகள். ஊர்வலத்தைத் துரிதமாக நடத்தக் கட்டளையிடுகின்றான். தன் மாளிகைக்குச் சென்றவுடன் மனைவியிடம் கொஞ்சுவதல்ல, இவனுக்கிருந்த அலுவல். தன்னை விடுவித்த தனிப்பெருந்தலைவன் ஜோலாவைக் காணவேண்டும். நெஞ்சுருகி நீர்மல்க வேண்டும். தனக்காக அவன் பட்ட கஷ்டங்களுக்கு மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவேண்டும். அத்தகு மேதை தன் வாழ்வின் அழியாத முத்திரையாகி விட்டதற்காக நன்றி செலுத்த வேண்டும். அந்தப் பேரறிஞனுடைய வாழ்வில் எவ்வளவு இடுக்கண்கள் இருந்தாலும் ஒரு நொடியில் களைந்தெறிய வேண்டும். எப்படி இருப்பாரோ? என்ன உருவமோ? குணத்தில் அணையா விளக்கு. அது மாத்திரம் உறுதி. ஆனால் தோற்றத்தில் எப்படி இருப்பாரோ? ஒவ்வொரு வினாடியும் ஒரு யுகமாகக் கழிகின்றது. தன் மனவேகத்தையும் கடந்துசென்று மாளிகையையடைந்து போர் வீரர்களுக்கு வணக்கஞ்

சொல்லிப் புறப்பட்டார் தன் இராணுவ உடைகளைக் களைந்தெறிந்துவிட்டு. எங்கே? என்ருள் மனைவி. ஏன் இவ்வளவு பரபரப்பு? என்ருன் சகோதரன் மேத்யூ. "என் அண்ணல் ஜோலாவைக் காண" என்ருன் டிரைபஸ். 'ஜோலாவையா?'—என்று இழுத்தனர். கவனிக்கவில்லை. அந்தச் சமயம் அவனுக்கிருந்த ஆசையில், 'ஜோலா இறந்துவிட்டார்' என்று சொல்லியிருந்தால், டிரைபஸின் இருதயம் வெடித்திருக்கும். ஒன்றும் பேசாமல் புறப்பட்டார்கள். இராணுவ வீரனல்லவா? வேகமாக நடக்கின்ருன். ஜோலாவின் வீட்டையடைந்தான். வீட்டிலிருந்த ஜோலாவின் பணியாள் அரசாங்க மரியாதைக்குரிய தலைவர்களை அடக்கம் செய்யும் இடத்தைக் காட்டினுன். சந்தேகப்படவில்லை, டிரைபஸ் ஓடினுன். இவர்களும் ஓடுகிருர்கள். கட்டிடத்தின் உள்ளே நுழைந்து இப்படியும் அப்படியும் பார்க்கின்ருன். கட்டிடத்தின் ஒரு பகுதியில் அழகான இடத்தில் ஒரு சமாதி. சுற்றிலும், பேராசிரியர்கள், இலக்கியக் கர்த்தாக்கள், சட்ட நிபுணர்கள், சமர்க்களத்தலைவர்கள் முழங்காலிட்டுத் தலையைத் தாழ்த்திய வண்ணம் இருக்கின்றனர். சமாதியின் மேலே மலர் வளையங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. எங்கும் நிசப்தம் பரவி இருக்கிறது. சுற்றுமுற்றும் பார்த்து விழிக்கின்ருன் டிரைபஸ். கல்லறைக்கருகில் போ எனச் சைகை செய்கின்ருள் மனைவி. பூட்சுகளின் ஓசை கேட்காமல் மெதுவாக நடக்க ஆரம்பித்தான். யாரோ பேசும் சத்தம் கேட்கிறது. ஜோலாவா? என்ருன். இல்லை என்று தலையாட்டினுள் மேடம்.

## கல்லறை

ஜோலாவின் கல்லறைக்கருகில் சிறந்த இலக்கியக் கர்த்தா அனதோல் பிரான்சு உணர்ச்சிமிக்க சொற்பொழிவாற்றிக்கொண்டிருக்கின்ருர்.

"நீதி, உண்மை இவைகளைத் தவிர்த்து, வேறெதுவும் அமைதியை வழங்காது. பாவம்! இந்தக் கல்லறையில் தூங்கும் ஜோலாவின் வாழ்நாளெல்லாம் அமைதியில்லாமலே முடிந்து விட்டன. ஆனால், ஜோலா உலக உணர்வின் தொடக்கத்தைக் குறிப்பவர்.

இலக்கியத்தில் ஜோலா தன்னுடைய ஏடுகளின் அளவினால் மதிப்பெய்தவில்லை. எளிய நடையில், ஒளி விட்ட கருத்துக்களுக்காக ஏழை எளியோரைப்பற்றித் தீட்டிய கருத்தோவியங்களுக்காக, மூடத்தனம், வெளிவேடம், அநீதி, சுரண்டல் முறை, ஆணவ வெறி, குறுகிய மனப்பான்மை, போர், பேராசை, ஒடுக்கப்பட்ட மனிதப் பிராணிகளின் புலம்பல் இவைகளைப்பற்றி எழுதியதற்காகமட்டுமல்ல, சமயம் நேர்ந்தபொழுதெல்லாம் தனது தள்ளாத வயதில் பலமிக்க இராணுவம், அதிகாரமுள்ள அரசாங்கம் அனைத்தையும் எதிர்த்துத் தனியனாக நாட்டையும் வீட்டையும் விட்டோடி அஞ்சாது போராடியதற்காக ஜோலா உலக வரலாற்றிலே இடம் பெற்றுவிட்டார்.

பிரெஞ்சு நாட்டுக்கு ஒருவன் தன் உழைப்பைப் பல வகையில் செலுத்தலாம். ஒருவன் வாளேந்தியோ, பேனாவைப் பிடித்தோ, தன் கடமையை நிறைவேற்றலாம். "என்பங்கில் எமிலி ஜோலா என்ற பெயரை வருங் காலத்துக்கு வழங்குகின்றேன். அது இரண்டிலொன்றை அடைவதாக," என்று கூறினார். வருங்காலம் பின் சந்ததி எல்லாம் ஜோலாவைத் தேர்ந்தெடுத்துள்ளது.

ஜோலா ஓய்வேயறியாத உழைப்பாளி. அவனுடைய வாழ்வு, ஏற்றத்தாழ்வுகளும் ஏமாற்றங்களும் நிறைந்ததாயிருந்தது. குறிப்பாகப் பிரெஞ்சு இலக்கிய மன்றம் அவரை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்க மறுத்தது.

ஆனல் அவர் பிரெஞ்சு மொழி இலக்கிய ஆசிரியஞக மாத்திரமல்ல, அகில உலக இலக்கியத்தில் உயர்ந்த இடத்தை ஜோலா அடைந்து விட்டார். அந்த மாவீரன், சிறந்த இலக்கிய ஞானி, ஏழைகளின் நண்பன் எமிலி ஜோலாவின் காலடிகள் பிரெஞ்சு நாட்டின் களங்கத்தைப் போக்குமாக'' என்று சொல்லி முடித்தார். அதற்குள் வந்து விட்டனர், டிரைபஸ், மேடம் டிரைபஸ், மேத்யூ டிரைபஸ் மூவரும். ஜோலாவை உயிரோடு காணமுடியவில்லை. கல்லறையைக் கண்டான். கண்ணீர் சிந்திஞன் டிரைபஸ். அவன் கருத்தைக் கண்டான். கண்களைக் குளமாக்கிக் கொண்டான். அவனுடைய கையெழுத்தைக் கண்டான். கண்களில் ஒத்திக்கொண்டான். பிறந்த சேயைத் தாய் தழுவுவதைப் போல் மார்புறத் தழுவிக்கொண்டான்.

''பிரிந்த என் கணவனைப் பெற்றுத் தந்த பெருந்தகையே! பிரிந்துவிட்டாயா,'' எனப் பெருமூச்சு விட்டாள் மேடம் டிரைபஸ். விம்மிஞள், நெஞ்சடைத்து விட்டது. வார்த்தைகள் வெளிவர வழிவிடவில்லை துக்கம். நெடுமரம்போல் நின்று விட்டான் டிரைபஸ்.

''சிங்கத்தின் வாயிலகப்பட்ட என் காதலனுக்காகப் போராடி அவனை உயிரோடு மீட்டு எனக்களித்த உத்தமனே! உன் உயிரும் போய்விட்டதா? டிரைபஸின் உயிருக்காக உங்கள் உயிரைத் தானமாக்கி விட்டீரே'' எனக் குழந்தைபோல் அழுதாள். என் கொழுநன் உயிருக்காக ஓயாது உழைத்துழைத்து உயிர் நீத்த என் பிதாவே! நீதித்தந்தையே! நிகரற்ற பேறு வீரனே! இதோ என் காதலன்! தன்னேரில்லாத வாள் வீரன்! தரணியைக் காத்த படைத் தலைவன்! உங்கள் பேராற்றலால் கரை சேர்க்கப்பட்ட அறைதை! உங்கள் அடிமை!

என் ஆருயிர் நண்பன் உங்கள் பேனுவால் காப்பாற்றப் பட்ட பேதை! உங்கள் மையால் அபிஷேகம் செய்யப் பட்ட மாசில்லாத வீரன் டிரைபஸ் வந்திருக்கின்றுன்.

உங்கள் புனித வாயால் எவனைக் குற்றமற்றவன் என்று இந்த குவலயமறியச் சொன்னீர்களோ, அந்தக் குற்றமற்றவன் வந்திருக்கின்றுன். வாயால் வாழ்த்துங் கள். தாயகத்தின் மானத்தைக் காப்பாற்றிய தனிப் பெருந் தலைவனே! தரணி உன் எழுத்தைப் புகழ்கிறது. தைரியத்தை மெச்சுகிறது. விடா முயற்சியைப் போற்று கிறது. நீர் என் கண்ணீரை மதித்து எனக்களித்த பிச்சை இந்த டிரைபஸ். காலம் என் காதலனை என்னிடமிருந்து பிரித்துவிட்டது. கர்ம வீரனுகிய தாங்கள் கடுமையான போரிட்டு என் கணவனைப் பெற்றுத் தந்தீர்கள். கைம் மாறு ஒன்றும் கருதாத கருணை வள்ளலே! நீங்கள் அவன் முகத்தைப் பார்க்காமலே அவனுக்காகப் போரா டினீர். இன்று அவன் உடல் மெலிந்திருக்கின்றுன். எனினும் அவன் மாசற்ற முகத்தைப் பாருங்கள். நாங்கள் எவ்வளவு கண்ணீர் சிந்தினுலும் நீங்கள் சிந் திய மைக்கு ஈடாகாதே!

ஒரு குற்றமற்றவனுக்காகச் சிறையில் வாடினீர். சிறைக்கம்பிகளை உடைத்தெறிந்தும் என் தலைவனுக் காகப் போராடினீர். வருங் காலம் எத்தனை நூற்றுண்டு களுக்குப் பின் ஒரு ஜோலாவைக் காணப்போகிறது?

சிறகடித்தோடும் காலத்தைக் கூண்டிலடைத்து கூண்டிலடைக்கப்பட்டிருந்த என் கணவனை மீட்டுத் தந்தீர். பிரெஞ்சு தாயகமே! எங்கள் வருங்கால வாழ்வு மலராமல் போனுலும் போகட்டும். மாசற்றவன் என் தலைவன் என இந்த மன்பதைக்குக் காட்டிய ஜோலா ஒருவனைப் பெற்றெடுத்த நீ உன்னை அறியாமல்

எவ்வளவோ தவறுகளைச் செய்திருக்கிருய். எனினும் ஒரு ஜோலாவை ஈன்றெடுத்ததின் மூலம் உன் பாபங்களெல்லாம் துடைக்கப்பட்டுப் புனிதமடைந்துவிட்டாய். வஞ்சனைக் குளத்தில் நீந்தத்தெரியாமல் திணறிக் கொண்டிருந்த ஒரு நிர்ப்பாக்கியனுக்கு நீதி ஓடத்தையளித்து அவனை உன் சேயென மதித்தாய். இது ஒன்றே போதும். என் கணவன் குற்றமற்றவன் என்று நான் சொன்னேன். நான் குற்றமற்றவன் என்று டிரைபஸ் சொன்னுன். டிரைபஸ் குற்றமற்றவன் என்று ஜோலா சொன்னுன். ஜோலா குற்றமற்றவன் என்று நீ சொல்ல இவ்வளவு நாள்பிடித்தது. எனினும் என் கணவன் குற்றமற்றவன் என்று சொன்ன ஜோலாவால் நீ குற்றமற்றவன் என்று நிருபிக்கப்பட்டிருக்கிருய்.

டிரைபஸ் ஒருவனுல் நீதி பெருமையடைகிறது ஜோலா ஒருவனுல் நீதி, நேர்மை, நாடு எல்லாம் பெருமையடைகிறது. அந்தப்புனிதவானின் கல்லறை மேல் புகழெனும் பூக்கள் பூத்துக் குலுங்குவதாக, என்றும் ...ம் கண்ணீரால் அவனைக் கழுவினர்.

"வாழ்க ஜோலாவின் பேரு"

(முற்றிற்று.)

★